கல்கி

KALKI 14-3-1976 ▪ 75 காசு

அமெரிக்கச் சிறப்பிதழ்




சத்துமிகுந்த, சுவையான
பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள்
B
R
I
T
A
N
N
I
A
Glaxo
BISCUITS
BRITANNIA
Glaxo
BISCUITS
ISI
வளரும் குழந்தைகளுக்கு
சுவையான துணை
பிரிட்டானியா
பிஸ்கட்டுகள் மிகச் சிறந்தவை
பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள் அருமையான தனிச் சுவையோடு மேம்பட்டு விளங்குவது ஏன்? சத்துச் செறிந்த ஆரோக்கியமான குணச்சிறப்பே காரணம். ஆசையோடு குழந்தைகள் அவற்றை விரும்பிச் சுவைத்து வளருகின்றனர்! பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள்— வளரும் குழந்தைகளுக்குச் சுவையான துணை.
ஷின்டாஸ்-BBC.GLX 6-140 TM



கல்கி

ராக்ஷஸ
பங்குனி 1
மார்ச் 14
1976

அமெரிக்கச் சிறப்பிதழ்

'பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பார்கள்.

'தோட்டத்து மலர்களில் மாதிரிக்கு ஓர் இதழ்' என்று கூறி இந்த வாரக் கல்கியை நேயர்களிடம் சமர்ப்பிக்கிறோம்.

இந்தச் சிறப்பிதழ் உங்களுக்குப் பிடித்திருந்தால் அமெரிக்கப் பூங்காவில் பூத்துக் குலுங்கும் ஆயிரக் கணக்கான மணம் மிக்க வண்ண மலர்களுள் ஒன்றின், ஓர் இதழ் மட்டுமே இது என்பதை நினைவில் வையுங்கள். அதிலிருந்து பூங்கா எத்தனை சிறப்புடையதாக இருக்கும் என்பதை நீங்கள் ஊகிக்கலாம்.

இந்த இதழின் தயாரிப்பில் சென்னை, அமெரிக்கத் தகவல் நிலையம் நாங்கள் விரும்பிய அளவில் மட்டுமே ஒத்துழைத்தது.

— ஆசிரியர்

நன்றி.



ஹேலோ ஷாம்பூகள்-உங்கள் கேசத்தின் பராமரிப்பிற்கெனவே...



உங்கள் கேசம் கட்டுக்கோப்புடன் வளமோங்கித் திகழவே, உபயோகிப்பீர் புரதம் நிறைந்த ஹேலோ எக் ஷாம்பூ

விசேஷ போஷாக்கு மிக்க ஹேலோ எக் ஷாம்பூவின் வளமிக்க முட்டைப் புரதத்தின் பயனாக, உங்கள் தலையின் மேல் தசைகளும், கேசமும் வலுப்பெறுகின்றன. கேசம் இயற்கைப் பளபளப்புடன் வளமோங்கித் திகழ்கிறது.

HSR.G.3 TH

இயற்கை ஆரோக்கியத்துடன் கூடிய கேசத்திற்கு —ஹேலோ கேசப் பராமரிப்பு!

ஹேலோ காஸ்மெடிக் ஷாம்பூ: இந்த விசேஷ உத்தியின்படி தயாரிக்கப்பட்ட ஷாம்பூவை உபயோகித்து, உங்கள் கேசம் எவ்வளவு மெத்தென்றும், மிருதுவாகவும் இருக்கக் கூடும் என்பதைக் கண்டு கொள்ளுங்கள்.

ஹேலோ லெமன்ஃப்ரெஷ் ஷாம்பூ: உங்கள் கேசத்திற்கு இயற்கையான, தூய்மையான பளபளப்பைத் தருகிறது.

ஹேலோ கான்ஸென்ட்ரேட் ஷாம்பூ: ஏராளமான நுரைவளத்தின் மூலம் உங்கள் கேசத்தை மென்மையாகவும், கட்டுக்கடங்கியும் வைத்திருக்க சிறிதளவே போதும்.



ஹேலோ ஷாம்பூகள் மட்டுமே சீரான, சிறந்த உத்தியின்படி தயாரிக்கப்படுகின்றன.

சுதந்திரம் – உயிர்மூச்சு!

அமெரிக்கா என்றதுமே இன்று அனைவருக்கும் நினைவு வருவது—வாட்டர் கேட், அதைவிட்டால் வியட்நாம். இன்னும் சமீபத்தில் வந்தால் லாக் ஹீட் ஊழல், ஸி.ஐ.ஏ. வேலைகள், கென்னடியின் அந்தரங்க வாழ்க்கை!

இந்த நினைவுகளோடு நில்லாது இவற்றின் தொடர்பாக நாம் சிந்திக்கவும் வேண்டும்.

இவற்றையெல்லாம் விடத் தரக்குறைவான காரியங்கள் வேறு நாடுகளில் நடக்கலாம்; இவற்றை விடப்பெருந் தவறான முடிவுகளை வேறு பல அரசாங்கங்கள் எடுக்கலாம். ஆனால் இவற்றையெல்லாம் ஆராய்ந்து கண்டறிந்து, காரசாரமான விவாதங்கள் அமெரிக்காவில் நிகழ்கின்றனவே, அதுபோல் வேறு எந்த நாட்டிலும் நடக்கமுடியாது!

பத்திரிகைகள், புத்தகங்கள், நீதிமன்றங்கள், நாடாளு மன்றங்கள் எல்லாம் இந்த விமர்சனங்களில் ஈடுபட்டு வருகின்றன. சாமானிய மக்களும் விவாதித்துக் கண்டிக்கிறார்கள்.

இதுதான் அமெரிக்காவின் வெற்றி ரகசியம். தங்களைத் தாங்களே விமர்சித்துக் கொள்ளத் தயங்காதவர்கள் அமெரிக்கர்கள். சுதந்திரம், எதிலும் சுதந்திரம். சிந்தனை சுதந்திரம், செயல் சுதந்திரம், செய்ததை விமர்சிக்கச் சுதந்திரம்.

அளவுக்கு மீறிய சுதந்திரங்களால் சில விபரீதங்களும் நிகழ்கின்றன. ஆபாசம் மலிகிறது. ஒழுக்கம் கெடுகிறது. பெரியோரிடம் பயபக்தி, இறையுணர்வு, குடும்பப் பற்று முதலியவை குறைகின்றன. வன்முறை வளர்கிறது. கவலையோடு அணுகித் தீர்க்க வேண்டிய பிரச்னைகள்தாம்.

ஆனால் பூரண சுதந்திரங்களால் விளையும் நன்மைகளுடன் ஒப்பு நோக்குகையில் பொறுப்பற்ற சிலர் சுதந்திரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதால் ஏற்படும் தீமைகள் மிகக் குறைவு.

இது சம்பந்தமாக ஓர் அமெரிக்க வழக்கறிஞர் கூறியது ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது. நீக்ரோக்களுக்குச் சம உரிமை என்ற போராட்டம் உச்ச கட்டத்தை அடைந்திருந்த காலம். வன்முறையினால் தான் சம உரிமைகள் பெற முடியும் என்று சில நீக்ரோக்கள் தீவிரமாக நம்பிய நேரம். ''இவர்களை ஏன் அரசாங்கம் வெளியே விட்டு வைக்கிறது? வளைத்து உள்ளே தள்ள வேண்டியதுதானே? சட்டம் இதற்கு இடம் தரவில்லையெனில் அதை மாற்ற வேண்டியதுதானே?'' என்று அந்த வழக்கறிஞரைக் கேட்ட போது அவர் கூறினார்:

''அமெரிக்கர்கள் பூரண சுதந்திரத்தின் உடன் விளைவான சில தீமைகளைப் பொறுத்துக் கொள்வார்களே யன்றி அந்தச் சுதந்திரங்களைக் கட்டுப்படுத்த அனுமதிக்க மாட்டார்கள்!''

கட்டுப்பாடுகளுக்குள்ளாகாத சுதந்திரம்தான் மனிதன் சந்திரனை வெல்ல வழி வகுத்தது. ஆம்ஸ்ட்ராங் நிலாத் தரையில் காலடி வைத்தது அமெரிக்க ஜனாதிபதியின் உத்தரவால் அல்ல. ஆயிரமாயிரம் விஞ்ஞானிகளின் சுதந்திரச் சிந்தனைகள், ஆயிரமாயிரம் பொறி இயல் நிபுணர்களின் சுதந்திரச் செயலார்வம், ஆயிரமாயிரம் தொழிலதிபர்களின் சுதந்திர நிர்வாகம், லட்சோபலட்சம் மக்களின் சுதந்திர முதலீடு ஆகியவைதாம் அதைச் சாதித்தன.

வீராணத்திலிருந்து சென்னைக்கு நீர் கொண்டு வருவதற்குள் நமக்கு ஆயிரம் பிரச்னைகள். அங்கோ, அராபிய எண்ணெய் விலை உயர்ந்த பிறகு அலாஸ்காவிலிருந்து குழாய் அமைத்து எண்ணெய் கொண்டு வந்து விட்டார்கள். சுதந்திரப் பொருளாதாரத்தின் கீழ் பொறியியல் துறையில் நடந்துள்ள இமாலய சாதனை.

இதற்கெல்லாம் அடிக்கல் நாட்டிய பெரியோர்களின் பெயர்களை நினைவு கூர்தல் நமக்கு நல்லது. வாஷிங்டன், லிங்கன், ஜெபர்சன், பெய்ன், ஆடம்ஸ், ஃபிராங்க்ளின் முதலியோர்.

அடிப்படைச் சுதந்திரங்கள், நீதி, சமத்துவம், தெய்வ பக்தி, மனிதனின் இயற்கையான நற்பண்பில் நம்பிக்கை ஆகிய ஐந்தையும் அமெரிக்க ஜனநாயகத்தின் ஐந்து தூண்களாக்கினார்கள் அவர்கள். ''ஒரு நாட்டின் செல்வம் மட்டுமல்ல, அதன் சுதந்திரமும் பாதுகாப்

கல்கி

மலர் 35

இதழ் 33

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்

பும் கூட உற்பத்தியாளரின் சுபிட்சத்துடன் இணைந்திருக்கிறது'' என்றார் ஹாமில்டன்.

''பூரண சுதந்திரம் பிரஜா உரிமையின் ஆரோக்கியத்துக்கும் சக்திக்கும் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு வர்த்தகத்தின் ஆரோக்கியத்துக்கும் சக்திக்கும் கூட அவசியமே'' என்றார் ஹென்றி.

''இடுதிப்பென்று பலாத்காரமாகச் சுதந்திரங்களைப் பறிப்பதை விட, அதிகாரத்தில் உள்ளவர்கள் ஓசைப்படாமல் படிப்படியாக மக்களின் அடிப்படை சுதந்திரங்களைக் குறைக்கும் சந்தர்ப்பங்கள் மிகுதி'' என்றார் மாடிசன்.

இப்பேர்ப்பட்ட அறிஞர்களின் பட்டியலில் இடம் பெற அமெரிக்கா ஐன்ஸ்டைன் முதல் கொராறு வரை மேலும் பல அறிஞர்களைக் கைநீட்டி வரவேற்றது; அமெரிக்காவில் வெற்றித்திருமகள் உலா வருகிறாள் என்றால் அதற்கு முதல் காரணம் சுதந்திர உணர்வு; இரண்டாவது, அறிஞரைப் போற்றும் பண்பு.

அமெரிக்க அறிஞர்களின் வரிசையில் சிறப்பிடம் பெறும் தோரோ, எமர்சன் போன்றவர்களின் எழுத்தால் காந்திஜி கவரப்பட்டு இங்கு அஹிம்சைப் போராட்டத்துக்கு வழி வகுத்ததும் பின்னர் காந்திஜி நடத்திய அறப் போரின் வெற்றி கண்டு மார்டின் லூதர் கிங் நீக்ரோக்களுக்குச் சம உரிமைகள் பெற அதே வழியை அங்கு கையாண்டதும் இரு நாடுகளுக்கும் உள்ள தொடர்புகளை நினைவூட்டுபவை.

நமது சுதந்திரப் போராட்ட காலத்திலேயே ரூஸ்வெல்ட் நமக்கு வெளிப்படையாக ஆதரவு காட்டி சர்ச்சிலுக்கு எழுதினார். அந்த நட்புறவு என்றும் நீடிக்கும். இப்போதும், அரசியல் ரீதியில் சில கருத்து வேறுபாடுகள் இருப்பினும் கூட, பல்வேறு வகைகளில் நமக்கு உதவும் நாடுகளில் முதலிடம் பெறுவது அமெரிக்காதான்.

பி. எல். 480 திட்டத்தின் கீழ் இங்கே குன்று குன்றுகக் குவிந்த தானியங்களுக்கு ஏற்ப மலையாகக் குவிந்து விட்ட ரூபாய்க் கடனைத் திருப்பித் தர வேண்டாம் என்று கூறி விட்ட பெருந்தன்மை நம்பால் அந்த நாட்டுக்குள்ள நல்லெண்ணத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு. இதையும் இன்னும் பட்டியல் போட்டு மாளாத வேறு பல உதவிகளையும் நன்றியுடன் நினைவுகூர்ந்து சுதந்திரப் பிரகடனத்தின் இருநூறாவது ஆண்டைக் கொண்டாடி மகிழும் அமெரிக்க மக்களுக்கு நமது இதயபூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வோம்.

ராஜாஜி சிந்தனை

தீமையை எதிர்க்காதே!

உண்மையானது வெவ்வேறு விஷயங்களுக்கு வெவ்வேறு விதமாக இருக்கும் என்று எண்ண வேண்டாம். அது அணுவிலும் சூரியனிலும் ஒரே மாதிரிதான். ''தீமையை எதிர்க்காதே'', என்பது கிறிஸ்தவ வேத நூலிலுள்ள ஒரு வாக்கியம். அதுதான் டால்ஸ்டாய் உள்பட சகல சத்தியாகிரகிகளுக்கும் மூல மந்திரமாகும்.

கிறிஸ்துவும் டால்ஸ்டாயும் கூறுவதற்கும் மகாத்மாஜி கூறுவதற்கும் வேறுபாடு உண்டு என்று சிலர் எண்ணுகிறார்கள். மகாத்மாஜி தீமையை எதிர்க்கும்படி கூறுகிறார் அல்லவா என்று கேட்கிறார்கள். ஆனால் உண்மையில் யாதொரு வேறுபாடும் கிடையாது. எதிர்த்தல் என்ற மொழியின் பொருளை நாம் நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். ''தீமையை எதிர்க்காதே'' என்று சொல்லும் பொழுது அதன் பொருள், தீமை செய்தவனுக்குத் தீமை செய்யாதே என்பதேயாகும். இந்தப் பொருளை உணர்ந்தால் கிறிஸ்துவின் போதனைக்கும் மகாத்மாஜியின் போதனைக்கும் வேறுபாடு இல்லை என்பதை அறியலாம். தீமையால் தீமையை எதிர்க்காமல் தீமையை நன்மையால் எதிர்க்க வேண்டும் என்பதே அதன் பொருள்.

— **ராஜாஜி மணிவாசகம்**

NP சூயிங் கம்கள், பபுள் கம்கள்

படைப்பதிலே முன்னோடிகள்



காலம் எப்படித்தான் பறந்தோடுகிறது. சூயிங் கம்களையும் பபுள் கம்களையும் நாங்கள் தயாரிக்கத் தொடங்கி 35 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. தொடங்கியபோது நாங்கள் தன்னந்தனி—காரணம், இத்-துறையிலேமுதன் முதலில் இறங்கினோம்—முன்னோடியாக. துள்ளியாடிய நேற்றையக் கன்றுகள் ஓங்கி வளர்ந்துள்ளனர் இன்று. அவர்கள் நாவிலே விளையாடிய சுவை, இன்று அவர்களின் குழந்தைகளின் நாவிலே விளையாடுகிறது: NP சூயிங் கம்களின், பபுள் கம்களின் சுவை. படைத்த எங்கள் உள்ளம் பரவசம் அடைகிறது. மென்று மகிழும் இன்பத்தை 35 ஆண்டுகளுக்கு மேலாகப் பல நூறாயிரம் நாவுகளிலே ஊறவைத்த பூரிப்பு இது. இந்த 35 ஆண்டுகளிலே நாங்களும் வளர்ந்துள்ளோம்—தரத்திலே, அனுபவத்திலே, பல ரகங்களைப் படைப்பதிலே—தலைமை பெற்றுள்ளோம். இன்று எங்கள் இனிப்புக்களின் வரிசை மிகப் பெரிது.

க்ராக்கீஸ் சூயிங் கம்கள்	— பெப்பர்மிண்ட், அன்னாசி, ஆரஞ்சு, டூட்டி ஃப்ரூட்டி, சபாரி சுவையான வகைகள்.
பபுள் கம்கள்	— டபுள் பபுள் கம், 007 பபுள் கம் மற்றும் உருண்டை வடிவ பால் கம்கள் பரவசமூட்டும் பழச் சுவைகளிலே.
பான்பைட்	— இணையில்லாச் சுவையுள்ள க்ரீம் மிட்டாய்கள்.

NP—ஒன்றுதான் ISI தர முத்திரை பதிந்த சூயிங் கம்கள், பபுள் கம்கள்.

IS:6747

ISI



சுவைத்து மகிழ ருசிமிக்க வகைகள்

தி நேஷனல் ப்ராடக்ட்ஸ், பெங்களூர்.

Dattaram NP-31 TAMIL

வேதமதத்தின் விசேஷ அம்சங்கள் (5)

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

ஹிந்து மதஸ்தர்கள் ரொம்பவும் பெருமைப்பட வேண்டிய அம்சம், இந்த மதம் ஒன்றுதான் தன்னை அநுசரிப்பதன் மூலமே ஒரு ஜீவன் உய்வு பெற முடியும் என்று தனி உரிமை (exclusive rights) கொண்டாடிக் கொள்ளாமல் இருப்பதேயாகும். யார் யார் எந்தெந்த சமய மார்க்கத்தில் போனாலும் கடைசியில் ஒரே பரமாத்மாவிடம் வந்து சேருவார்கள் என்பதை ஒப்புக் கொள்கிற விசால மனப்பான்மை (catholic outlook) நம் சாஸ்திரங்களிலேயே காணப்படுகிறது. வேதம், பகவத்கீதை இரண்டிலுமே இவ்விஷயத்தைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. இதனால்தான் பிறரை ஹிந்துவாக மத மாற்றம் (conversion) செய்ய நம் சாஸ்திரங்கள் இடம் கொடுக்கவில்லை. மதமாற்றம் செய்கிற (Proselyrising) மதங்களில் எல்லாம் ஞான ஸ்நானம் baptism மாதிரி இதற்கென்று ஒரு சடங்கு இருந்தே தீரும். ஆனால் ஏகப்பட்ட சடங்குகளையும், ஸம்ஸ்காரங்களையும் சொல்கிற நம் வைதிக மதத்திலோ இப்படிப்பட்ட சடங்கு எதுவுமே இல்லை. இதுவே நம் மதம் 'கன்வெர்ஷ'னுக்கு இடம் தரவில்லை என்பதற்கு நிரூபணம்.

இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களைப் பின்பற்றாதவர்கள் எல்லாரும் நரகத்துக்குத்தான் போவார்கள்; முகமது நபியின் உபதேசத்தை அநுசரிக்காதவர்களுக்குக் கதிமோக்ஷம் கிடையாது என்றெல்லாம்தான் அந்தந்த மதஸ்தர்கள் சொல்கிறார்கள். அவர்களிடம் நாம் கோபப்படக் கூடாது. அவர்கள் வாஸ்தவமாகவே அப்படி நினைக்கலாம். அந்தந்த மதத்தில் இருப்பதால் தங்களுக்குக் கிடைத்திருக்கிற நிறைவைப் பார்த்து, மற்றவர்களுக்கு இத்தனை நிறைவு இருக்க முடியாது என்று நினைத்து, நல்லெண்ணத்தின் பேரிலேயே மற்றவர்களையும் தங்கள் வழிக்கு மாற்ற ஆசைப்படுகிறார்கள் என்றே வைத்துக் கொள்ளலாம். வெளிப் பார்வைக்குக் கெடுதலாகத் தோன்றுகிற வழிகளைக் கடைப்பிடித்தாவது ஒரு நல்ல லட்சியத்தைச் சாதிக்கலாம் என்று நினைத்தே அவர்கள் படையெடுத்து, சண்டை போட்டு, வாள் மூலம்கூட மதமாற்றத்தைச் செய்தார்கள் என்று வைத்துக் கொள்ளலாம். இஸ்லாம் பெரும்பாலும் ஆயுத பலத்தாலேயே விஸ்தரிக்கப்பட்டது; முஸ்லிம்கள் Jehad என்ற பெயரில் மதப் போர்கள் புரிந்தார்கள். கிறிஸ்தவ மதம் பண பலத்தால் விசேஷமாக விஸ்தரிக்கப்பட்டது. பாலைவனமான அராபிய தேசத்தைச் சேர்ந்த முஸ்லிம்களுக்கு இல்லாத பண வசதி வெள்ளைக்காரர்களுக்கு இருந்தது. கிறிஸ்தவ மிஷனரிகள் பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி என்றெல்லாம் வைத்து ஏழை எளியவர்களை அழைத்து அப்படியே அவர்களைத் தங்கள் மதத்தில் தள்ளிக் கொண்டார்கள். ஹிந்து மடாதிபதி என்பதால் நானாக இப்படிச் சொல்லவில்லை. பெரிய பெரிய சரித்திர அறிஞர்களே சான்றுகளோடு (evidence) சொல்வதைத்தான் திருப்பிச் சொல்கிறேன்.

பலவந்தத்தையோ அல்லது உதவியைக் காட்டி வசியப்படுத்துவதையோ நாம் ஏற்





தாழ்வுற்று வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டுக் கிடந்த நீக்ரோ சமூகம் அணு அணுவாகப் போரிட்டு இன்று நிற பேத ஒழிப்பை அமெரிக்காவில் கண்டிருக்கிறது. அஹிம்ஸை வழியில் காந்திஜியைப் போல் மார்ட்டின் லூதர் கிங் இந்தச் சமூகத்தின் சார்பாக அறப் போர் புரிந்தார். அடிமைத் தளை ஒழிந்தால் போதாது; சகலத்திலும் சம உரிமைகள் வேண்டும் என்பதே அவர்கள் போராட்டம். அவர்கள் பெற்று வரும் வெற்றிகள் எவ்வளவு மகத்தானவை என்பதைப் பின்வரும் செய்திகள் விளக்கும்:

☐ நீக்ரோக்களின் வாழ்வில் ஒரு திருப்புமுனை 1954 மே 17ந் தேதி. கல்வி இலாக்காவுக்கும் பிரௌனுக்கும் நடந்த வழக்கில் உயர் நீதி மன்றம், அமெரிக்கப் பொதுப் பள்ளிகளில் நிறபேதம் காட்டி ஒதுக்குவது சட்ட விரோதமானது என்று தீர்ப்பளித்தது.

☐ மார்ட்டின் லூதர் கிங்குக்கு (படம்) 35 வயதிலேயே 1964ல் நோபின் சமாதானப் பரிசு கிடைத்தது. நீக்ரோ சமூகத்தின் பிரதிநிதிக்குக் கிடைத்த இணையற்ற கௌரவம்.

☐ ராபர்ட் வீவர் என்ற நீக்ரோ, ஜனாதிபதி அமைச்சரவையில் 1966 ஜனவரி 13ந் தேதி வீட்டு வசதி, நகர்ப்புற முன்னேற்ற இலாகாவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

☐ உயர் நீதி மன்றத்தில் தர்குட் மார்ஷல் என்ற நீக்ரோ முதல் தடவையாகப் பணி புரிய நியமிக்கப்பட்டார்.

☐ நியூயார்க் ராஜ்யத்தில் முதல் தடவையாக ஒரு கல்லூரியின் தலைமைப் பொறுப்பு வகிக்கும் கௌரவம் டாக்டர் ஆலன் காலிஸ்டனுக்குக் கிடைத்தது.

☐ 1962ல் லெப்டினண்ட் கமாண்டர் சாமுவேல் எல். கிராவ்லி அமெரிக்கப் போர்ப் படைக் கப்பலுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பை ஏற்றார்.

☐ அமெரிக்க ராணுவத்தில் பெஞ்சமின் ஓ டேவிஸ் என்ற நீக்ரோ, பிரிகேடியர் ஜெனரல் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

☐ வெள்ளை மாளிகையில் நீக்ரோ இனரொருக்கு ராணுவ உதவியாளர் பதவி கிடைத்தது. அந்தப் பதவியை லெப்டினண்ட் கமாண்டர் பெஞ்சமின் வாலஸ் பெற்றார்.

☐ நீக்ரோ தலைவர் புக்கர் டி. வாஷிங்டன் நினைவாகத் தபால் தலையும், 50 செண்ட் நாணயமும் வெளியிடப்பட்டுள்ளன.

××

காமல் இருக்கலாம். ஆனால் தங்கள் மதத்தைப் பரப்பினால் எல்லோருக்கும் க்ஷேமம் உண்டாகும் என்று அவர்கள் நிஜமாகவே நம்பியிருப்பார்கள் என்பதை நாம் சந்தேகிக்க வேண்டாம்.

ஆனால் அவர்களுடைய நம்பிக்கை சரிதானா? கிறிஸ்துவை, நபியைப் பின்பற்றாவிட்டால் நரகம்தானா? கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் இந்தத் தனிப் பாத்தியதை (exclusive right) செல்லுபடியாகாது என்று தெரிகிறது. ஏனென்றால் கிறிஸ்து வந்து இரண்டாயிரம் வருஷங்கள்தான் ஆகிறது. நபி பிறந்து ஆயிரத்து நானூறு வருஷங்கள்தான் ஆகிறது. அதற்குமுன் ஆயிரம், பதினாயிரம், லட்சம் வருஷங்களாகப் பிறந்து செத்துப் போனவர்கள் எல்லாரும் என்ன ஆனார்கள்? இவர்களுடைய சித்தாந்தப்படி அவர்கள் கிறிஸ்து அல்லது நபியைத் தங்கள் ரக்ஷகராகக் (Saviour) கொள்ளாததால் சிருஷ்டி தோன்றிய நாளிலிருந்து அன்று வரை வந்தவர்கள் எல்லாம் நரகத்துக்குத்தான் போய் இருக்க வேண்டும். இப்போது இந்த மதங்களில் இருக்கிறவர்களின் முன்னோர்கள் — இவர்களுடைய மத ஸ்தாபகர்களின் முன்னோர்கள்கூடத்தான் — ஸ்வர்க்கம் போயிருக்க முடியாது. இவர்கள் ஹிந்துக்களைப் போலப் பல ஜன்மங்கள் உண்டு என்பதையும் ஒப்புக் கொள்ளவில்லை. அப்படி ஒப்புக் கொண்டாலாவது கிறிஸ்துவுக்கும் நபிக்கும் முற்பட்டவர்கள் மறுபடியும் மறுபடியும் பிறக்கிற போது, இந்த இரண்டு பேருக்குப் பிற்பாடும் ஜன்மா எடுத்து, இவர்களை அநுசரிக்கிற வாய்ப்பு (chance) பெற்று, கதி மோட்சம் அடைய வழி இருக்கிறது என்று சமாதானம் சொல்லலாம். ஆனால் இந்த மதங்களிலோ ஜீவனுக்கு ஒரே ஜன்மாதான் என்று சொல்லியிருக்கிறது. ஆதலினால், எத்தனையோ ஆயிரம் பல்லாயிரம் தலைமுறைகளாகத் தோன்றிய அத்தனை ஜனங்களும் கூண்டோடு நரகத்துக்குத் தான் நிரந்தர வாசமாகப் போயிருக்க வேண்டும் என்றாகிறது. தான் சிருஷ்டித்த ஜனங்களுக்கு லக்ஷோப லக்ஷம் வருஷங்கள் வழிகாட்டுகிற ஆசாரியர்களையே அனுப்பி வைக்காமல் அவர்களை மீளா நரகத்தில் போடுபவனாக ஒரு கடவுள் இருக்கிறான் என்றால் அப்படிப்பட்ட இரக்கமே இல்லாத கடவுளை எதற்காக ஆராதிக்க வேண்டும், எதற்காக அவனை அடைய வேண்டும்? அதாவது கடவுளை அடைவதற்காக ஏற்பட்ட மதமே வேண்டாம் என்று சொல்லிவிடலாம்.

(தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

டாக்டர்கள் கூறுகிறார்கள், 3 மாதங்கள் ஆனவுடன் உங்கள் குழந்தைக்குப் பால் மட்டும் போதாது. சீரான வளர்ச்சி பெற உங்கள் குழந்தைக்குத் தேவை ஒரு திட உணவு— பாரெக்ஸ்.



இதோ, வளரும் உங்கள் குழந்தைக்கு பாரெக்ஸ் வழங்கும் நன்மைகள் :

- [illegible]
- [illegible]
- [illegible]
- [illegible]

வளர்ந்துவரும் உங்கள் குழந்தைக்குத் தேவையான பாரெக்ஸ் அளவு

உங்கள் குழந்தையின் வயது	பாரெக்ஸ் அளவு
3–6 மாதங்கள்	1–2 தேக்கரண்டி–தினசரி இருமுறை
6–9 மாதங்கள்	3–4 தேக்கரண்டி–தினசரி மும்முறை
9 மாதங்கள்–3 வயது	4–6 தேக்கரண்டி–தினசரி நான்குமுறை.

பாரெக்ஸ்

[illegible]



[illegible]

கிளாக்ஸோ

CMGF-47 203. TM

வாடகைக்கு ஓர் அறை...

ஓ. ஹென்றி

தமிழாக்கம்: கி. ராஜேந்திரன்

நாடக அரங்குகள் மிகுந்த நகரின் மேற்குப் பகுதி. சிவப்புக் கட்டிடங்கள் நிறையக் கொண்டது. இங்குள்ள ஜனத்தொகையின் பெரும் பகுதியினர் நிம்மதியற்றவர்களாய், அடிக்கடி இடம் பெயர்பவர்களாய் மேம்போக்கான வாழ்க்கை நடத்துபவர்களாய் இருக்கிறார்கள். அவர்களுக்கென்று இல்லங்கள் கிடையாது. ஆனால் குடியிருக்க நூற்றுக்கணக்கான வீடுகள் உண்டு. கட்டில், மேஜை, நாற்காலி முதலியவற்றை உள்ளடக்கிய அறைகள் பல வாடகைக்குக் கிடைக்கும். நிலையாக ஓர் இடத்தில் தங்காமல் அறைக்கு அறை இவர்கள் மாறிக் கொண்டே இருப்பார்கள். அலைகிற உடல், அலைபாயும் உள்ளம். ''ஹோம் ஸ்வீட் ஹோம்'' என்று நீக்ரோக்களின் பாடல்களை இவர்களும் பாடுவார்கள். பாடுவதோடு சரி.

ஆகவே நகரின் இந்தப் பகுதியிலுள்ள வீடுகள் ஆயிரக் கணக்கான வாடகையாளர்களைக் கண்டிருக்கிறது. அவர்களது ஆயிரக் கணக்கான கதைகளை அவற்றால் கூற முடியும். பெரும்பாலானவை உப்புச் சப்பற்றதாக இருக்கும் என்றாலும் இப்படிப் பிசாசு போல் அலைகிற மக்களிடையே ஓரிரு நிஜப் பேய்களை நாம் காண முடியாது போனால் அது அதிசயம்தான்.

ஒரு நாள் மாலை இருட்டியபிறகு ஓர் இளைஞன் இந்தப் பகுதியில் இடிபாடடைந்து கொண்டிருக்கும் சிவப்புக் கட்டிடங்களினூடே நடமாடிக் கொண்டிருந்தான். அவற்றில் ஒன்றின் வாசல் பக்க மணியை அடிப்பான். வெளியே வருபவரிடம் பேசிவிட்டு அடுத்ததற்குப் போவான். பன்னிரண்டாவது கட்டிடத்தில் தன் சிறிய பெட்டியைப் படி மீது வைத்து விட்டுத் தொப்பியிலிருந்தும் நெற்றியிலிருந்தும் தூசியைத் துடைத்தான் அவன். எங்கோ வெகு தொலைவில் ஆழத்தில் வெற்றிடமான இடத்தில் மணி அடிப்பது போல் தோன்றியது.

அவன் மணியடித்த இந்தப் பன்னிரண்டாவது கட்டிடத்தின் வாசலுக்கு வீட்டுக் காப்பாளினியான மாது வந்தாள். வேர்க் கடலையின் உட்புறமுள்ள பருப்பைத் தின்று முடித்த பிறகு அந்தப் புறக் கூட்டினுள் குடியிருக்க, தின்பதற்குரிய புதிய வாடகையாளரை வரவேற்கும் பருத்த புழுவாக அவள் அவனுக்குத் தோன்றினாள்.

''வாடகைக்கு அறை இருக்கிறதா?'' என்று அவன் கேட்டான்.

''உள்ளே வா'' என்றாள் வீட்டுக் காப்பாளினி. அவள் குரல் தொண்டையிலிருந்து ஒலித்தது. அந்தத் தொண்டை வெல்வெட்டினால் ஆனது போல் தொனித்தது. ''மூன்றாவது மாடியின் பிற்பகுதி ஒரு வாரமாகக் காலி. பார்க்கிறாயா?''

இளைஞன் அவளைப் பின்தொடர்ந்து மாடி ஏறிப் போனான். எங்கிருந்தோ வந்த மங்கலான ஒளி கூடங்களின் நிழல்களை மிகைப்படுத்திக் காட்டியது. மாடிப் படிகளில் விரித்திருந்த ஜமுக்காளத்தை உருவாக்கிய தறிக்கே இன்று அதனை அடையாளம் கண்டு கொள்ள முடியாது. அதன் மீது அவர்கள் ஓசையின்றி நடந்தார்கள். காற்றோட்டமோ சூரிய வெளிச்சமோ இல்லாத அந்த இடத்தில் ஜமுக்காளம் ஆங்காங்கே செழித்துப் படர்ந்திருந்த பாசி போல் தோன்றியது. படிகளின் ஒவ்வொரு திருப்பத்திலும் சுவரில் காலியான பிறைகள் இருந்தன. ஒரு காலத்தில் அவற்றில் செடிச் சட்டிகள் இருந்திருக்கலாம். இந்தக் கறை படிந்த நாற்றம் அடிக்கும் சூழலில் அவை மடிந்து போயிருக்கும்.

''இதுதான் அறை'' என்று வீட்டுக் காப்பாளினியான அவள் சொன்னாள். ''நல்ல அறை. அபூர்வமாகத்தான் காலியாகும். போன வருஷம் கோடையில் உன்னத நிலையிலிருக்கும் சிலர் இதில் குடியிருந்தார்கள். எனக்குச் சிரமமே தரவில்லை. வாடகையை முன்பணமாகவே கொடுத்தார்கள். கூடத்தின் அந்த மூலையில் தண்ணீர்க் குழாய் இருக்கிறது. ஸ்ப்ரௌல்ஸும் மூனியும் இதில் மூன்று மாதங்கள் வாழ்ந்தனர். மிஸ் ப்ரெட்டா ஸ்ப்ரௌல்ஸ் — கேள்விப்பட்டிருப்பாயே! நாடக உலகில் மட்டும்தான் அந்தப் பெயர். இங்கே அவர்களுடைய திருமணச் சான்றிதழ் சட்டம் போட்டு மாட்டியிருந்தது. இதோ 'காஸ்' விளக்கு. துணி மணிகளை வைக்க அலமாரி. இந்த அறையை விரும்பாதவர்களே கிடையாது. காலியாக இருப்பதே அபூர்வம்.''

''நாடக உலகைச் சேர்ந்த ரொம்பப் பேர் தங்குகிறார்களா இங்கே?''


''வருகிறார்கள்; போகிறார்கள். இங்கு வாடகை கொடுத்துவிட்டு இருப்பவர்களில் பெரும்பாலோர் நாடக உலகுடன் தொடர்பு கொண்டவர்கள்தாம். அவர்கள் ஓரிடத்திலும் நிலைத்துத் தங்குவதில்லை. வருகிறார்கள், போகிறார்கள். வாடகையில் என் பங்கு எனக்குக் கிடைத்து விடுகிறது. போதாதா?''

ஒரு வாரத்து வாடகையை முன் பணமாகவே அவன் கொடுத்து அறையை எடுத்துக் கொண்டான். வீட்டுக் காப்பாளினி நகர ஆரம்பித்தபோது, அவன் இதுவரை பலரிடம் ஆயிரம் தடவைகள் கேட்டுவிட்ட அந்தக் கேள்வியைத் தன் நாக்கு நுனியிலேயே எப்போதும் இருக்கும் அந்தக் கேள்வியைக் கேட்டான்: ''ஓர் இளம் பெண்; மிஸ் வாஷ்னர், மிஸ் எலோய்ஸ் வாஷ்னர் — இங்கே குடியிருக்க வந்தவர்களில் அந்தப் பெண்ணின் பெயர் உனக்கு நினைவிருக்கிறதா? அவள் ஒரு

பாடகி. சிவந்த மெலிந்த தோற்றம், நடுத்தர உயரம். செம்பொன் நிறக் கூந்தல், இடது புருவத்துக்கு அருகே கறுப்பாக ஒரு மச்சம்.''

''இல்லை; எனக்கு ஞாபகம் இல்லை. நாடக உலகத்தவர் அடிக்கடி ஜாக்கையை மாற்றுவது போல் பெயரையும் மாற்றிக் கொள்வார்கள். வருவார்கள் போவார்கள்.... இல்லை, எனக்கு அந்தப் பெயர் ஞாபகம் வரவில்லை.''

இல்லை, இல்லை! எப்போதும் இல்லை என்ற பதில்தான். ஐந்து மாதங்களாக இடைவெளியின்றிக் கேட்கும் இந்த ஒரே பதில் தான். பகலெல்லாம் நாடக அரங்க நிர்வாகிகள், ஏஜெண்டுகள் போன்ற பலரையும் கேட்டுப் பிரயோஜனமில்லை. இரவில் பல்வேறு நாடக, இசை அரங்குகளுக்குப் போய் அங்கு வரும் ரசிகர்களை வினவியும் புண்ணியமில்லை. அந்தப் பாடல் அரங்குகளில் சில மிக மோசமானவை. அங்கே விசாரிக்கும் போது 'தெரியும்' என்ற பதில் வந்துவிடக் கூடாதே என்று அவன் பயந்து நடுங்குவான். அவளை மிகவும் காதலித்தான் அவன்.





அமெரிக்காவிலுள்ள ஒரு போலீஸ் நாய்க்குத் தங்கப் பல் கட்டியிருக்கிறார்கள். ஒரு குற்றவாளியைக் கண்டு பிடிக்கும்போது ஏற்பட்ட தாக்குதலில் ஒரு பல்லை இழந்து விட்டது அந்த நாய். அதனால், அதைக் கட்டாயமாக 'ரிடயர்' ஆக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் அதனுடைய முந்தைய கால சாதனைகள், அதன் திறமை, அது கண்டுபிடித்த குற்றவாளிகளைக் கணக்கிட்டபோது அந்த நாயின் இழப்பு பெரிய நஷ்டம் என்று உணர்ந்தார்கள். ஆகவே, சிறந்த பல் டாக்டர் ஒருவர் உதவியுடன், அதற்கு வெற்றிகரமாக மாற்றுப்பல் (தங்கப்பல்) பொருத்தி அதன் சேவையைத் தொடர்ந்து பெற்றுவருகிறார்கள்.

ஸ்போர்ட்ஸ் இல்லஸ்டிரேடட் — சாமி

அவளைக் கண்டுபிடிக்க முயன்றான். அவள் வீட்டை விட்டு வெளியேறி மறைந்த பிறகு இந்த நகரத்தின் நாடக உலகில்தான் எங்கே யாவது இருக்க வேண்டும் என்று அவன் நிச்சயமாய் நம்பினான். ஆனால் இது ஒரு பிரும்மாண்டமான புதை மணல் குழியாக இருக்கிறது. மணல் அடிக்கடி இடம் மாறுகிறது. அதற்கு அடிவாரமும் இல்லை. இன்று மேலே இருப்பது நாளை புதையுண்டு போகிறது.

விருந்தாளி, அறையின் மத்தியில் ஒரு நாற்காலியில் சாய்ந்து அசைவற்றுக் கிடந்தான். அந்த அறை தன்னிடம் குடியிருந்த பல்வேறு மனிதர்களைப் பற்றி அவனிடம் பேச முயன்றது. டிரெஸ்ஸிங் டேபிளுக்கு எதிரே ஜமுக்காளத்தில் தேய்ந்து போயிருந்த இடம் அங்கே ஓர் அழகிய பெண் குறுக்கும் நெடுக்குமாக அலைந்ததை எடுத்துக் கூறியது. சுவரில் தென்பட்ட சின்னஞ் சிறு விரல் அடையாளங்கள் 'சிறை'ப்பட்டிருந்த பாலகர்கள் வெய்யிலையும் காற்றையும் நாடி நகர்ந்ததைப் புலப்படுத்தியது. சிதறலான ஒரு கறை ஒரு பாட்டிலோ அல்லது பானம் அடங்கிய கோப்பையோ கோபத்துடன் வீசி எறியப் பட்டதை உணர்த்தியது. அடுத்தடுத்து, அதில் குடியிருந்தவர்கள் தாங்கள் எதன் மீதோ அல்லது யார்மீதோ கொண்ட கோபத்தை யெல்லாம் அந்த அறையிடமே காட்டியிருந்தார்கள். மேஜை நாற்காலிகள் விரிசல் கண்டிருந்தன. கட்டில் ஸ்பிரிங்குகள் சில உடைந்திருந்தன. சிறிது காலத்துக்கேனும் தங்கள் வீடாகக் கொண்டிருந்த ஒன்றன் மீது இத்தனை கோப தாபங்களைக் காட்டுவதா? ஆயின் உண்மையான வீடு வாசல் குடும்பம் என்று இல்லாமல் இருந்ததால் அடைந்த ஏமாற்றம் இப்படி ஆத்திரமும் கோபமுமாக மாறியிருக்கலாம். நமக்கென்று ஒரு குடிசை இருந்தாலும் அதனைப் பெருக்கி அழகுபடுத்திப் பேணுவோமே.

இந்த எண்ணங்கள் மனத்தில் மென்மையாக அடிவெடுத்து வைத்து அணிவகுத்துச் செல்ல அந்த இளைஞன் அனுமதித்தான். அதே நேரத்தில் பக்கத்து அறைகளிலிருந்தும் ஒலிகளும் மணங்களும் கதைகளைச் சுமந்து கொண்டு வந்தன. ஓர் அறையிலிருந்து கிளுகிளுப்பான சிரிப்பும் அதை உடனே தொடர்ந்த சாரமற்ற சிரிப்பும் கேட்டன. இன்னொர் அறையில் ஒரே குரல் தொடர்ந்து கண்டித்துக் கொண்டிருந்தது. மற்றொன்றில் பகடைகள் குலுக்கும் ஓசை; ஒன்றில் தாலாட்டு, வேறொன்றில் அழுகுரல்...

தொடர்ந்து அவன் அங்கே ஓய்வெடுத்துக் கொண்டிருக்கையில் திடுமென்று 'மினியோனெட்' மலரின் பலமான இனிய மணம் அந்த அறையை நிறைத்தது. காற்றின் குப்பென்ற ஒரு வீச்சுப் போல் அது உறுதியான, அழுத்தமான நறுமணத்துடன், யாரோ உயிருள்ள நபர் வருவது போல் வந்தது. அந்த வாலிபன் தன்னை யாரோ அழைத்தது போல் உணர்ந்து, ''என்ன கண்ணு!'' என்று உரக்கக் கேட்டான். எழுந்து நின்று சுற்றுமுற்றும் பார்த்தான். ஆழ்ந்த நறுமணம் அவனைச் சூழ்ந்து அவனுடன் ஒன்றியது. அவன் அதனை வாரி அணைக்கத் தன் கரங்களை நீட்டினான். அந்தக் கணத்தில் அவன் சிந்தையெல்லாம் குழம்பி விட்டது. ஒரு நறுமணம் ஒருவனை எப்படி அழைக்க முடியும்? ஓர் ஒலியாகத்தான் இருந்திருக்க வேண்டும். அந்த ஒலி தன்னைத் தொட்டதல்லவா? தன்னை வருடிக் கொடுத்துக் கொஞ்சியதல்லவா?

அவள் இந்த அறையில் இருந்திருக்கிறாள்! உடனே அவன் அதற்கான சாட்சியங்களைத் தேட ஆரம்பித்தான். அவளுடைய உடைமையான ஒரு சின்னஞ் சிறு பொருளானாலும் சரி, அவள் அதைத் தொட்டிருந்தால் போதும், அவனுக்கு அடையாளம் புரிந்து விடும். தன்னைத் தழுவுகிற இந்த மலர் மணம், அவள் மிகவும் விரும்பித் தன்தாக்கிக் கொண்ட வாசனைத் திரவத்தின் நறுமணம் எங்கிருந்து வருகிறது?

அந்த அறை சரியாகச் சுத்தம் செய்யப்படவில்லை. டிரெஸ்ஸிங் டேபிள் மீது சில கொண்டை ஊசிகள் கிடந்தன. அவற்றை அலட்சியம் செய்தான். டிராயரை இழுத்துத் தேடிப் பார்த்தான். ஒரு சின்னக் கசங்கிய கைக்குட்டையை எடுத்து முகர்ந்தான்; தரையில் எறிந்தான். இன்னொரு டிராயரில் சில பித்தான்கள்; ஒரு நாடகப் பாட்டுப் புத்தகம், வட்டிக்கடைச் சீட்டு, கனவுகளின் அர்த்தங்களை விளக்கும் ஒரு புத்தகம்.

அவன் மோப்பம் பிடிக்கும் நாய் போல் அறையைச் சுற்றி வந்தான். சுவர் அலமாரிகளில் தேடினான். ஜமுக்காளத்தின் அடியில் பார்த்தான். மேஜை இழுப்பறைகளைக் குடைந்தான். ஜன்னல் படுதாக்களை நீக்கி நோக்கினான். அவள் அங்கிருந்தாள் என்பதற்கு ஒரு சிறு சாட்சியத்தை அவன் தேடிக் கொண்டிருந்தான். ஆனால் அவள் அங்கேயே, அவன் அருகேயே, அவனைச் சுற்றியே, அவன் மீதே, அவனுக்குள்ளேயே, அவன் மேலேயே, அவனுடன் ஒட்டிக் கொண்டு, அவனை நேசித்துக்கொண்டு இருக்கிறாள் என்பதை உணராமல் தேடினான். மீண்டும் ஒரு முறை அவன் அவள் அழைப்புக்கு உரக்கக் குரல் கொடுத்தான்: ''என்ன கண்ணு ?'' உடனே திரும்பி



வாணி

பம்பாய்

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி

பரதநாட்டியக் கலாமந்திரின்

(போன் : 474249)

புகழ்மிக்க நாட்டியமணிகள்



மீரா

ஐரோப்பா — கிழக்காசிய நாடுகளிலும் மற்றும் இந்தியா வெங்கும் பாராட்டுப்பெற்ற நடன சகோதரிகள்

வாணி - மீராவின்

பரத நாட்டிய நிகழ்ச்சிகள்

பம்பாய் :	10-3-76	புலாபாய் தேசாய் அரங்கம்
சென்னை :	14-3-76	ஸ்ரீ பிரும்மகான சபா (போன்:811711) அரங்கம் - மியூஸிக் அகாடமி ஹால்
சென்னை :	15-3-76	ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி சபா (போன் : 86967) திருவல்லிக்கேணி
பொள்ளாச்சி :	17-3-76	பொள்ளாச்சி தமிழிசைச் சங்கம் (போன் : 2930P.P) அரங்கம் - ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி மில் கலையரங்கம்
கோவை :	19-3-76	ஸ்ரீ தியாகராஜ சங்கீத சபா (Regd.) (போன் : 34324) அரங்கம் : நகராட்சிக் கலையரங்கம்



மகாராஷ்டிராவில் பெய்கன் பறவைகளைத் தபால் பட்டுவாடா செய்யவும், செய்தி அறிவிக்கவும் பழக்குகிறார்கள். மலைச்சாதியினர் குடியிருக்கும் பகுதிக்கு அவை தகவல்கள் கொண்டு போகும்; அங்கிருந்து கொண்டு வரும். அரை மணியில் ஒரு கிலோமீட்டர் தூரத்தைக் கடக்கவல்லவை அந்தப் பறவைகள். - இந்தியன் எக்ஸ்பிரஸ் - ராமு

வெற்றிடத்தைப் பரக்கப் பரக்கப் பார்த்தான். அந்த நறுமணத்தில் அவளால் உருவம், நிறம், அன்பு, நீட்டப்பட்ட கரங்கள் முதலியவற்றைக் காண முடியவில்லை. அட கடவுளே! இந்த நறுமணம் எங்கிருந்து வருகிறது? வாசனைகள் அழைப்பதற்குக் குரல் பெற்றது எத்தனை காலமாக?

அவன் மீண்டும் இண்டு இடுக்குகளில் தேட ஆரம்பித்தான். அறையை ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலை வரை சல்லடை போட்டுச் சலித்தான். யார்யாரைப் பற்றியோ தடயங்கள் கிடைத்தன. ஆனால் அவன் தேடிய அவளைப் பற்றி ஓர் அடையாளமும் கிடைக்கவில்லை. ஆனால் அவள் இங்கு தங்கியிருந்திருக்கக் கூடும். அவள் ஆவி இங்கே உலவி வருவதாகத் தோன்றுகிறது.

அவன் வீட்டுக் காப்பாளியை நினைத்துக் கொண்டான். அந்த அறையை விட்டு ஒரே ஓட்டமாகக் கீழே ஓடிச் சென்றான். சிறிதளவே திறந்து வெளியே ஒளி சிந்திய ஒரு கதவை அடைந்தான். அவன் கதவைத் தட்டியதும் அவள் வெளியே வந்தாள். தன் பரபரப்பை அவன் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான்.

''எனக்கு முன்னால் அந்த அறையில் வாழ்ந்தவர்கள் யார் சொல்ல முடியுமா?''

''ஓ! சொல்கிறேனே! ஸ்ப்ரெளல்ஸும் மூனியும் இருந்தார்கள். மிஸ் ப்ரெட்டா ஸ்ப்ரெளல்ஸ் என்பது நாடக உலகப் பெயர். ஆனால் அவள் மிஸஸ் மூனிதான். கல்யாணமானவர்கள். இந்த வீடு கௌரவமானது. அவர்களுடைய திருமணச் சான்றிதழ் சுவரில் தொங்கியது.''

''மிஸ் ஸ்ப்ரெளல்ஸ் — அவள் பார்க்க எப்படி இருப்பாள் ?''

''கறுப்புக் கேசம், குள்ளம், பருமன், வேடிக்கையான முகம். சென்ற செவ்வாய்க் கிழமை காலி செய்தார்கள்.''

''அதற்கு முன்பு யார் குடியிருந்தார்கள்?''

''பீர் பீப்பாய்களின் போக்குவரத்தைக் கவனிக்கிற ஒருவர். அவர் ஒரு வார வாடகை பாக்கி. அதற்கு முன் மிஸஸ் க்ரோடரும் அவளுடைய இரு குழந்தைகளும் நாலு மாதம் இருந்தார்கள். அதற்கும் முன்பு மிஸ்டர் டாயல். அவருடைய பிள்ளைகள் அவருக்காக வாடகை கொடுத்தார்கள். ஆறு மாதம் இருந்தார். இது ஒரு வருஷத்துக் கதை. அதற்கு முன்பு இருந்தவர்கள் எனக்கு ஞாபகம் இல்லை.''

அவன் அவளுக்கு நன்றி கூறிவிட்டு அறைக்குத் திரும்பினான். அந்த அறை செத்துவிட்டிருந்தது. அதனை உயிருள்ளதாக்கிய ஜீவ மணம் போய்விட்டது. மினியோனெட் மலர் மணத்தை யொத்த செண்ட் வாசனை விடை பெற்றுக் கொண்டு விட்டது. பழையபடி காற்றோட்டமில்லாத - அறையில் நாற்றம் குடிகொண்டிருந்தது.

அவன் அடைந்த ஏமாற்றம் நம்பிக்கையை அழித்தது. சுருதியோசை எழுப்பியபடியே மஞ்சள் நிற ஒளி பரப்பிய காஸ் விளக்கைப் பார்த்தான். கட்டில் அருகே சென்று அதன் மீது பரப்பியிருந்த துணிகளைச் சுக்குச் சுக்காய்க் கிழித்தான். தன் பேனாக் கத்தியை ஜன்னல், கதவு இடுக்குகள், ஒவ்வொன்றிலும் குத்திக் கடைசிவரை செலுத்தினான். உடல் அசதி பெற்றபோது அவன் காஸ் விளக்கை அணைத்தான். ஆனால் காஸை முழுமையாகத் திறந்து விட்டான். நன்றியுடன் கட்டிலில் போய்க் கால் நீட்டிப் படுத்தான்.

அன்று ஸ்ரீமதி மக்கூல், பீர் அருந்துகிற நாள். இரவில் வீட்டுக் காப்பாளிகள் கூடுகிற ஒரு மதுக்கடைக்கு அவள் ஸ்ரீமதி பார்டியுடன் போனாள்.

பீர் கோப்பை நுரைத்துக் கொண்டிருக்க, ஸ்ரீமதி பார்டி சொன்னாள்: ''நான் இன்று மூன்றாவது மாடியைத் திரும்பவும் வாடகைக்கு விட்டுவிட்டேன்! ஓர் இளைஞன், குடிவந்திருக்கிறான். இரண்டு மணி நேரத்துக்கு முன்தான் தூங்கப் போனான்.'''

''அதை எப்படிச் சாதித்தாய் நீ?'' என்று ஸ்ரீமதி மக்கூல் மிகுந்த ஆச்சரியத்துடன் கேட்டாள். ''அந்த மாதிரி அறையை வாடகைக்கு விடுவதென்றால் அது பெரிய சாதனைதான். அவனிடம் அந்த விஷயத்தைச் சொன்னாயா என்ன?'' என்று மர்மமான குரலில் வினவினாள்.

''சொல்வேனா? வாடகைக்கு விடத்தானே அறைகள் இருக்கின்றன?''

''நீ செய்தது சரி. அறைகளை வாடகைக்கு விட்டுத்தானே நாம் பிழைக்கிறோம். உனக்கு வியாபார தந்திரம் தெரிந்திருக்கிறது. அங்கே கட்டிலில் தற்கொலை நடந்தது என்று தெரிந்தால் யார் வாடகைக்கு வருவார்கள்?''

''நீ சொன்னதுபோல் நாம் பிழைப்பு நடத்த வேண்டாமா?'' என்றாள் ஸ்ரீமதி பார்டி.

''ஆமாம். உண்மைதான். இன்றைக்குச் சரியாக ஒரு வாரம் முன்புதானே அந்த மூன்றாவது மாடி அறையை ஒழுங்குபடுத்த உனக்கு நான் உதவினேன். அழகான பெண். காஸைத் திறந்து விட்டுக் கொண்டு எதற்காகத்தான் தற்கொலை செய்து கொண்டாளோ? நல்ல லட்சணமான முகம்.''

''ஆமாம், ரொம்ப அழகானவள்தான்'' என்றாள் ஸ்ரீமதி பார்டி. ''இடது புருவத்துக்கு அருகில் இருந்த அந்த ஒரு மச்சம்தான் திருஷ்டி பரிகாரம் போலிருந்தது. இன்னொரு பீர் சாப்பிடுங்கள் மிஸஸ் மக்கூல்!''

சேரமான் காதலி

கண்ணதாசன்

அத்தியாயம் 21

அங்கதன் தூது

சைவத் திருமேனியாய்க் குலசேகர ஆழ்வார் ரங்கநாதர் கோயிலுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த போது, குதிரையின் குளம்படி ஓசை கேட்டது.

நகரத்து வீதிகளில் குதிரைகளின் குளம்படி ஓசை கேட்பது அதிசயமல்ல. ஆனால் இந்த ஓசைக்கு ஏதோ அர்த்தம் இருப்பது போல் ஆழ்வாருக்குத் தோன்றிற்று.

துரும்பு ஒன்று காற்றிலே பறக்கும் போதும் அது ஏன் பறக்கிறது என்பது ஞானிகளுக்குத் தெரியும். அவர்கள் சகுனங்களை அறிவார்கள். பிறர் வார்த்தைகளிலிருந்து அவர்கள் உள்ளத்தை அறிவார்கள். முக ஜாடையிலிருந்து அவர்கள் சுபாவத்தை அறிவார்கள்.

இறைவனின் சிருஷ்டியில் ஒவ்வொன்றுக்கும் அர்த்தம் இருக்கிறது என்பதைக் கண்டு தெளிந்து விட்ட காரணத்தால் காரணமில்லாமல் காரியம் நடக்க முடியாது என்பதைப் புரிந்தவர்கள் அவர்கள்.

ஆயிரம் பேர்களை ஒன்றாக உட்கார வைத்து, ''இவன் யோக்கியன்; அவன் அயோக்கியன்'' என்று இரண்டு கூறாகப் பிரிக்கச் சொன்னால் அவர்கள் பிரித்து விடுவார்கள்.

புடம் போட்டு எடுத்த பக்குவத்தின் காரணமாக அவர்கள் உள்ளம் பேசத் தொடங்குகிறது. ஒவ்வோர் உண்மையும் கலப்படம் இல்லாமல் புரிகிறது.

அதன் பெயரே ஞான திருஷ்டி. அதையே, பின்னால் பக்குவமற்ற சிலர் ஜோசியம் என்ற பெயரால் பிழைப்பாக்கிக் கொண்டார்கள்.

ஆழ்வார் ஒரு ஞான புருஷர்.





ஆயிரம் குதிரைகளின் காலடி ஓசைக்கு நடுவிலே ஒரு குதிரைக்கு மட்டும் அர்த்தம் இருப்பதைக் கண்டு கொண்டார்.

பஞ்சமுக ருத்திராட்ச மாலையை எடுத்து அவர் கழுத்திலே அணிந்து கொண்டபோது அதிலே உடைந்திருந்த ஒரு ருத்திராட்சம் தவறிக் கீழே விழுந்தது.

அது மனித குலத்திலே ஒருவனின் மரணம் போலவும், தனது குலத்திலே ஒருவனது தடுமாற்றம் போலவும் அவருக்குத் தோன்றிற்று.

ஏற்கனவே பத்மாவதி வைத்திருந்த ஓலையையும் படித்திருந்தார் அல்லவா? அந்த நிலத்தில் இந்தச் சிந்தனை விதை முளைத்தது.

குதிரையில் வந்தவன் உள்ளே வரும் வரை அவர் காத்திருக்கவில்லை. விடுதி மண்டபத்தின் உள் வளைவில் இருந்து பரிவாரங்களோடு வெளியே வந்தார். அங்கே குதிரையை விட்டுப் பயபக்தியோடு இறங்கினான் மார்த்தாண்டவர்மனால் அனுப்பப்பட்டிருந்த அங்கதன்.

அங்கதன் தூது ராமாயணத்தோடு முடியவில்லை போலும்!

ஆழ்வார் அவனைப் பார்த்துத் தலை அசைத்துப் புன்னகை செய்தார். அங்கதன் சாஷ்டாங்கமாக அவர் கால்களில் விழுந்து நமஸ்கரித்தான். இடுப்பிலிருந்த ஓலையை எடுத்துப் பணிவோடு அவர் முன்னால் நீட்டினான்.

அதை வாங்கித் தம் இடுப்பில் செருகிக் கொண்ட ஆழ்வார், மறுமொழி ஏதும் கூறாமல் அரங்கன் கோயிலை நோக்கி நடந்தார்.

அனைவரும் போன பின்பு குதிரையில் வந்த களைப்புத் தீர, அங்கதன் விடுதிக்குள் நுழைந்து கால்களை நீட்டிப் படுத்தான்.

அரங்கநாதர் கோயிலில் அமைதியாக ஒரு கூட்டம் உட்கார்ந்திருந்தது.

திருவரங்க விஜயத்தை முடித்துக் கொண்டு திருமலை, திருக்கண்ண புரம் முதலிய தலங்களுக்குப் போக வேண்டும் என்று விரும்பியிருந்த குலசேகர ஆழ்வாரை, திருவரங்க மக்கள் விடவில்லை. தங்கள் அன்பு மழையில் நனைய வைத்திருந்தார்கள்.

பெரியவரின் சாந்தத் திருமுகத்தைக் காண, பெண்கள் கூட்டம் தினமும் திரளாகக் குழுமிக் கொண்டிருந்தது.

தாய் அறிகிற அறிவே மகனை வளர்க்கிறது என்பதை அறிந்திருந்த ஆழ்வார், சோழ நாட்டுத் தாய்க் குலம் முழுமைக்கும் புத்தி சொன்ன பிறகே திருமலைக்குப் புறப்படுவதாக இருந்தார்.

அன்று கடைசி நாள் உபதேசம்.

அதற்குப் புறப்படும்போதுதான் அங்கதன் வந்து சேர்ந்தான்.

அரங்கனின் சந்நிதானத்தில் மெய் மறந்து நின்றார் குலசேகர ஆழ்வார்.

''அரங்கநாதா!

''பள்ளி கொண்ட கோலத்தில் இங்கே உன்னை நான் சிலையாகப் பார்ப்பது இதுதான் கடைசி முறை.

''நின்ற கோலத்தில் திருமலையில் சந்திக்கிறேன்'' என்று கண்களை மூடி இரண்டொரு பதிகங்களைப் பாடினார்.

உபன்யாச மேடையில் அவர் வந்து அமர்ந்து, ''ஹரிஓம் நாராயணா'' என்றதும் சபை முழுவதும் அதை ஒரே குரலில் எதிரொலித்தது.

''பக்தகோடிகளே,

உங்களை நான் பார்ப்பது இதுவே கடைசி முறையாக இருக்கலாம்.

திருத்தலங்கள்தோறும் நான் சென்று முடிப்பதற்குள் ஏதாவது ஒரு தலத்தில் நான் கண் மூடி விடலாம்.

இறந்துபோனவனை, சைவர்கள் 'சிவபதவி அடைந்தான்' என்கிறார்கள். அந்தப் பதவி இந்தப் பதவி என்று அலைகின்ற மனிதன், கடைசியாக அடைகின்ற பதவியே சிவ பதவி.


உச்சமான பதவி அது.

உன்னதமான பதவி அது.

எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய பதவி அது.

போட்டியிடுவோர் இல்லாத பதவி அது.

சீக்கிரம்கிடைக்க வேண்டும் என்று பலரும் விரும்பாத பதவி அது.



நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தப்பமுடியாத பதவி அது.

அந்தப் பதவி தவிர்க்க முடியாதது; ஆகவே அது வரப் போகிறதே என்று நான் அழமாட்டேன். ஆனால் ஏதாவது ஓர் ஆலயத்தில் கண் மூட வேண்டும் என்பதே என் பிரார்த்தனை.

வீடு என்று ஒரு விலங்கைப் பூட்டிக் கொண்ட மனிதன் காடு போனாலும் அது தொடர்ந்து விடுகிறது.

இல்லம் என்ற சிறைச்சாலைக்குள் நுழைந்த பிற்பாடு, சிறைச்சாலையின் கட்டுதிட்டங்களுக்கு உட்பட்டே நடக்க வேண்டியிருக்கிறது. அங்கிருந்து வெளியேறி வந்தாலோ அந்தச் சிறைச்சாலை கூடவே வருகிறது.

விளங்காமல் பூட்டிக் கொண்ட வில்லங்கங்கள் விளங்கும்போதே வேதனையாகிவிடுகின்றன.

வேர் அறுக்க முடியாத பயிராகி விடுகின்றன.

ஆறு மாதம் வளர்த்த நாயை நீங்கள் அடுத்த நாட்டிலே விட்டு விட்டு வந்தாலும், அது அடுத்த நாளே உங்களைத் தேடி வந்துவிடுகிறது. நாளை அது வருகிறதோ இல்லையோ நாளை வரும் என்ற நினைவு இன்றே வந்து விடுகிறது.

நாயை வளர்க்காமலே இருந்தால் நாயைப் பற்றிய கவலையும் இருக்காது அல்லவா ?

துறவியின் பக்குவம், உறவுகளிடம் செல்லுபடியாவதில்லை.

சித்தம் எவ்வளவுதான் பக்குவப் பட்டாலும், ரத்தம் பேசத் தொடங்கும்போது மொத்த ஞானமும் கெட்டுப் போகிறது.

சைவ வைணவ தர்மங்கள் இல்லறத்தை வெறுக்கும்படி உங்களை வற்புறுத்தவில்லை. அவை துறவறமே மேல் என்று போதிக்கவும் இல்லை.

உங்கள் இல்லறமே உங்களுக்குத் துறவறத்தை நினைவுபடுத்துகின்றன.

மனைவி என்றொருத்தி வந்த பின்னாலேதான், திருமணம் ஏன் கூடாது என்பதை உணர்கிறீர்கள்.

மகன் என்றொருவன் பிறந்து வளர்ந்த பின்னாலேதான், குழந்தைகளை ஏன் பெறக் கூடாது என்பதை அறிகின்றீர்கள்.

நான் கொட்டிக் கிடந்த செல்வங்களையும், பட்டம் பதவிகளையும், பெற்ற மகளையும், பிற உறவுகளையும் துறந்து இங்கே வந்தேன். ஆனால், என் மனக் குதிரையை வம்புக்கு இழுக்க மற்றொரு குதிரை வந்து கொண்டே இருக்கிறது.

எல்லா வில்லங்கங்களிலுமிருந்து தப்பி விட்ட ஒருவனுக்கே அடிக்கடி சலனமும், சபலமும் ஏற்படுமாயின் இன்னும் அதிலே சிக்கிக் கொண்டிருப்பவர்களுக்கு எவ்வளவு ஏற்படும் ?

சைவர்களும், வைணவர்களும் இறைவனுக்கும் ஏன் ஒரு துணைவியைப் படைத்தார்கள் ?

நாம் படும் துன்பங்களை அவனும் படட்டும் என்றுதான்!

முற்றி முதிர்ந்த ஞானம் வராமல் இருக்க வேண்டும் என்றால், பற்றும் பாசமும் வற்றிப் போய்விட வேண்டும்.

அது எப்படி முடிகிறது ? யாரால் முடிகிறது ?

யாருக்காகவும் அழக் கூடாது என்றுதான், துறவியாகி நான் இங்கே வந்தேன்.

ஆனால், அழக் கூடாது என்ற நினைப்பு அடிக்கடி வருகிறதே, அது ஏன் ?

காரணம்: அழுவதற்கான சூழ்நிலை புரவியேறி வருகிறது; அவ்வளவுதான்!

சைவ வைணவ தர்மங்களில் வேதாந்தம், சித்தாந்தம் என்று இரண்டு வகைகள் உண்டு.

சித்தம் செய்யும் முடிவு, சித்தாந்தம்; வேதம் காட்டும் முடிவு, வேதாந்தம். சித்தத்தின் முடிவு தவறும்போது, வேதத்தின் முடிவு ஆறுதல் தருகிறது.

பக்தி மார்க்கத்தில் உள்ள சுகம் இதுதான்.

வருவதைத் தடுக்க முடிவதில்லை; வந்த பின்னாலே ஆறுதல் தேவைப்படுகிறது.

ஆறுதல் சொல்ல வருகிறவர்களோ, அரைக் கழஞ்சு பொன்னாவது எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால், கையளவு தேங்காயிலும், கற்பூரத்திலும் அந்த ஆறுதலைக் கடவுள் நமக்கு வழங்கி விடுகிறார்.

உங்களைப் போலவே நானும் லௌகிகத்தில் இருந்தவன்தான்.

இல்லம் என்ற தமிழ் வார்த்தைக்கு ''எதுவும் இல்லாமல் இருக்கிறோம்'' என்பதே பொருள்.

''இல்லோம், இல்லம், இலம்.''


இந்த மூன்று சொற்களுக்கும் ஒரே பொருளே.

இல்லாது வந்தோம், இல்லாது போகிறோம்; இடையிலே சிலர் நம்மை இல்லாதவர்கள் ஆக்குகிறார்கள்.

நான் பேசிக் கொண்டிருப்பது என்னைப் பற்றியே.

இப்போதெல்லாம் நான் புறப்படும்போது பூனை குறுக்கே ஓடினால் அது எனக்குக் கெட்ட சகுனமாகப் படுவதில்லை; குதிரை எதிரே வந்தால் பயமாக இருக்கிறது.

அனைத்தையும் துறந்து வெளியே வரும்போது, ''ஏதாவது செய்தி இருந்தால் சொல்லி அனுப்பு'', என்று, சொல்லிவிட்டு வந்தேனே, அது ஏன்?


MCA/J/Tam/1
மல்லிகைப்பூ
மணம்கமழ...
சுகபோகமிக்க
குளியல் சோப்
விலை ரூ.1.47பை.
மட்டுமே
(தலவரிகள் தனி)
Jasmine
மைசூர்
ஜாஸ்மின்
சோப்
கவர்ன்மெண்ட் சோப் ஃபாக்டரி, பெங்களூர் அளிக்கும் தரமிக்க தயாரிப்பு.
விற்பனை செய்பவர்கள்: மைசூர் ஸேல்ஸ் இன்டர்நேஷனல் லிட்., பெங்களூர்.

அழுக்கினை அறவே ஒழித்திட ஒரு புதிய வழி





புதிய ரம்யா

ஆழ்ந்து சுத்தமாக்கும் டிடர்ஜன்ட்

விஞ்ஞான முறையில் தயாரிக்கப்படும் புதிய ரம்யா, துணிகளிலுள்ள அழுக்கை விரைவில் நீக்குகிறது.

இரண்டு ஆண்டுகால ஆராய்ச்சிக்கும், சோதனைக்கும் பிறகே, இதை நாங்கள் உறுதியாகக் கூறுகிறோம். புதிய ரம்யா விலுள்ள சர்பேக்டன்ட் துணிகளில் எங்கெங்கு அழுக்கு படிந்திருந்தாலும் அதனை அறவே ஒழித்து, துணிகளை மிகச் சுத்தமாகவும், மிருதுவாகவும் மாற்றுகிறது.





வில்லைகளாகவும், மிருதுவான பைகளிலும் கிடைக்கும்.

அழுக்குத் துணி வெளுக்க —பளீரென ஒளி வீச

அல்ட்ராமரீன் & பிக்மண்ட்ஸ் லிமிடெட், ராணிப்பேட்டை, தமிழ்நாடு.

SAA/UPL/1876

... ஆசை மிச்சமிருந்து அந்த வார்த்தையைச் சொல்ல வைத்தது.

இருக்கும் இடத்தைச் சொல்லாமலும், இருந்த இடத்தில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றிக் கவலைப்படாமலும், உயிர் பெற்று நடமாடும் மரமாக இருப்பதே நல்ல துறவு.

இத்தனை நாட்கள் உங்களுக்கு உபதேசித்த எனக்கே இப்பொழுது உபதேசம் தேவைப்படுகிறது.

நான் ஞானியாகிறேன், திடீரென்று மனிதனுகிறேன்.

பக்தி மார்க்கத்தின் விசேஷத்தால் மிருகமாகும் சந்தர்ப்பம் மட்டும் வரவில்லை.

என் இடுப்பிலே காத்திருப்பது அந்தச் சந்தர்ப்பம்தானோ என்னவோ ?

பக்தகோடிகளே,

மனத்தின் உபாதைகளிலிருந்து, மனத்தை மீட்கவாவது அரங்கனின் சந்நிதானத்தில் அடைக்கலம் புகுந்து கொள்ளுங்கள்.

அழகில்லாத மனைவியானாலும் அவள் முல்லைப்பூ சூடியிருந்தால் அந்த மணத்தில் கணவனுக்கு ஆசை வருவது போல், பக்தி மார்க்கத்தில் நம்பிக்கை இல்லாதவனும் சற்று நேரம் சந்நிதானத்தில் நின்றால் சஞ்சலம் மறைந்து போகும்.

அமைதியாகப் படுத்திருக்கலாம் என்றுதான் இங்கு வந்தேன்; என்னைச் செய்திகள் அடிக்கடி எழுப்பிவிடுகின்றன.

அரங்கன் படுத்திருக்கிறான்; பாவம், அவனையும் எழுப்பிவிடாதீர்கள்!''

குலசேகர ஆழ்வார் பரிவாரங்களோடு விடுதிக்குத் திரும்பினார்.

ஆயிரம் பேருக்கு உபதேசம் செய்து விட்டு வந்திருந்த காரணத்தால் ஓலையைப் படிக்கும் துணிவு அவருக்கு வந்திருந்தது.

படித்தார், அவர் எதை எதிர்பார்த்தாரோ அதுதான் அதிலே இருந்தது.

''சரி, புறப்படலாம்'' என்றார்.

ரதங்களும் குதிரைகளும் தயாராயின.

வரவேற்றது போலவே சோழ நாடு அவரை வழி அனுப்பி வைத்தது.

திருவரங்கத்தின் எல்லையைக் கடக்கும் வரை, எந்தப் பக்கம் செல்ல வேண்டும் என்பதை அவர் முதலில் சென்ற குதிரை வீரனுக்குச் சொல்லவில்லை.

அத்தியாயம் 22

சினமும் சிவமும்

தளபதி அரசமாணிக்கத்தின் வீட்டில் தங்கிய பூஜியானுவுக்கு ரவிவர்மன் இரண்டு கட்டளைகளை இட்டிருந்தான்.

ஒன்று, அவளது அழகையும், சகாயத்தையும் வைத்து எவ்வளவு பொன் கிடைக்குமோ அவ்வளவையும் திரட்டுவது. மற்றொன்று அரசமாணிக்கத்தின் மூலம் சடையவர்ம பாண்டியனைத் தூண்டி, வஞ்சியின் மேல் படையெடுக்கச் செய்வது.

பாண்டியர் படையும், கொங்கர் சேனையும் இரண்டு பக்கங்களில் வஞ்சியைத் தாக்கி மார்த்தாண்டவர்மனை முடி இழக்கச் செய்து விட்டால், தான் அரியணை ஏறிச் சேர நாட்டுக்குக் கப்பம் கட்டுவதிலிருந்து இரண்டு நாடுகளையும் விடுவித்து விடுவதாக வாக்குறுதி கொடுத்து பூஜியானுவை மதுரைக்கும், மாதவியைக் கொங்கு நாட்டுக்கும் அனுப்பியிருந்தான்.

மதுரையில் பூஜியானு தன் முயற்சியைத் தொடங்கியதே முச்சந்தியில் அவள் ஆடிய ஆட்டம். அதில் ஓரளவு பொன் அவளுக்குக் கிடைத்தது.

அடுத்த கட்டம் பாண்டிய மன்னன் சடையவர்மனைச் சந்தித்து, இந்தத் திட்டத்தைச் சொல்வது.

அரசமாணிக்கத்துக்குச் சடையவர்மனிடம் மிகுந்த செல்வாக்கும் உண்டு. ஆனால், வஞ்சிக்குக் கட்டுவதைக் கப்பம் என்று கருதாதவன் சடையவர்மன். மகளுக்கு அனுப்புகின்ற சீதனம் போலவே வருஷா வருஷம் அனுப்பிக் கொண்டிருந்தவன். நாட்டின் அமைதியைக் கெடுக்க விரும்பாதவன். ஒவ்வொரு போரும் சில கைம்பெண்களை உற்பத்தி செய்கின்றன என்று கருதுகிறவன்.

அவனிடம் இந்தச் செய்தியை எப்படிச் சொல்வது ?

அழகைக் காட்டிச் சாகஸம் புரியலாமா ? அதுவும் முடியாதே !

வரகுண பாண்டியன் என்ற சடையவர்மன் சிவபக்தன். மனைவி முகம் தவிர, மறு முகம் பார்த்தறியாதவன். பூஜியானுவும் அதற்குப் பழக்கம் இல்லாதவள்.

'இந்தச் சிக்கலில் வந்து ஏன் மாட்டிக் கொண்டோம் ?' என்று பூஜியானு நினைத்தாள்.

தான் முயன்று பார்ப்பதாக அரசமாணிக்கம் அரண்மனைக்குப் புறப்பட்டான்.

தான் பட்டத்துக்கு வந்ததிலிருந்து போரையே சந்தித்து அறியாத சடைய

வர்ம பாண்டியன், தளபதியைச் சந்திப்பதும் அபூர்வமாக இருந்ததால், அரச மாணிக்கத்தைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டான்.

போர்வீரனின் வாள் நீண்ட காலத்துக்கு வேலை இல்லாமல் கிடக்கக்கூடாது என்பது, சம்பிரதாயம்.

சிவப்பழமாகக் காட்சி அளித்த வரகுண சடையவர்ம பாண்டியனின் முன்னால் கைகளைப் பின்னால் கட்டியபடி இந்தச் சம்பிரதாயத்தைச் சொல்லிப் பேச்சைத் தொடங்கினான் அரச மாணிக்கம்.

''குருதி படிந்திருக்கும் வாள்தான் கொற்றவனுக்குப் பெருமை தருவது. வேல் எப்போதும் பளபளவென்று இருக்கக் கூடாது. அதைத் துடைத்து வைத்து மினுமினுப்புத் தரக்கூடாது. 'வேலை மினுக்குதல் வீணானது' என்பதால்தான், வீணாகச் செய்யும் வேலைகளை வேலைமினுக்கிட்டு (வேலைமெனக்கெட்டு) என்கிறோம். போர் இல்லாத காலங்களில் கை வாளாவது — எதன் மீதாவது பதிய வேண்டும் என்பதற்காகவே புரட்டாசி மாதத்தில் வாழை மரத்தைக் கத்தியால் குத்துவதை வழக்கமாக வைத்துக் கொண்டிருக்கிறோம். எவ்வளவு காலத்துக்கு நாம் அதையே செய்து கொண்டிருப்பது? இல்லை; எவ்வளவு காலத்துக்குத்தான் சேர நாட்டுக்குக் கப்பம் கட்டிக் கொண்டிருப்பது? — இரண்டாம் சேரமான் பெருமாள் முடி துறந்த பிற்பாடு, சேரநாடு நிலைகுலைந்து போயிருக்கிறது. மார்த்தாண்டவர்மன் போர்த் தகுதியற்றவன். படைகளைக் கட்டுப்படுத்தும் சக்தி வாய்ந்த தளபதி ரவிவர்மன் அவனுக்கு விரோதியாகிவிட்டான். இரண்டாம் தளபதி இரும்பொறை கொல்லப்பட்டு விட்டான். நம்பூதிரிகள் சபைத் தலைவர் நம்பக்கூடிய சேனைத் தலைவர்கள் இப்போது யாருமில்லை. பாண்டியர் பரம்பரை தன் மரகதக் கொடியைக் கம்பீரமாகப் பறக்க விட இதுதான் நேரம். பாதை தெளிவாக இருக்கிறது. பயணம் சுளுவாக நடக்கும். ஆணை பிறப்பித்தால் போதும்; அடியேன் முடித்து வைப்பேன். 'கொங்கர்கோன்' என்றும், 'கூடலர்கோன்' என்றும், வஞ்சிவேந்தன் சேரமான் பெருமாள் பட்டம் கட்டிக் கொண்டது போல் 'கேரளர்கோன்' என்ற பட்டத்தை ஸ்ரீவரகுண சடையவர்ம பாண்டியருக்கு நான் கட்டுவேன். முடியுமானால் கொங்கு நாட்டையும் சேர்த்து வென்று, 'மும்முடிப் பாண்டிய'ராக ஆக்குவேன். நடக்கக் கூடிய காரியம் என்பதாலேயே மிகவும் சிந்தித்து உங்களிடம் பேச வந்தேன்'' என்றான், அரசமாணிக்கம்.

ரவிவர்மன், பூஜியானாவிடம் எவ்வளவு உரையேற்றி அனுப்பி யிருந்தானோ, அவ்வளவையும், பூஜியானா தன் மழலை மொழியில் அரச மாணிக்கத்தின் மூளையில் ஏற்றி யிருந்தாள்.

அப்படியொரு படையெடுப்பை அரச மாணிக்கம் ஏற்பாடு செய்தால், அவனுக்கு ரவிவர்மன் தரும் வெகுமதிகளையும் அவள் சொல்லியிருந்தாள்.

வஞ்சியின் சேனைகள் ரவிவர்மன் கையிலே. ஆகவே, படையெடுத்துச் சென்றால், எதிர்ப்பில்லாமலே ஜெயிக்கலாம் என்பதை நன்றாக அறிந்த அரச மாணிக்கம் உற்சாகமாகவே அரசனிடம் பேசினான்.

வாதம் செய்கிறவன் சாதுரியமாகச் செய்தால், அது நீதியையும் பிளந்து கொண்டு பாயும்!

வரகுண சடையவர்ம பாண்டியன் யோசிக்க ஆரம்பித்தான்.

ஏறக்குறைய படையெடுப்புக்குச் சம்மதித்துவிடும் நிலையில் அவன் இருந்தான்.

அப்போது வெளியிலே ஆரவாரம் கேட்டது.

அரண்மனைத் தலைமைச் சேவகன் உள்ளே ஓடி வந்தான்.

''மன்னவர்க்கு வணக்கம்.''

''என்ன செய்தி?''

''திருக் கயிலையிலிருந்து ஞான மூர்த்தி ஒருவர் பல்லக்குப் பரிவாரங்களோடு தங்களைக் காண வந்திருக்கிறார்.''

''அவர் இருக்கும் இடத்தைக் கேள்; நானே வந்து அவரைச் சந்திக்கிறேன்.''

''மன்னிக்க வேண்டும். அவர் வாராணசிக்குச் சென்று கொண்டிருக்கிறாராம். சிறிது நேரம் தங்களைக் கண்டு செல்ல விழைகிறார்.''


— சடையவர்மன் அரசமாணிக்கத்தைப் பார்த்தான்.

அரசமாணிக்கம் கையிலே இருந்த ஜரிகைச் சால்வையை இடையில் கட்டிக் கொண்டு, அதற்குச் சம்மதித்தவன் போல் தோற்றம் அளித்தான்.

''சரி, வரச் சொல்!'' என்று அனுமதி அளித்தான் சடையவர்மன்.

சிறிது நேரத்தில், ''சைவமும், தமிழும் தழைத்தினிதோங்குக'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தார் அந்த ஞான மூர்த்தி.

அவர் வேறு யாரும் இல்லை; சங்கர நம்பூதிரிதான். (தொடரும்).



''நேர்மை கதவைத் தட்டுகிறது; கதவு திறந்தவுடன் வஞ்சம் உள்ளே நுழைகிறது.'' - பார்னரி ரிச் - இந்தியன் எக்ஸ்பிரஸ் - பாபு

"எனது சின்னஞ் சிறிய செல்வி துடிதுடிப்பாக ஆரோக்கியமாக மற்றும் சுறுசுறுப்பாக வளர வேண்டும். ஆகையால்தான் அவளுக்கு நாள்தோறும் போர்ன்விடா தருகிறேன்."

OBM/5880 TM



"அவளுடன் ஈடுகொடுக்க இப்போது எனக்கு போர்ன்விடா தேவை!"

[illegible]



காட்பரிஸ்

போர்ன்விடா

சக்தி, வலிமை மற்றும் இன்சுவை கிட்டும் உன்னத உணவு பானம்.

ஒவ்வொரு டின்னிலும் அதிக கோப்பை, ஒவ்வொரு கோப்பையிலும் அதிக சுவை!







"நான் போனமுறை அமெரிக்கா போன போது" என்று யாராவது பேச ஆரம்பித்து விட்டால் எனக்குப் பயம் பிடித்துக் கொள்ளும். எத்தனை மணி நேரத்துக்கு இந்த 'போரை'க் கேட்க நேருமோ என்று பயப்படுவேன். ஆனால் எனக்கே அமெரிக்கா போக ஒரு வாய்ப்புக் கிடைக்கும் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. போய் வந்த பிறகு தான் எனக்கும் தெரிந்தது அமெரிக்காவுக்குச் சென்று திரும்புகிறவர்கள் தங்கள் அனுபவத்தை மற்றவர்களிடம் சொல்லாமல் இருக்க முடியாது என்று!

அமெரிக்காவில் ஹூஸ்டன் நகரத்தில் என் பிள்ளை கிரி இன்ஜினியராகப் பணி புரிகிறான். எனக்கும் என் கணவருக்கும் அங்கு வந்து தன்னுடன் தங்கி அமெரிக்காவையும் பார்த்துவிட்டுப் போகச் சொல்லி ரிடர்ன் டிக்கட் அனுப்பியிருந்தான். பதினைந்து நாட்களில் பாஸ்போர்ட், விஸா எல்லாம் வாங்கிக் கொண்டு புறப்பட்டோம்.

நியூயார்க் விமான நிலையத்தில் விளக்குகள் கண்களைக் கூச வைக்கின்றன. இரவு, பகலாகத் தோன்றுகிறது. கென்னடி சர்வதேச விமான நிலையத்திலிருந்து பக்கத்தில் வேறு ஒரு விமான நிலையம் சென்று ஹூஸ்டனுக்கு டெல்டா ஏர்லைன்ஸில் ஏறவேண்டும். எங்கள் பாஸ்போர்ட்டை ஓர் அமெரிக்க அதிகாரி பார்த்து "எத்தனை நாட்கள் அமெரிக்காவில் தங்கப் போகிறீர்கள்?" என்று கேட்டார். "நூற்றி இருபது நாட்கள்" என்றார் என் கணவர் ஆங்கிலத்தில். அமெரிக்கரின் காதில் அது இருபது நாட்கள் என்று விழுந்தது போலும். ஒரு மாதம்தான் தங்கலாம் என்று எழுதிக் கொடுத்து விட்டார். நாங்கள் இங்கிருந்து கொண்டுபோன வேப்பிலைக் கட்டியையும் மாகாளிக் கிழங்கு ஊறுகாயையும் ரொம்பக் குடையாமல் விட்டுவிட்ட சந்தோஷத்தில் என் கணவர் பாஸ்போர்ட்டில் அதிகாரி என்ன எழுதியிருக்கிறார் என்பதைக்கூடக் கவனியாமல் இருந்துவிட்டார்.


ஹூஸ்டனுக்கும் வந்து விட்டோம். மணி இரவு இரண்டு. எங்கள் பிள்ளை கிரி விமான நிலையத்துக்கு வந்திருந்தான். நாலு வருஷங்

- பெற்றோருடன் கிரி; என். வேங்கடராமன், கிரி, ஸ்ரீமதி வேங்கடராமன் (ராமப்பிரியா).
- பிக்நிக் முடிந்து சிட்டாட்டம், செல்.
- வனவிலங்குகள் சரணாலயத்தில் காண்டாமிருகங்கள் கூட்டம்.
- ஆனந்த உலகம்—டிஸ்னி லாண்ட்.
- மெக்ஸிகோ—யு. எஸ். ஏ. எல்லையில்.

மீண்டும் சந்திக்கும் வரை!

— ராமப்ரியா —





களாகப் பிரிந்தவர் கூடினதை எப்படி எழுத்தில் காட்டுவது! நாங்கள் எங்கள் நிலையை அடையக் கொஞ்ச நேரம் ஆயிற்று. பாஸ்போர்ட்டை வாங்கிப் பார்த்த என் பிள்ளை திடுக்கிட்டான். ''என்னப்பா இது! டிக்கெட் நான்கு மாதத்துக்கு இருக்கிறது. ஒரு மாதத்துக்குத்தான் விசா அனுமதி கொடுத்திருக்கிறார்கள்!'' என்றான். அப்போதுதான் கவனக் குறைவாய் இருந்து விட்டதை உணர்ந்தோம்.

கிரியின் குடியிருப்பில் ஐஸ் பெட்டி பெரியதாக இருக்கிறது. பால் காலன் கணக்கில் தான் வாங்கி ஐஸ் பெட்டியில் வைத்துக் கொள்கிறார்கள். காய்கறிகளும் பிரமாதமாகக் கிடைக்கிறது. சூப்பர் மார்க்கெட்டில் வண்டியை நாமே தள்ளிக் கொண்டு போய் நமக்கு வேண்டிய காய்கறிகளை வாங்கிக் கொள்ளலாம். கத்தரிக்காய் மட்டும் நம்ம வீட்டுச் செம்பு அளவுக்கு இருக்கிறது. சகலமான தேவைகளையும் ஒரே கடையில் வாங்கலாம். எங்கள் இருவரையும் வியப்புடன் அமெரிக்கர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்கள். நெற்றியில் நான் இட்டுக்கொண்டிருக்கிற பெரிய குங்குமத்தையும் இரண்டு பெரிய மூக்குத்திகளையும் கண் கொட்டாமல் பார்ப்பார்கள். அமெரிக்க மாது ஒருத்தி ''எதற்காக இந்தக் குங்குமமும் மூக்குத்திகளும்? இவை எதைக் குறிக்கின்றன?'' என்று கேட்டாள். ''எங்கள் நாட்டில் சுமங்கலிகள், அல்லது கன்னிப் பெண்கள் குங்குமம் அணிவோம்'' என்றேன்.

''உங்களுக்கு எப்ப கல்யாணம் ஆயிற்று?'' என்றாள்.

''முப்பது வருடங்களுக்கு முன்னால். இவர் தான் என் கணவர்'' என்று இவரைச் சுட்டிக் காட்டினேன்.

''மை காட்! முப்பது வருடங்களாக ஒருவரோடேயா நீ வாழ்கிறாய்?'' என்று அப்படியே அசந்து போய்விட்டாள்!

ஹூஸ்டனில் மட்டும் இரண்டாயிரத்து ஐந்நூறு இந்தியக் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களில் தமிழர்கள் எல்லோரும் சேர்ந்து பாரதீய கலா மன்றம் என்ற ஒன்றை ஆரம்பித்துச் செயல்படுகிறார்கள். பெரும்பாலும் எல்லோருமே இளைஞர்கள். மாதம் ஒரு முறை எல்லா இந்தியக் குடும்பங்களையும் சந்திக்க ஏற்பாடு செய்கிறார்கள். அவரவர்கள் வீட்டிலிருந்து ஒவ்வொரு தினுசு சாப்பாடு கொண்டு வந்து ஓர் இடத்தில் பிக்னிக் சாப்பிடுகிறார்கள். சாப்பிட்ட பின் ஒரு தமிழ் சினிமா போட்டுக் காண்பிக்கிறார்கள். பாலசந்தர் என்ற இளைஞர்தான் இதற்குக் காரியதரிசி. ஜோதி காசிராஜ் என்ற தூத்துக்குடிப் பெண்மணிதான் நிதிப் பொறுப்பைக் கவனித்துக் கொள்கிறார். பதினெட்டாம் பெருக்கன்று நாஸா போகும் வழியில் ஏற்பாடு செய்த பிக்னிக்கை என்னால் மறக்க முடியாது. அந்தச் சாப்பாட்டைப் பார்த்த எனக்கு அமெரிக்காவில் இருக்கிறோமா அல்லது ஸ்ரீரங்கம் அம்மா மண்டபத் துறையில் இருக்கிறோமா என்று சந்தேகம் வந்து விட்டது. சாப்பாடு முடிந்து 'அருணோதயம்' சினிமா காட்டினார்கள். அவ்வளவு படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் விசில் அடித்துக் கொண்டும், ஹோய் என்று மகிழ்ச்சியை வெளிக்காட்டிக் கொண்டும் சினிமாப் பார்த்தது எனக்கு வேடிக்கையாக இருந்தது. சிவாஜி கணேசன் வரும்போதெல்லாம் கரகோஷம் கட்டிடத்தை அதிர வைக்கும்.

அமெரிக்காவில் எந்தப் பாகமும் ஒரே மாதிரி துப்புரவாக இருக்கிறது. அந்தத் துப்புரவு நம்ம ஊர்களில் வரவே வராதா என்று மனசு ஏங்கத்தான் செய்கிறது. நாங்கள் வந்து ஒரு மாதம் ஆனவுடன் எங்களுக்கு விஸா தீர்ந்து விட்டது. அதை நீடிக்கவோ, புதுப்பிக்கவோ மாட்டார்களாம். நாட்டை விட்டு வெளியேறி மீண்டும்தான் நுழைய வேண்டுமாம். எனவே அடுத்த நாடாகிய மெக்ஸிகோ போயிருந்தோம். மெக்ஸிகோ நம் இந்தியாவை எல்லா விதத்திலும் நினைவுபடுத்துகிறது. பேப்பர் விற்கிறவர்கள், டீக்கடை, குப்பை கூளம் முதலியவைகளைச் சர்வ சாதாரணமாகப் பார்க்க முடிகிறது.

திரும்பியதும் நாங்கள் டல்லஸுக்குச் சென்று கென்னடியைச் சுட்ட இடத்துக்குப் போனோம். இங்கே கென்னடி டல்லஸுக்கு வந்ததிலிருந்து அவர் சடலம் கடைசியாகப் புதைக்கப்பட்டது வரை சினிமாப் படமாகக் காட்டுகிறார்கள். பின்னணி இசையுடன் அவர்கள் காட்டும்போது நம்மை அறியாமல் கண்ணீர் உகுக்கிறோம். அவரது நினைவுச் சின்னமாக வைத்துள்ள மியூஸியம் பார்க்க வேண்டியவைகளில் ஒன்று.

டல்லஸில் சிங்கங்களின் சரணாலயம் இருக்கிறது. நம்ம முதுமலைக் காடுகள் மாதிரி மிருகங்கள் வாழும் இடம். உள்ளே நுழையும் போதே ஒரு காருக்கு ஒரு டேப் ரிகார்டர் கொடுக்கிறார்கள். டேப் நாம் போகும் இடங்களைக் குறித்தும் அங்கே உள்ள மிருகங்களைப் பற்றியும் கோவையாகச் சொல்லிக் கொண்டு வருகிறது. காரின் கண்ணாடியை மேலே

நன்றாக ஏற்றி விட்டுக் கொள்ளச் சொல்லுகிறார்கள். டேப் வர்ணனையின்படியே அந்தந்த இடத்தில் வன விலங்குகள் இருக்கின்றன. சிங்கம், புலி, யானை, மான், காண்டாமிருகம் எல்லாவற்றையும் கூட்டம் கூட்டமாகப் பார்த்தோம். அவைகளைத் தாராளமாகக் காட்டுக்குள் நடமாடவிட்டு நம்மைக் காருக்குள் அடைத்துப் போட்டு விடுகிறார்கள். இது ஒரு விநோதமான, மகத்தான சாதனை. யானைகள் ஆப்பிரிக்கக் காடுகளிலிருந்து வந்தவை. இளைத்து இருந்தன. அமெரிக்கச் சாப்பாடு ஒத்துக் கொள்ளவில்லையோ?

அமெரிக்காவில் வரலட்சுமி விரதம் இருந்தேன். நாலு தினுசு கொழுக்கட்டை, வடை பாயசம் எல்லாம் செய்தேன். அங்கு செய்ய வசதியும் இருந்தது. என் கணவர்தாம் மந்திரங்களைச் சொன்னவர். ஆரம்பிக்கும் போதே பாரத வருஷே, அமெரிக்கா கண்டே என்று இடத்துக்குத் தக்கபடி சொல்லிச் சிரிப்பில் ஆழ்த்தினார்.

என் பிள்ளை கிரிக்கு ஜலதோஷம் நன்றாகப் பிடித்திருந்தது. என் கைப் பக்குவமாக மிளகுப்பால் காய்ச்சிக் கொடுத்தேன். அமெரிக்க ஜலதோஷம் அதற்கெல்லாம் பயப்படவில்லை. என் கணவருக்குப் பயம் பிடித்துக் கொண்டு விட்டது. ''நீ கட்டாயம் டாக்டரிடம் கொண்டு காட்டு'' என்று அவனை நச்சரிக்கத் தொடங்கினார்.

அவர்கள் ஆஸ்பத்திரிக்குப் போய்த் திரும்பிய பிறகு அங்கே நடந்ததை என் கணவர் கதை கதையாகச் சொன்னார். கிரியைத் தன் உடைகளைக் களையச் செய்து ஆஸ்பத்திரி உடை அணிவித்தார்களாம். பிறகு அவசர வார்டுக்கு அழைத்துப் போனார்களாம். ஜுரத்தின் அளவு, ரத்தக் கொதிப்பு, இ.ஸி.ஜி., எக்ஸ்ரே எல்லாம் பார்த்து கம்ப்யூட்டருக்குத் தகவல்களைக் கொடுத்தார்களாம். கம்ப்யூட்டர் கொடுத்த சீட்டை ஒரு சீன டாக்டர் பரிசீலனை செய்துவிட்டு, மருந்து எழுதிக் கொடுத்தாராம். என் கணவர் இதையெல்லாம் பார்த்துவிட்டு, கிரிக்கு ஏதோ பெரிதாக வந்து விட்டது என்று நிர்மானித்து விட்டார். பயந்து கொண்டே மருந்துச் சீட்டைப் பார்த்தால் ஒரு சர்வ சாதாரண இருமல் மருந்து!

''இந்த ஊர் டாக்டர்கள் எதையும் நன்றாகச் சோதித்துத்தான் மருந்தே கொடுப்பார்கள். வேறு ஒன்றும் கெடுதல் இல்லை என்று ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளாமல் வைத்தியத்தைத் தொடர மாட்டார்கள்'' என்றான் கிரி. ''பணம் ஒன்றும் கொடுக்கவில்லையே?'' என்றேன். ''பில் நாளைத் தபாலில் வந்துவிடும். இன்ஷூரன்ஸ் கம்பெனிக்காரர்கள் கொடுத்து விடுவார்கள்'' என்றான். அடுத்த நாள் பில் வந்தே விட்டது. எண்பத்து மூன்று டாலர்கள்! 747 ரூபாய்! 'ஒரு சாதாரண ஜலதோஷத்துக்கு இவ்வளவு செலவா? பகவானே! இந்த ஊரை விட்டுப் போகு முன் உடம்புக்கு ஏதும் வராமலிருக்க வேண்டுமே' என்று சதா பிரார்த்தனை செய்தோம்.

வால்ட் டிஸ்னி உலகத்தைப் பார்க்க ஃப்ளாரிடா சென்றோம். சுற்றிப் பார்க்க மூன்று நாள் போதவில்லை. அவருக்குத்தான் எத்தனை ரம்யமான கற்பனைகள்! எவ்வளவு அழகுற அந்த உலகத்தை சிருஷ்டி செய்திருக்கிறார்! அதைப் பார்க்கவே கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

ஓர் இந்தியப் பெண்ணுக்குக் குழந்தை பிறந்தபோது போய்ப் பார்த்தேன். பிரசவ சமயத்தின்போது அந்தப் பெண்ணின் கணவனை மட்டும்தான் உள்ளே அனுமதிக்கிறார்கள், மனைவி படும்பாட்டை அவரும் பார்க்கட்டும் என்ற கருத்தில். பிரசவம் ஆகி அரை மணிக்கெல்லாம் ஒரு பெரிய பாத்திரம் நிறைய ஐஸ்கிரீம், ஒரு ஜாடி சூப், கறிகாய்கள் இத்யாதியைக் கொடுத்துச் சாப்பிடச் சொல்கிறார்கள். இரண்டாம் நாளே ஷவரில் தலைக்குக் குளிக்கச் சொல்கிறார்கள். மூன்றாம் நாள் குழந்தையுடன் வீட்டுக்கு அனுப்பி விடுகிறார்கள். இரு நர்ஸ்கள் கார்வரை குழந்தையைக் கொண்டு விட்டுச் சிரித்த முகத்துடன் வழி அனுப்புகிறார்கள். குழந்தைக்குப் பால் புட்டிகள், பழ ஆகாரம், துணிமணி போன்ற வண்டி சாமான்களைப் பரிசாகவும் கொடுக்கிறார்கள். பில் எவ்வளவு தெரியுமா? இரண்டாயிரம் டாலர்கள். நம் ஊர்ப் பணத்துக்குப் பதினெட்டாயிரம் ரூபாய்! மூன்றாம் நாளிலிருந்து தன்னையும் பார்த்துக் கொண்டு வீட்டையும் பார்த்துக் கொண்டு குழந்தையையும் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்தச் சமயத்தில்தான் இந்தியாவில் ஏதோ ஓர் ஊரில் இருக்கும் அம்மாவையும், பாட்டியையும் ஏன், மாமியாரைக்கூட நினைத்து மனசுக்குள் அழத் தோன்றும்.

ஒவ்வொரு குடும்பத்தில் இருப்பவர்களும் ஆளுக்கொரு கார் வீதம் வைத்திருக்கிறார்கள். அவற்றுக்குத் தனியான கார் ஷெட்டுகள் கிடையாது. எல்லாக் கார்களும் வீட்டு வாசலில் வரிசையாக நிற்கும். சின்னக் கார்கள் அதிகம் இல்லை. எல்லாமே கப்பல் மாடல்தான். மழையில் நனைந்து, வெய்யிலில் காயும் அந்த விலையுயர்ந்த கார்களைப் பார்க்க எனக்கு கஷ்டமாக இருக்கும். ஆனால் கார் சொந்தக்காரர்கள் கவலைப்படுவதே இல்லை. அவர்கள் தாம் ஒரு காரை ஒரு வருஷத்துக்கு மேல் வைத்துக் கொள்வதில்லையே?

நான்கு மாதங்கள் நான்கு நிமிடமாகக் கழிந்து விட்டன. புதிதாக ஏற்பட்ட நண்பர்களைப் பிரிவதே கஷ்டமாக இருந்ததென்றால் பிள்ளையைப் பிரிந்து வரவேண்டுமே என்று அழுது முகம் வீங்கி விட்டதில் வியப்பில்லை. ''அம்மா! எப்படி உன் அமெரிக்கப் பயணம்?'' என்று கேட்டான் என் பிள்ளை ஒரு பத்திரிகை நிருபர் போல.

''இங்கு நீங்கள் எல்லோரும் இந்தியாவில் லட்சாதிபதிகள் அனுபவிக்கும் வசதிகளை வெகு சுலபமாக அனுபவிக்கிறீர்கள். இந்த அழகான தேசத்தை அடிக்கடி நினைத்துக் கொள்வேன். காலம் அனுமதித்தால் மீண்டும் நானும் அப்பாவும் இந்த நாட்டுக்கு வருவோம். அப்போது நீ சொந்த வீடு வாங்கியிருப்பாய். கல்யாணம் ஆகிக் குழந்தைகளும் இருப்பார்கள். இப்போது பார்க்காமல் விட்டுப் போன இடங்களுக்கு அழைத்துச் சென்று காட்டுவாய். நீ இந்தியாவுக்கு வரும்பொழுது எவ்வளவு மகிழ்ச்சியோடு வருவாயோ அதே மகிழ்ச்சியுடன் நாங்களும் இங்கு வருவோம்'' என்றேன்.

அன்றும் இன்றும் சிலருக்கு அதே இளந்தளிர் மேனி!





கனிவான பியர்ஸ் சோப்பினால் காத்திடுவீர்
உங்கள் மேனி மெருகை. மாணிக்கப் படிகம்போல்
மிளிரும் ஒவ்வொரு வில்லையிலும் ஒரு நூற்றாண்டு
கால சோப்-உற்பத்தி அனுபவம் உள்ளிறங்கியுள்ளது.
மிக்க மென்மை கொஞ்சும் பியர்ஸ்—தூய்மைக்
கொழுந்து—கண்கூடாக நீங்கள் ஊடுருவிப்
பார்க்கக்கூடிய உன்னதத் தூய்மை.

பியர்ஸ் சருமக் களை...
கன்னிப் பருவக் களை

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லின்டாஸ்-PS. 56-140 TH

பண்டிட் P.S. ராமசர்மாவின்

சக்தீசஞ்சீவி

குழந்தைகளின்
ஈரல், குலைக்கட்டிகளுக்கு.

எமது வைத்தியரின் மாதாந்திர சுற்றுப் பிரயாண விபரம் II

ஊர்	தேதி	நேரம்		தங்கும் இடம்
கோவில்பட்டி	12	காலை	10-00 -- 11-00	மணி அண்டு கோ., மெயின் ரோடு.
திருநெல்வேலி ஜங்ஷன்	12	மாலை	3-00 -- 6-00	பாம்பே நூரால் லாட்ஜிங் ஹவுஸ், மெயின் ரோடு
அம்பாசமுத்திரம்	13	காலை	9-00 -- 10-00	Dr. மகாதேவ அய்யர் வீடு, கீழ ரத வீதி.
தென்காசி	13	மாலை	3-00 -- 5-00	ஷண்முகம் மெடிகல் ஸ்டோர்ஸ், வடக்கு ரத வீதி.
ராஜபாளையம்	14	காலை	10-00 -- 11-00	ஸ்ரீ R. A. முத்துசாமி பிள்ளை மெடிகல் ஸ்டோர்ஸ், பாங்கு ரோடு.
ஸ்ரீவில்லிபுத்தூர்	14	காலை	11-30 -- 12-30	ஸ்ரீ A. L. நாராயணஅய்யர், ஜவுளிக்கடை, கந்தாடைத் தெரு.
பெரியகுளம்	14	மாலை	5-00 -- 6-30	யூனைடெட் மெடிகல் ஸ்டோர்ஸ், கடை வீதி.
திண்டுக்கல்	15	காலை	8-00 -- 9-30	K. M. மெடிகல் ஸ்டோர்ஸ், அம்மன் சன்னதி தெரு.
நாமக்கல்	15	மாலை	3-30 -- 4-30	கஸ்தூரிபா மெடிகல் ஸ்டோர்ஸ், பரமத்தி ரோடு.
ராசிபுரம்	15	மாலை	5-30 -- 6-30	ராசிபுரம் மெடிகல் ஸப்ளைஸ்.
சேலம்	16	காலை	9-11	லக்ஷ்மி ராஜ்பவன், (டவுன் ஸ்டேஷன் எதிர்புறம்)
,,	16	மாலை	3 - 5	
,, செவ்வாய்பேட்டை	16	மாலை	1-30 -- 2-30	பிரபாத் மெடிகல் ஸ்டோர்ஸ், கடை வீதி.
தர்மபுரி	17	காலை	10-30 -- 12-00	P. S. வெங்கடேஸ்வரய்யர் வீடு, யூனியன் ஆபீஸ் தெரு
கிருஷ்ணகிரி	17	மாலை	4-00 -- 5-00	No. 4, சென்னை ரோடு.
திருப்பத்தூர் N. A.	18	காலை	9-00 -- 10-30	சாரதா மெடிகல் ஸ்டோர்ஸ், கடை வீதி.
வேலூர் N. A.	18	மாலை	4-00 -- 5-00	A. S. A. அண்டு கோ., லாங் பஜார்.
பெரிய காஞ்சிபுரம்	19	காலை	9-00 -- 10-00	H. மாதவன் அண்டு கோ., ராஜ வீதி.
சென்னை	19	மாலை	3-30 -- 5-00	SP. S. S. கெமிஸ்ட்ஸ், பாண்டிபஜார், தி. நகர்.
சென்னை	20	காலை	9-00 -- 11-00	P. L. R. அண்டு கோ., 68, பெரிய தெரு, திருவல்லிக்கேணி.
சென்னை	20	மாலை	3-00 -- 5-00	M/s. அல்லயன்ஸ் கம்பெனி, 156, ராமகிருஷ்ண மடம் ரோடு (மேற்கு மாட வீதி) மைலாப்பூர்.
செங்கற்பட்டு	21	காலை	10-00 - 11-00	அம்பீஸ் ஸ்டோர்ஸ், பெரிய செட்டித் தெரு.
திண்டிவனம்	21	மாலை	3-00 -- 4-00	ஜெயராம் மெடிகல் ஸ்டோர்ஸ், கடைவீதி (முன்சிப் கோர்ட் எதிர்புறம்(
விழுப்புரம்	21	மாலை	5-00 -- 6-00	மீனாட்சி டுபாக்கோ கம்பெனி, திரு. வி. க. ரோடு.
திருவண்ணாமலை N. A.	22	காலை	8-30 -- 10-00	பாரத் லாட்ஜ், கிழக்கு ரத வீதி.
திருக்கோவிலூர்	22	காலை	11-00 -- 12-00	ஸ்ரீ கிருஷ்ண மெடிகல் ஹால், சன்னதி தெரு.
கடலூர் N. T.	22	மாலை	4-00 -- 5-30	மணி பார்மஸி, நேபியர் ரோடு, மஞ்சக்குப்பம்.
நெய்வேலி	23	காலை	9-11	ப்ளாக் 13, வைதீக சமாஜம், தீபசாலை.
,,	23	மாலை	4 - 6	
கள்ளக்குறிச்சி	24	காலை	8-30 -- 9-30	தி மெடிகல் சப்ளைஸ், கடை வீதி.
ஆத்தூர்	24	காலை	11-00 -- 12-00	வாஸவி மெடிகல் ஸ்டோர்ஸ், கடை வீதி.
துறையூர்	24	மாலை	3-30 -- 5-00	M. V. மளிகை அண்டு ஷாப், கடை வீதி.
பெங்களூர்-3	26	காலை	9-11	14, V. கிராஸ் ரோடு, மல்லேஸ்வரம்.
,,		மாலை	3 - 5	

குறிப்பு: பிரதி இங்கிலீஷ் மாதம் 10, 25 தேதிகளில் மாலை 4 முதல் 6 மணி வரை எமது வைத்தியர் மயூர வைத்தியசாலை B-11, 1வது கிராஸ், தில்லை நகர், திருச்சி என்ற விலாசத்தில் முகாம் செய்கிறார்.

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்தியசாலை, கரூர் (போன்: 87)
திருச்சி ஜில்லா



மதிப்புப்போட்டு மாளாது!

வேய்ங்குழல் வித்வான் திரு டி. விசுவ நாதன் தியாகப் பிரும்மத்தின் திருவுருவம் அச்சடிக்கப்பெற்ற 'டி-ஷர்ட்' அணிந்திருந்தது புதுமையாக இருந்தது. அமெரிக்காவில் உள்ள வெஸ்லியன் பல்கலைக் கழகத்தில் வாய்ப்பாட்டும், புல்லாங்குழலும் போதிக்கும் 'விசுவம்' வீணை தனம்மாளின் பேரர். அந்த 'டி-ஷர்ட்' பற்றி அவரே விளக்குகிறார்.


''அமெரிக்காவில் தியாகப்பிரும்ம ஆராதனை நிகழ்ச்சியையொட்டி தியாகையர்வாளின் திருவுருவம் அச்சிட்ட இதுபோன்ற 'டி-ஷர்ட்'-டுக்கள் இசையார்வமுள்ளவர்களுக்கும் இசை பயிலும் மாணவர்களுக்குமெனத் தயாரித்தோம். இதேபோன்று ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்சிதரின் உருவத்துடன் கூடிய நூறு 'டி-ஷர்ட்'டுகள் தீட்சிதரின் இருநூறுவது ஆண்டு விழாவினையொட்டித் தயாரித்து விநியோகம் செய்தோம். அமெரிக்காவின் இருநூறுவது ஆண்டு விழா நிகழ்ச்சியுடன் தீட்சிதரின் இருநூறுவது ஆண்டு விழாவும் சேர்ந்து கொண்டது எவ்வளவு அபூர்வமான பொருத்தம்!''

''நீங்கள் எப்போது முதன் முதலாக அமெரிக்கா சென்றீர்கள்?''

''1958ல் சென்றேன். படிப்பதற்காகத்தான் கலிபோர்னியா போனேன். பிறகுதான் இசை பயிலுவிக்கத் தொடங்கினேன். அப்போதுதான் கர்நாடக இசை அமெரிக்காவில் பிரபலமாகியது எனலாம். அதற்கு முன்னர், இந்திய இசை என்றால் சிதார்தான் என்று அவர்கள் எண்ணி வந்தார்கள். ரவிசங்கர் (அட்டைப்படம்) 1952-53 ஆண்டு அளவிலேயே அமெரிக்கா சென்று சிதார் மூலம் அமெரிக்க மக்களைக் கவர்ந்திருந்தார். ரவிசங்கர் முன்பு தாமே ஓர் இசைப் பள்ளியை அமெரிக்காவில் நடத்தி வந்தார். இப்போது அது செயல்படவில்லை. பள்ளி மூடப்பட்டுவிட்டாலும் ரவிசங்கரின் புகழ் அமெரிக்காவில் ஓங்கிப் பரவியுள்ளது.

சிதார் வாத்தியம் அமெரிக்கர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது. இப்போது பல அமெரிக்கர்கள் அங்கு சிதார் வாசிக்கிறார்கள். ஜிம் பாமராண்ட்ஸ் என்பவர் மூன்றே விரல்களால் அற்புதமாக வாசிக்கிறார்.''

ரவிசங்கர் தவிர வட இந்திய இசையை அமெரிக்காவில் பரப்பிய பல்வேறு இந்தியக் கலைஞர்கள் பற்றிக் கூறுகிறார் திரு விசுவநாதன். தென் நாட்டிலே நாமே அதிகமாகக் கேள்விப்பட்டிராத பீன், சரஸ்வதி வீணை, சூர் பஹார், சந்தூர் போன்ற வாத்தியங்களைக் கூட அமெரிக்க மாணவர்கள் ஆவலுடன் பயிலுகிறார்கள் என்பதை அறியும்போது வியக்காமல் இருக்க முடியுமா?







1. வட இந்திய இசையை அமெரிக்காவில் பரப்பிப் பெரும் புகழ் ஈட்டிய மன்னர்கள் அலி அக்பர், ரவி சங்கர், அல்லா ரக்கா. பாலசுப்பிரமணிய சங்கீத சபா ஆதரவில் சென்னையில் சமீபத்தில் நடைபெற்ற ஜுகல்பந்தி கச்சேரியின் போது எடுத்த படம்.

2. அமெரிக்காவில், அமெரிக்கர்களால், அமெரிக்கர்களுக்காக நடக்கும் கர்நாடக இசைக் கச்சேரி!

3. அமெரிக்காவில் தீட்சிதர் தினம் — விசுவநாதன் குழல்; ரங்கநாதன் மிருதங்கம்; எல். சுப்பிரமணியம் வயலின்.

அப்போது அந்த ஹாலுக்குள் நுழைந்து எனது அருகில் வந்து அமர்ந்த தமது சகோதரரை எனக்கு அறிமுகம் செய்து வைக்கிறார் விசுவம்.

உலகிலேயே உயரமான ஓட்டல்

அமெரிக்காவிலுள்ள ஜார்ஜியா மாநிலத்தில் அட்லாண்டா நகரில் 660 அடி உயரமுள்ள ஓட்டல் ஒன்று உருவாகி வருகின்றது. உருளை வடிவத்தில் அமைந்துள்ள இந்த பிளாஸா ஓட்டலில் 1100 அறைகள் உள்ளன. இந்த 70 மாடிக் கட்டடத்தின் அடித் தளத்தில் 500 கார்கள் நிறுத்தி வைக்க வசதி செய்யப்பட்டுள்ளது. இது கட்டி முடிக்கப் பெற்றதும் உலகிலேயே இதுதான் மிக உயரமான ஓட்டலாகத் திகழும்.

ஸ்பான் — ஆர். பி.

''என் அண்ணா ரங்கநாதன். 'ரங்கா' என்று சுருக்கி அழைக்கிறார்கள், இவரது அமெரிக்க மாணவர்கள். இவர் இல்லினாய்ஸ் பல்கலைக் கழகத்தில் கடம், மிருதங்கம், கஞ்சிரா ஆகிய வாத்தியங்களில் பயிற்சி அளித்து வருகிறார். அமெரிக்காவில் ஏறக்குறைய பத்துப் பல்கலைக் கழகங்களில் இந்திய இசையிலும் இசைக் கருவிகளிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இங்கெல்லாம் சென்று பணியாற்றியும், கச்சேரிகள் செய்தும் திரும்பியுள்ள கலைஞர்களின் பெயர்ப் பட்டியலைக் கேட்டதும், அமெரிக்கா, சென்றிராத பிரபல கர்நாடக இசைக் கலைஞர்களே அநேகமாகத் தமிழ் நாட்டில் இருக்க மாட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது!

விசுவம் தொடர்ந்து கூறுகிறார்:

''இன்று அமெரிக்காவில் இந்திய இசை பயிலும் மாணவர்களின் முன்னோடிகளாகத் திகழும் அமெரிக்கர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் டாக்டர் ஹெரால்ட் பவர்ஸ், டாக்டர் இ. ப்ரௌன், டாக்டர் ஹிக்கின்ஸ். ஹிக்கின்ஸ் டொராண்டோவிலுள்ள யார்க் பல்கலைக் கழகத்திலும், பவர்ஸ், பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்திலும் பணியாற்றுகின்றனர்.''

அமெரிக்க மாணவர்களுக்குக் கர்நாடக இசையில் உள்ள ஈடுபாட்டுக்கு ஒரு சான்று கூறுகிறார், ரங்கநாதன்: ''ரகுவிடம் முன்பு மிருதங்கம் பயின்ற டக்ளஸ் நைட் என்ற மாணவர் இப்போது என்னிடம் பயிற்சி பெறுகிறார். தினமும் ஆறு மணி நேரம் அலுக்காமல் அப்பியாசம் செய்கிறார். ரஸ்டி ஜில்லெட் என்ற மாணவருக்குக் கடமும் மிருதங்கமும் நாள்தோறும் ஐந்து மணி நேரம் வீதம் பயிற்சி அளித்திருக்கிறேன். விரல்களில் ரத்தக் கசிவு ஏற்படும்வரையில் சளைக்காமல் வாசிப்பார்கள்.''

''அமெரிக்கர்கள் பலருக்கு நமது பண்பாடு சரிவரத் தெரியாத காரணத்தால், அவர்கள் இசைப் பயிற்சியின்போது நடந்து கொள்ளும் விதம் நமக்கு விசித்திரமாக இருக்கும். ஒருவர் மிருதங்கத்தின் மீது இரு கால்களையும் தூக்கிப் போட்டுக் கொண்டு உட்காருவார். அந்த வாத்தியம் புனிதமானது என்பதை விளக்கிச் சொன்னால் உடனே தம்மைத் திருத்திக் கொள்வார். ஒரு தடவை திரு எஸ். ராமநாதன் வகுப்புக்கு வந்த போது தரையில் மெத்தை விரிக்கப் பட்டிருந்தது. ஒரு மாணவர் ஆசிரியர் ராமநாதனுக்கு எதிரே காலை நீட்டி உட்கார்ந்திருந்தார். இன்னொருவர் சுவரில் சாய்ந்தவாறு கன்னத்தில் கையை ஊன்றிக்கொண்டிருந்தார். இப்படியெல்லாம் அவர்கள் நடந்து கொண்டதைக் கண்ட ராமநாதனுக்குப் பாடவே தோன்றவில்லை. அடுத்த நாள் வகுப்பு தொடங்கு முன்பு, கர்நாடக இசை பயிலுவோர் தெரிந்து கொள்ள வேண்டிய சில அடிப்படைப் பண்புகள் பற்றி அரை மணி நேரம் டாக்டர் ப்ரௌன் விளக்கினார். அதன் பிறகு திரு ராமநாதன் நிகழ்த்திய வகுப்புக்களில் மாணவர்கள் அனைவரும் 'வணக்கம்' தெரிவிப்பதை முதற் கடமையாகக் கொண்டார்கள்; அடக்கத்துடன் அமர்ந்தார்கள்.

''ராமநாதபுரம் கிருஷ்ணன் தமது மனைவியிடம், ''குஞ்சலம்நீ ஒருத்திதான் பேரைச் சொல்லி என்னை இன்னும் அழைக்கவில்லை!'' என்று வேடிக்கை செய்ததுண்டு. அங்கே அமெரிக்க மாணவர்கள் அனைவரும் குருவைப் பெயர் சொல்லியே அழைப்பார்கள்.

''ஆசிரியர் தமது சொந்த வேலை காரணமாக ஒரு வகுப்பை ஒத்திப் போட்டால் மாணவர்கள் அதனைப் பொறுக்க மாட்டார்கள். பல்கலைக் கழகப் பதிவாளருக்குப் புகார் எழுதிவிடுவார்கள். நேரத்தின் அருமையை உணர்ந்தவர்கள் அவர்கள் என்பது ஒருபுறமிருக்க, ஒரு வகுப்புக்கு ஆசிரியருக்குக் கிடைக்கிற ஊதியம் 25–30 டாலர் ஆகும். அந்தப் பணம் வீணாக அனுமதிக்க மாட்டார்கள்.

''பரதநாட்டியம், கதக், கதகளி முதலிய இந்திய நாட்டிய வகைகளையும் அமெரிக்கர்கள் விரும்பிக் கற்றுக் கொள்கிறார்கள். திருமதி பாலசரஸ்வதி 1962 முதல் பரதக் கலையை அமெரிக்க மாணவிகளுக்குக் கற்பிக்கிறார். கமலா, வைஜயந்தி ஆகியோரும் பயிற்சி அளித்துள்ளனர். பத்மினியும் இப்போது அங்கு பரதக் கலையில் பலருக்குப் பயிற்சி அளித்துவருகிறார்'' என்கிறார் விசுவம்.

பார்க்லி பல்கலைக் கழகத்தில் சுவாதித் திருநாள் சாகித்தியங்களை அமைத்து 'தசாவதாரம்' அரங்கேற்றினாராம், திரு விசுவநாதன். சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு அமோக வரவேற்பு இருந்ததாம்.

நான் அவர்களிடம் விடைபெறு முன், 'ஸ்ரீ சங்கராச்சாரியம்' என்ற சங்கராபரண கீர்த்தனையை ஜோஸஃபா கோர்மாக் என்ற அமெரிக்க மாணவி பாடியதை 'டேப்'பில் பதிவு செய்திருந்ததைப் போட்டுக் காண்பித்தார் விசுவம். சுருதி சுத்தமான சங்கீதம்; சொற்களைத் தெளிவாக அவர் உச்சரித்தது என்னை வியப்பில் ஆழ்த்தியது. டக்ளஸ் நைட் என்பவர் வாசித்துள்ள ஒரு மிருதங்க ஆவர்த்தனத்தையும் டேப்பில் கேட்டேன். பி.எச்டி. மாணவராம். கேட்பானேன், சொற்கட்டுக்கள் பிரமிப்பூட்டும் வகையில் சுநாதமாக அமைந்திருந்தன.


அமெரிக்காவிடமிருந்து கோதுமை முதல் மாபெரும் இயந்திரங்கள் வரை எவ்வளவோ பெறுகிறோம். முடிந்தவரை ஏற்றுமதியும் செய்கிறோம். அதற்கெல்லாம் டாலர், ரூபாய்க் கணக்கில் மதிப்புப் போடலாம். ஆனால் இந்தக் கலாசார ஏற்றுமதிக்கும் ஆன்மிக மறுமலர்ச்சி ஏற்றுமதிக்கும் மதிப்புப் போட்டு மாளாது அல்லவா? — 'பாணன்'

மலரும் பூவெனப் பிள்ளை வளர்ந்திடப் பலமான துணை—

இன்க்ரிமின்*

பட்டுப் போன்ற பாப்பாவின் வளர்ச்சியிலே—முதலிரண்டு ஆண்டுகள்...மொட்டு விரியும் நேரம்—சிட்டுப்போல் பறக்க சிறகு முளைக்கும் பருவம்—இந்த முக்கியமான பருவத்திலே உங்கள் கண்மணிக்குக் கட்டாயம் தேவை—இன்க்ரிமின்.பின்னர் பாருங்களேன் அவன் வளர்ச்சியை! பசித்துப் புசிப்பான்...உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்களோடு, உங்கள் மகனின் வளர்ச்சிக்கு மிக மிக அத்தியாவசியமான அமினோ அமிலம், லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.





இன்க்ரிமின்* டானிக்

டிராப்ஸ்—2 மாதங்கள் முதல் 2 வயது வரையில்
ஸிரப்— 14 வயது வரையில்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும்—உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்—
Lederle ஸயனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு

*அமெரிக்கன் ஸயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்

Sista's-INC-364C-R/76 Tam

24. மீண்டும் மரகதத் தீவு

தொன்றுதொட்டு வந்ததொரு தொந்தம்
கொன்றை மலரால் இணைந்த சொந்தம்

முதல் இலங்கை யாத்திரைக்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, 1950 ஆகஸ்டு மாதத்தில், இரண்டாம் தடவையாக அந்த மரகதத் தீவுக்குக் கல்கி சென்று, ஒரு வாரம் சுற்றுப் பிரயாணம் செய்தார். அந்த இரண்டாவது பயணத்தை மூன்று தோரணைகளில் மூன்று காரியங்களுக்காக அவர் மேற்கொண்டார் —

முதலாவது : செல்வாக்கு மிக்க பத்திரிகாசிரியர் இலக்கியவாதி என்ற தோரணையில், கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாவில் தலைமை வகிப்பதற்காக.

இரண்டாவது: அவிநாசிலிங்கம் செட்டியாரைத் தலைவராய்க் கொண்ட தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் கௌரவச் செயலாளர் என்ற தோரணையில், அந்தச் சங்கத்தின் ஆதரவில் நாலாவது தமிழ் விழாவை இலங்கை அமைச்சர் கே. கனகரத்தினம் விடுத்த அழைப்பின்படி யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்வதற்காக — அல்லது அந்தப் பக்கத்துத் தமிழில் ''ஒழுங்கு'' செய்வதற்காக. (இந்தக் காரியத்துக்காகவே அக் கழகத்தின் இணைச் செயலாளரும் ''கலைக் களஞ்சியம்'' ஆசிரியருமான பெரியசாமித் தூரன் அவருடன் பயணம் செய்தார். கல்கியின் சொந்தச் செயலாளர் நாராயணசாமியும் உடன் சென்றார்.)

மூன்றாவது: ''பொன்னியின் செல்வன்'' நாவலைத் தொடராக எழுதத் துவங்கி இருந்தவர் என்ற தோரணையில் அதற்கு வேண்டிய ஈழத்துக் காட்சிகளைக் காண்பதற்காக.

ஒரு புகழ் மண விஜயமாகவும் அமைந்த அந்த மூன்று நோக்கப் பயணம், 18ம் தேதி சென்னை மீனம்பாக்கம் விமானக்கூடத்திலிருந்து தொடங்கிற்று. அந்தத் தொடக்கம் பற்றி, பின்னர் கல்கி எழுதிய ''இலங்கையில் ஒரு வாரம்'' என்ற தொடர் கட்டுரையிலிருந்து —

எங்களை இலங்கைக்கு ஏற்றிச் செல்வதற்காகக் காத்திருந்த விமானத்தின் முன் பகுதியில் ''சீதா தேவி'' என்று எழுதியிருந்தது. இதுபற்றி நண்பர் ஸ்ரீ பெரியசாமித் தூரனுக்கு மிகவும் சந்தோஷம். ''முன் காலத்தில் அன்னை சீதா தேவியைக் கண்டுபிடித்து வருவதற்காக அனுமான் ஆகாய மார்க்கமாய் இலங்கைக்குச் சென்றார். இப்போது அன்னை சீதா தேவி குழந்தைகளாகிய நம்மை இலங்கைக்குக் கொண்டு போகிறார்'' என்று சொல்லி ஆனந்தப்பட்டார்....

அந்த மரகதத் தீவின் இயற்கை வளங்களை மேலிருந்து பார்த்துக் கொண்டே கொழும்பு போய்ச் சேர்ந்தோம். தமிழ்ச் சங்கத்து நண்பர்கள் ஏற்பாடு செய்திருந்தபடி டாக்டர் நல்லநாதன் அவர்களுடைய இல்லத்தில் தங்கினோம்.

(கல்கி இதழ் 10-9-50)

கொழும்பு போய்ச் சேர்ந்ததும் எப்பேர்ப்பட்ட வரவேற்பு அளிக்கப்பட்டது என்பதை வேண்டும் என்றே கல்கி சொல்லாமல் விட்டு விட்டார். அவர் விட்டதை, ''தமிழ் நேசன்'' பத்திரிகைக்கு அதன் இலங்கை நிருபர் அனுப்பிய செய்திக் கடிதத்திலிருந்து பார்ப்போம் :

பொன்னியின் புதல்வர்



சுந்தா

கல்கிக்கு இலங்கையில் கிடைத்த அமோக மாலை வரவேற்பைக் கண்டு தமிழ் எழுத்தாளர்கள் உண்மையில் பெருமை அடைய வேண்டும். பெரிய பெரிய ராஜதந்திரிகளுக்கு நிகரான வரவேற்பு எழுத்தாளர்களுக்குக் கிடைப்பது என்றால், அது எழுத்தாளர் பரம்பரைக்கே பெருமை அளிக்கக் கூடிய விஷயம்தானே? ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி விமான நிலையத்தில் வந்திறங்கியவுடன் அவருக்கு மலர் மாலைகள் அணிவித்து நல்வரவு கூறினார்கள். அநேகம் அரசாங்க அதிகாரிகள் உள்பட பல பிரமுகர்கள் திரளாக விமான நிலையத்துக்கு வந்திருந்து கல்கியை உற்சாகத்துடன் வரவேற்றனர். இவ்வளவு பிரமாதமான வரவேற்பை உண்மையில் கல்கி எதிர்பார்த்திருக்க மாட்டார்.

(தமிழ்நேசன் 29-8-50)

கல்கிக்குக் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் க. ச. அருள்நந்தியும், பெரியசாமித் தூரனுக்குச் சங்கக் காரிய தரிசி வித்துவான் வ. மு. கனககந்தரமும், எல்லாருக்கும் முன்னதாக முகமன்



★ யாழ்ப்பாணம் திரு க. நடேசப் பிள்ளை தம்பதி சென்னைக்கு வந்திருந்தபோது கல்கி தம்பதி அவர்களைத் தமது இல்லத்தில் வரவேற்று உபசரித்தனர்.

கூறி வரவேற்ற செய்தியை ''வீரகேசரி' அறிவித்து, அத்துடன் நிருபர் பேட்டி ஒன்றையும் வெளியிட்டது.

போய்ச் சேர்ந்த மறுநாள் தமிழ்ச் சங்க ஆண்டு விழா, வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் ஆரம்பமாயிற்று. அதில் கல்கி, ''கவிஞர் பரம்பரை'' என்ற பொருள் பற்றி, வழக்கம் போல் நகைச்சுவையுடன் தொடங்கிக் கவிச்சுவையைப் பொழிந்து பேசினார். திருவள்ளுவர் முதல் தேசிக விநாயகம் பிள்ளை வரையிலான பரம்பரையில், எவ்வாறு உயரிய கவிஞர்கள் எல்லாம் அரும்பெரும் விஷயங்களை மிக எளிய சொற்களில் பொதிந்து அளித்திருக்கிறார்கள் என்பதை; உதாரணங்களுடன் எடுத்துச் சொன்னார். மறுநாள் தலைமை உரையில், சுருங்கச் சொல்லிப் பெருக விளங்கவைக்கும் தமிழின் ஆற்றலைப் பற்றி வியந்தும் வியப்பூட்டியும் பேசினார்; தமிழுக்கு எவ்வளவு சக்தி உள்ளது என்பதைக் காட்டிய ஆறுமுக நாவலரைப் போற்றினார்.

அடுத்த இரண்டு நாட்களில் கல்கியும் தூரனும் இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்திலும், சாஹிராக் கல்லூரி மாணவர் கூட்டத்திலும் பேசினார்கள்.


21ந் தேதி சிலோன் வானொலியில் எலியாஸ் என்ற பெண்மணி கல்கியைப் பேட்டி கண்டார். மாதிரிக்கு ஒரு கேள்வியும் அதற்குக் கல்கி வேடிக்கையாகச் சொன்ன பதிலும்:

''தங்கள் பத்திரிகைக்கு நம் நாட்டில் உள்ள ஆதரவு வேறு எந்தப் பத்திரிகைக்கும் இல்லை என்றே சொல்லலாம். அதற்குக் காரணம் தங்கள் முகவசியமா? தங்கள் பேனா முனையின் வசியமா?''

''முக வசியத்தைப் பற்றிக் கேட்கிறீர்களே, எனக்குப் பதிலாக என் தாயாரை அல்லவா கேட்டிருக்க வேண்டும்? காக்கைக்கும் தன்

★ சென்னையில் ஐந்தாவது தமிழ் விழா - 1952 கல்கிக்கு வலப்பக்கத்தில் அம்பிகைபாகன், இடப் பக்கத்தில் அரியரத்தினம். மேல் வரிசையில் இடது கோடியில் திரு பெ. தூரன்.





சென்னைவாசிகள் என்று சொல்வதுபோல் அமெரிக்காவிலுள்ள ஒரு நகரைச் சேர்ந்தவர்களை விசித்திரவாசிகள் என்று சொல்லலாம். அந்த நகரின் பெயர் Peculiar.

— நேஷனல் ஜியாகரபிகல் - ஆர். எம்.

குஞ்சு பொன் குஞ்சு என்பார்கள். என் தாயாருக்கு என் முகம் ரொம்ப வசியமாகத் தான் இருந்திருக்க வேண்டும். எனக்குத் தெரியாது. என் பேனாவிடம் மட்டும் ஒரு வசிய சக்தி இருக்கிற தென்பதை நான் சில சமயம் சந்தேகித்தது உண்டு. திடீர் திடீரென்று என்னுடைய பேனா யாருடைய கண்ணிலாவது பட்டு வசியம் செய்து விடும். அப்புறம் பேனா மறைந்துவிடும்.' பேனா வாங்கி வாங்கி அலுத்துப் போய், இப்போது நான் என்ன செய்கிறேன் என்றால், என்னுடைய பேனாவை நான் நம்புவது கிடையாது. எப்போது எழுதுகிறதாய் இருந்தாலும் பிறருடைய பேனாவை இரவல் வாங்கியே எழுதிக் கொண்டிருக்கிறேன்.''

அன்றிரவு கல்கியும் தூரனும் கப்பித் தாவத்தையில் வி. எஸ். சாமிநாத செட்டியாரால் புதுப்பிக்கப் பெற்ற கைலாசநாதர் கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்தார்கள். அந்த ஆலயத்தின் பிராகாரத்தில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில், கோயில் திருப்பணி பற்றிப் பேசினார். ''நாட்டுக்கோட்டை செட்டியார்கள் கோவில் கட்டுவதில் லட்சக் கணக்கில் பணம் செலவிடுவது வீண் விரயம் என்று சொல்வது தவறு'' என்றார் அவர்.

கோவில்களைக் கட்டுவது தமிழர்களின் பழைய பண்பாடு. ஆதிகாலத்தில் தமிழர்கள் சாதாரணப் படகுகளில் ஏறிப் பரந்த உலகின் பல பாகங்களுக்குச் சென்று குடியேறினார்கள். சோழ, பாண்டிய மன்னர்கள், இந்தோ-சீனா, ஜாவா, சுமத்ரா, மலாயா, இலங்கை முதலான பல நாடுகளில் தங்கள் சாம்ராஜ்யங்களை விஸ்தரித்துக் கொண்டார்கள். இந்தியாவை ஆக்கிரமித்த பிரிட்டிஷார் பல கோடி ரூபாய் செலவில் தங்களுக்குத் தலைநகரமாக டெல்லியைச் சிருஷ்டித்தது போல், நமது பழந் தமிழ் மன்னர்கள் 'புதிய தலைநகரங்களைத் தங்களுக்குச் சிருஷ்டித்துக் கொண்டார்களா? இல்லை. வானளாவிய கோவில்களைக் கட்டினார்கள். இறைவனை அனைவரும் வழிபட்டு ஆத்மசக்தி அடைய வழி செய்தார்கள். அவர்கள் கட்டிய கோவில்கள் இன்னமும் அந்த நாடுகளிலே நிலைத்திருக்கின்றன. அற்புதமான ஆலயங்களைக் கட்டுவதில் செலவிடும் பணம் உண்மையில் உபயோகமானது. ஆலயங்களே, என்றென்றும் தமிழகப் பண்பாட்டையும், சிற்ப, சித்திர, கலாச்சாரப் பெருமையையும் சிரஞ்சீவித் தன்மையுடன் இருக்கச் செய்பவை. (வீரகேசரி 23-8-50)

கல்கியும் நண்பரும் 22ந் தேதியன்று யாழ்ப்பாணம் சென்று ''முடிசூடா மன்னர்'' ஸர் பொன்னம்பலம் ராமநாதனின் மருகர் சு. நடேசனின் இல்லத்தில் தங்கினார்கள். பரமேசுவரக் கல்லூரியின் தலைவரான நடேசன், கல்கி வர்ணித்துள்ளபடி, ''தாய்நாடாகிய தமிழ் நாட்டுக்கும் சேய் நாடாகிய வடக்கு இலங்கைக்கும் நீடித்து உள்ள தொடர்பிலிருந்து விளைந்த பண்பாட்டின் கனிந்த பழம்.''

அங்கே பழைய நண்பர் அம்பிகைபாகன், கல்கியுடன் தமது நட்பைப் புதுப்பித்துக் கொண்டார். அவருடன், பத்து ஆண்டுகளாகக் கல்கியை அறிந்திருந்த ''ஈழகேசரி'' ஆசிரியர் இராஜ அரியரத்தினமும் சேர்ந்து கொண்டு தமிழக அதிதிகளுடன் அளவளாவினார். அவர் மீதுள்ள பிரியம் காரணமாய் அவருடைய பெயரைக் கல்கி குழப்பி ''அரிய இராஜரத்தினம்'' என்று கூப்பிடுவது உண்டு.

கல்கிக்கும் தூரனுக்கும் பேராசிரியர் பேரின்பநாயகத்தின் தலைமையில் நகர மண்டபத்திலே பெரியதொரு வரவேற்பு விழா நடந்தது. மறுநாள், சு. நடேசனைத் தலைவராகக் கொண்ட ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கத்தின் ஆதரவில் இருவரும் தமிழிசை பற்றிப் பேசினார்கள். அந்த இரண்டு நிகழ்ச்சிகள் பற்றியும் விரிவான செய்திக் குறிப்புக்கள் ''ஈழகேசரி''யில் வந்தன. அவற்றை எழுதிய இராஜ அரியரத்தினம், ''கல்கி ஆசிரியர் தமக்கு உரித்தான கல்கித் தமிழில் சக்கைப் போடு போட்டார்'' என்று வர்ணித்து, அதே தமிழைத் தாமும் கொஞ்சம் கையாண்டு எழுதினார்.

அடுத்தாற்போல் பருத்தித் துறை சைவ ஊழிய இயக்கத்தாரின் வரவேற்பு. அதிலே அவர்கள் அளித்த விருந்தும், வாசித்து அளித்த புகழ்ச்சி கவிதைப் பத்திரமும் கல்கிக்குப் பெரிதும் களிப்பூட்டியதால், அதை அவர் பெருமையுடன் நகைச்சுவையைக் கலந்து வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

பருத்தித்துறை அன்பர்கள் எங்களுக்குக் காரசாரமான விருந்து அளித்தார்கள். பிறகு பாரகாரமான வரவேற்பும் அளித்தார்கள். ஆம். வரவேற்பு மிக மிகப் பாரமாகவே இருந்தது. இலங்கையையே தூக்கிக் கையில் கொடுத்து விட்டார்கள்! நல்ல வேளையாக, இலங்கையை நாலு சட்டத்துக்குள் புகுத்திக்





மேம்படுத்திய பக்குவம்

டி.எஸ்.ஆர்

வெஜிடபிள் ஊறுகாய்!

அதனை சுவைத்தால்
ஆயிரமாயிரம்
ருசியினை அறிந்திடுவீர்!

மற்றும் எலுமிச்சை, மாங்காய், வடுமாங்காய்,
வெங்காயம் ஊறுகாய்கள்

டி. எஸ். ஆர் & கோ., கும்பகோணம். Criterion TSR. 3320 TMD


கண்ணாடியும் போட்டிருந்தபடியால் என்னால் தாங்க முடிந்தது! (சிங்கள ஆட்சியாளர்களான) கனம் சேனநாயகா, பண்டார நாயகா குணசிங்க முதலியவர்களுடைய கண்ணில் படாமல் இந்தியாவுக்கு எடுத்துக் கொண்டு வரவும் முடிந்தது. இலங்கை தேசப்பட வடிவமாக அடைந்த அழகிய சித்திரப் பத்திரத்தில் அன்பையும், இன்பத் தமிழையும் குழைத்து இனிய கவிதையாக எழுதிக் கொடுத்தார்கள். அந்தக் கவிதையில் 'கள்வனின் காதலி'யான கல்யாணி முதல் பல கதாநாயகிகளும் கதாநாயகர்களும் பவனி வந்தார்கள்.

(கல்கி இதழ் 8-8-50)

அந்தச் சித்திரப் பத்திரத்திலிருந்து மாதிரிக்கு இரண்டு வரிகள்:

''நீ தொடாக் கலை இல்லை, நீ தொட்டு அழகுறாக்
கலையும் இல்லைக் கன்னித்தமிழ் மகனே!''

அடுத்து தமது பயணத்தின் இரண்டாவது நோக்கத்தை ஈடேற்றுவதில், கல்கியும் தூரனும் முனைந்தார்கள். கே. கனகரத்தினம் இரட்டி, சு. நடேசன் தலைமையில் நடந்த தமிழ் அன்பர்கள் கூட்டம் ஒன்றில் தமது யோசனைகளைத் தெரிவித்தார்கள். வருகிற ஆண்டு, ஏப்ரல் இறுதியில், தமிழ் விழாவை அங்கே நடத்துவது என்று அக்கூட்டத்தில் தீர்மானமாயிற்று. நடேசனின் தலைமையிலேயே ஆயத்தக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. எல்லாம் நல்லபடியாய்த் தீர்மானம் ஆனது குறித்துக் கல்கி மகிழ்ச்சி தெரிவித்து, நடக்கப் போகும் விழாவின் மூலம், தமிழகத்துத் தமிழர்களுக்கும் ஈழத்துத் தமிழர்களுக்கும் தொன்று தொட்டு உள்ள அண்ணன் — தம்பி உறவு மேலும் வலுவடைந்து ஓங்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.



நியூயார்க்கிலுள்ள ஈஸ்ட் சைட் தெரு பள்ளிப் பிள்ளைகளுக்குத் தங்கள் ஆசிரியர்கள் பெயர் பற்றிய ஒரு குழப்பம் உண்டு. சிவப்பிந்தியரான ஓர் ஆசிரியர் பெயர்: மிஸ்டர் வொயிட். நீக்ரோ ஆசிரியர்: மிஸ்டர் ரெட். ஒரு வெள்ளைக்கார ஆசிரியருடைய பெயர்: மிஸ்டர் பிளாக். - வீக் எண்டு - முத்து

அந்த மகிழ்ச்சியுடனும் நம்பிக்கையுடனும், தமது மூன்றாவது நோக்கத்தைக் கல்கி நிறைவேற்றிக்கொண்டார். அந்தத் தீவின் கடலோரப் பகுதிகளில் ''மதுரையும் ஈழமும் கொண்ட பராந்தகச் சோழன் என்ன, தமிழ் நாட்டுப் பேரரசர்களிலே இணையற்ற பெருமை வாய்ந்த இராஜராஜ சோழன் என்ன, கங்கையும் கடாரமும் கொண்ட இராஜேந்திர சோழன் என்ன, —இவர்களுடைய படைகள் இறங்கி இருக்கக் கூடிய இடங்களைப் பார்த்தார். மனத்திலே அவர் பதித்துக் கொள்ளும் காட்சிகளைச் சித்திரத்தில் பதித்துக் கொடுப்பதற்காக, ஓவியர் மணியம் கலைக் கருவிகளுடன் வந்து சேர்ந்து கொண்டார். யாழ்ப்பாணத்திலிருந்து அநுராதபுரத்துக்கும் பொலன்னருவைக்கும், சாலை வழியே கல்கியும் குழுவினரும் பயணம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நடேசன் ஒழுங்கு செய்து கொடுத்திருந்தார்—ஒரு பெரிய மோட்டார் வண்டி, மூன்று நாட்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள், சமையல் ஏனங்கள், சமையல்காரர்கள்.

அந்த வரலாற்றுப் பயணத்தில் நடேசன், பேராசிரியர் பேரின்பநாயகம், அம்பிகை பாகன், இராஜ அரியரத்தினம் ஆகியோர் துணையாய்ச் சென்றார்கள்.

அந்தப் பயணத்தின்போது கண்டவைகளைப் ''பொன்னியின் செல்வன்'' நாவலில், எப்படியெல்லாம் கதாசிரியர் என்ற முறையில் கல்கி பயன்படுத்தியுள்ளார் என்பது; விரிவான ஆராய்ச்சிக்கு உரியது. அந்த நாவலைத் தவிர, 1951 தீபாவளி மலரிலும், ''நம் தந்தையர் செய்த விந்தைகள்'' என்ற தலைப்பில் கட்டுரையாளர் என்ற முறையில் தமது நேர்முக அனுபவங்களை எழுதியுள்ளார். அதிலிருந்து, பொலன்னருவையில் அவர் அடைந்த அனுபவத்தை மட்டும் இங்கே பகிர்ந்து கொள்வோம்.

இந்தச் செத்த — சிரஞ்சீவி நகரத்தின் பாழடைந்த விஹாரங்கள், அரண்மனைகளைப் பார்த்துக் கொண்டே போனபோது, ஓரிடத்தில் நான் திடுக்கிட்டு நின்றேன். ஏனெனில் எங்களுக்கு எதிரே ஒரு கொன்றை மரம் நெடிதுயர்ந்து, சரம் சரமாய்ப் பொன்னிறப் பூக்களைத் தொங்க விட்டுக் கொண்டு நின்றது. இலங்கையில் எத்தனையோ விதமான பெரிய மரங்கள் எங்கெங்கும் இருக்கின்றன. ஆனால் வேறு எந்த இடத்திலும் கொன்றை மரத்தை நான் பார்க்கவில்லை. இங்கே மட்டும் எப்படி அது வந்து முளைத்தது? கொன்றை மரத்

தையே கேட்டு விடுவதென்று தீர்மானித்தேன்.

''கொன்றை மரமே! கொன்றை மரமே! உன்னைக் கடைசியாகப் பழையாறையில் அல்லவா பார்த்தேன். எனக்கு முன்னால் இங்கே எப்படி வந்தாய்?''

''ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு மரக்கலத்தில் வந்தேன். பழையாறைச் சுந்தர சோழரின் சைன்யங்களுடனே சேர்ந்து இங்கே வந்தேன்.''

''எதற்காக வந்தாய்? போர் செய்வதற்காகவா? உன்னைக் கூடச் சைனியத்தில் சேர்த்து விட்டார்களா? அந்நாளில் சோழ நாட்டில் வீரர்களுக்கு அவ்வளவு பஞ்சம் வந்து விட்டதா?''

''இல்லவே இல்லை; நான் சைனியத்தில் வீரனாகச் சேர்ந்து போர் செய்வதற்காக வரவில்லை. அந்த நாளில் இந்த நகரை முதன் முதலில் வென்ற சோழ சேனாதிபதி, பழையாறையில் உள்ளது போன்ற சிவன் கோவிலைக் கட்டினார். அந்தக் கோயிலைத் தமிழ் நாட்டிலிருந்து வந்த சிற்பிகள் கட்டினார்கள். கோயில் கட்டினால் பூசைக்குப் பூ வேண்டாமா? ஆகையால் சிவபெருமானுக்கு உகந்த புஷ்பத்தை அளிக்கும் என்னையும் அங்கிருந்து கொண்டு வந்தார்கள். பத்துப் பன்னிரண்டு சிவன் கோவில்களை இங்கே கட்டினார்கள். அந்தக் கோயில்களில் பல இடிந்து ஜீரணமாய்ப் போய்விட்டன. ஆனால் இறைவனைப் பூசித்த புண்ணியத்தினால் நான் மட்டும் சிரஞ்சீவியாய் இருக்கிறேன்.''

கொன்றை மரமாவது பேசவாவது என்று நாம் வியந்து கொண்டிருக்கையில், நண்பர் நடேசன் சொன்ன விவரங்களைத்தான் அப்படி கல்கி மாற்றிச் சொல்லியிருக்கிறார் என்பதை மேலே படித்தறிந்து தெளிகிறோம்.

''சேய் நாடாகிய இலங்கையில் நம் தந்தையர் செய்த விந்தைகளை எண்ணி எண்ணிப் பார்த்து வியந்து கொண்டே தாய்நாட்டுக்குத் திரும்பி வந்து சேர்ந்தேன்'' என்று அக்கட்டுரையில் கல்கி முடித்தார்.

அப்படித் திரும்பி வந்தவர், தாமும் தூரனும் யாழ்ப்பாணத்தில் தமிழ் விழாவுக்குத் திட்டப்படுத்திய விவரங்களையெல்லாம் அவிநாசிலிங்கம் செட்டியாரிடம் தெரிவித்து அவருடன் கலந்து கொண்டு, சென்னையிலிருந்து செய்ய வேண்டிய ஆயத்தங்களில் ஈடுபட்டார். அவரும் தூரனும் யாழ்ப்பாணத்து நண்பர்களுடன் கடிதப் போக்குவரத்து நடத்தி யோசனைகளைப் பரிமாறிக் கொண்டு, விழா ஏற்பாடுகளை இறுதி வடிவில் ஒழுங்குபடுத்தினார்கள்.

விழாவை நடத்துவதில் பொறுப்பேற்றவர்களில் சிலர் :

எஸ். நடேசன் — வரவேற்பு சபைத் தலைவர்; க. நவரத்தினம், ச. அம்பிகை பாகன்—செயலாளர்கள்.

முதலியார் செ. சின்னத்தம்பி; டாக்டர் சி. குருசாமி - பொருளாளர்கள்.

இராஜ அரியரத்தினம் - விளம்பரப் பொறுப்பாளர்.


லேடி ராமநாதனும் அவருடைய மகள் சிவகாமி சுந்தரியும் விருந்தோம்பல் பொறுப்பாளர்கள்.

ஏப்ரல் மாதம் 28ம் தேதி பரமேசுவரக் கல்லூரி மைதானத்தில் அமைந்த பந்தலில், கொடியேற்றத்துடன் தொடங்கிய தமிழ் விழாவில், இந்தியாவிலிருந்து கலந்து கொண்டவர்களின் தொகை ஐந்நூறுக்கும் மேல் இருக்கும். அவர்களில் விழாவில் பங்கு கொண்டோரில் சிலர்:

விழாத் தலைவர்: ''சுதேச மித்திரன்' ஆசிரியர் சி. ஆர். சீனிவாசன்.

திறப்பாளர்: டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்.

பேச்சாளர்கள்: பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரம், பேராசிரியர்



நடிகர்: **நான் நடிச்ச படம் சேர்ந்தாப் போல் மூன்று ஷோ பார்த்தீங்களாமே! ரொம்ப மகிழ்ச்சி!**

ரசிகர்: **ஆமாம்! முதல் ஷோவிலே தூங்கினவன், மூணாவது ஷோ வரைக்கும் எழுந்திருக்கவே இல்லே!** —உஷா விசுவநாத்

ரா. பி. சேதுப்பிள்ளை, டாக்டர் மு. வரதராசன், பேராசிரியர் அ. சீநிவாச ராகவன், ம. பொ. சிவஞானம், ராஜேசுவரி அம்மையார், டாக்டர் ராஜும் மான் தேவதாஸ்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் சிறந்த நூலாசிரியர்களுக்குப் பரிசளித்தவர்: அவிநாசிலிங்கம் செட்டியார்.

குளிக்கரைப் பிச்சையப்பா நாதஸ்வர இசையுடன் நடந்த தமிழ்ச் சுவடி ஊர்வலத்துடன் தொடங்கி, எம். எல். வஸந்தகுமாரியின் இசைக் கச்சேரியுடன் நிறைவு பெற்ற அந்த நாலு நாள் விழாவைப் பற்றி அதன் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அம்சத்தையும் பற்றி இங்கே விவரமாய் எழுதுவது சாத்தியமில்லை. அது பற்றிய விவரமான செய்திக் கட்டுரை ஒன்றை, தமது பத்திரிகையின் மே 13ம் தேதிய இதழிலிருந்து

தொடர்ச்சியாய் நாலு இதழ்களில் கல்கி எழுதினார். அதற்கு அவர் கொடுத்த தலைப்பு, ''தெய்வதரிசனம்''. அந்தத் தலைப்புக்கு அவர் கொடுத்த விளக்கம், அவருடைய தெய்வபக்திக்கும், தமிழ்ப் பக்திக்கும் ஒருங்கே அமைந்த ஓர் எடுத்துக்காட்டாகும்:

மூன்று தினங்கள் யாழ்ப்பாண நகரில் தெய்வத்தைக் கண்டேன்.... நான் கண்ட தெய்வம் தமிழ்த் தெய்வம்தான். பக்தி ஆவேசம் கொண்ட அறுபதினாயிரம் மக்களின் மத்தியில் தமிழ்த் தெய்வம் கொலு வீற்றிருக்கக் கண்டேன். அந்தக் காட்சியை நான் என்றும் மறக்க முடியாது...

''சமய கோடிகளெல்லாம் தன் தெய்வம் என் தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றதெது?'' என்று தாயுமானவர் என்னும் பெரியார் பாடியிருக்கிறார். அவர் எந்தத் தெய்வத்தைக் குறித்து இவ்விதம் கூறினார்? தமிழ்த் தெய்வத்தைப் பற்றித்தான் அவர் சொல்லியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. சொல்லியிருந்தால் மிகப் பொருத்தமாய் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆதிநாளிலிருந்து தமிழகத்தில் குடிபுகுந்த சமயங்கள் எல்லாம் தமிழ்த் தெய்வத்துக்குத் தங்கள் பாத காணிக்கையைச் செலுத்திப் போற்றியிருக்கின்றன. ''தன் தெய்வம் என் தெய்வம்'' என்று போட்டியும் 'இட்டிருக்கின்றன. சமயப் பிரசாரம் செய்ய இங்கு வந்த பெரியார்கள் பலர் விரைவிலேயே வந்த காரியத்தை மறந்து தமிழ்த் தெய்வத்தின் வழிபாட்டில் இறங்கி யிருக்கிறார்கள். முருகனைத் தெய்வமாகக் கொண்ட பழந் தமிழர்கள் தமிழ்த் தெய்வத்தைப் போற்றி மகிழ்ந்திருக்கிறார்கள். தமிழகத்தில் ஒரு சமயம் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்த சமணர்களும் புத்தர்களும் தமிழ்த் தெய்வத்துக்குப் பாமாலை பல சூட்டி மகிழ்ந்தார்கள். காவிய அணிகளினால் அலங்கரித்து இன்புற்றார்கள். சைவர்களும் வைணவர்களும் தத்தம் தெய்வங்களைப் பற்றிப் பாடியபோது தமிழ்த் தெய்வத்தையும் சேர்த்தே பாடினார்கள். பிற்காலத்தில் நம் நாட்டைத் தேடி வந்த முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் தமிழ்த் தெய்வத்தையே பணிந்தேத்திக் காவிய மாலைகள் புனைந்திருக்கிறார்கள். தமிழ் மொழியைத் தவிர வேறு எந்த மொழியேனும் இவ்வாறு பல்வேறு சமயத்தவர்களால் கொண்டாடப்பட்டிருக்கிறதா? சந்தேகம்தான். எனவே, தாயுமானவரின் அருள் வாக்கில் குறிப்பிட்ட தெய்வம் ஏன் தமிழ்த் தெய்வமாக இருக்கக் கூடாது?

விழா தொடங்கியதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னாலேயே கல்கியும், பெரியசாமித் தூரனும் யாழ்ப்பாணத்துக்குப் போய்விட்டார்கள், உள்ளூர்க்காரர்களுடன் சேர்ந்து விழாவை நடத்தி வைப்பதற்காக. அந்தப் பயணத்தில் தமது குமாரன் (தம்பி) ராஜேந்திரனையும் கல்கி கூட்டிச் சென்றிருந்தார். முன்போலவேதான் நடேசனின் இல்லத்தில் ஜாகை.

முந்திய விஜயத்தின்போது புகழ் மாலை சூடிய நாயகர்களாய் விளங்கிய நண்பர்கள் இருவரும் அப்போது பிறருக்கு அதைச் சூட்டும் தொண்டர்களாகப் பணி செய்தார்கள். அந்த விழா அரங்கில் மற்றவர்களுடன் டி. கே. சி. யையும் அமர்த்திக் கௌரவிக்க முடியாமற் போனது கல்கிக்கு ஒரு பெரிய குறையாய் இருந்தது; சோர்வுற்ற உடல்நிலை காரணமாய் அந்தக் குற்றாலத் தமிழ் முனிவர் யாழ்ப்பாணத்துக்கு வர இயலவில்லை.

சென்னைக்குத் திரும்பிய கல்கி தமது மனக் குறையை டி. கே. சி.க்கே ஒரு கடிதத்தில் தெரிவித்தார். கல்கியும் முன்போல ஓடியாடி உழைக்கும் நிலையில் இருக்கவில்லை என்பது, அதே கடிதத்திலிருந்து புலனாகிறது.

(சென்னை 9-5-51)... யாழ்ப்பாணம் பகுதி ஏறக்குறைய திருத்துறைப்பூண்டிப் பிரதேசம் மாதிரி இருக்கும். ஆகையால் என்னுடன் வந்திருந்த தம்பிக்கு அவ்விடம் சுவாரஸ்யம் ஒன்றுமில்லை. அதற்காக அவனைக் கண்டிக்கு அழைத்துப் போனேன். அற்புதமான இயற்கை வளம் பொருந்திய இடம். தம்பிக்குத் திருப்தியாயிற்று. இதற்குள் எனக்கு மிக்க களைப்பு ஏற்பட்டு விட்டது. பத்திரிகை வேலையையும் முன்னிட்டு நேரே சென்னைக்கு வர நேர்ந்தது.

தமிழ் விழாவின் வெற்றிக்காக ஐந்து நாட்களாய் உழைத்த உழைப்பில் ஓரேயடியாய்க் கல்கி களைத்துப் போனார். அதனால்தான் அந்த மரகதத் தீவில் இன்னும் சில இடங்களைத் தமது மகனுக்குக் காட்ட இயலாமற் போயிற்று. சென்னைக்குத் திரும்பிய பிறகாவது களைப்புத் தீர இளைப்பாற முடிந்ததா என்ன? வேலைக்கு மேல் வேலை. எல்லாவற்றுக்கும் மேலாக, மாபெரும் ''பொன்னியின் செல்வன்'' நாவலைத் தொடர்ந்து படைத்தளிக்கும் வேலை.

(தொடரும்)

ஈரான் நாட்டைச் சேர்ந்தவர், அப்பாஸ் ஹுஸ்கர். 160 வயது. தம் நீண்ட ஆயுளுக்கு இவர் காட்டும் காரணம்: நகைச்சுவை உணர்ச்சி. அவர் வாழ்நாளில் அவர் அடுத்தடுத்து மணந்துகொண்ட 36 மனைவிகளில் யாரும் தம்மை ஒரு விநாடிகூடச் சோகமாக இருக்கவிட்டதில்லை என்கிறார் இவர்.

— உமன்ஸ் ஈரா - ஆர். எம்.





மகளின் மகத்தான மங்கள மண நாளுக்கு முத்துக்குவியல்

உங்களது செல்வ மகளின் திருமணம் சிறப்பாக நடைபெறத் தேவையான பணம் சேமிக்கத் தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்கின் புதிய "முத்துக் குவியல் டெபாசிட் திட்டம்" உதவுகிறது.

ரூ. 1000/- மற்றும் ரூ. 1000/-த்தின் பெருக்குத் தொகைகளில் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. 5 ஆண்டுகளுக்கு மேல் 21 ஆண்டுகள் வரை டிபாசிட் செய்து, இத் திட்டத்தில் பயனடையலாம்.

இன்றே இத் திட்டத்தில் ரூ. 1000/- முதலீடு செய்யுங்கள். வரும் ஆண்டுகளில் அத்தொகை எப்படி வளர்ச்சி பெறுகிறது எனப் பாருங்கள்:

ஆண்டுகள்	திரும்பப் பெறும் தொகை	அதிகரிக்கும் அளவு
	ரூ.	
7	2,008/-	2 மடங்கிற்கு மேல்
14	4,034/-	4 மடங்கிற்கு மேல்
18	6,010/-	6 மடங்கிற்கு மேல்
21	8,105/-	8 மடங்கிற்கு மேல்

அன்புப் பெற்றோர்களுக்கு "முத்துக் குவியல் டிபாசிட் திட்டம்" ஒரு அரிய வாய்ப்பு.

தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட்.

(ஷெட்யூல்ட் பேங்க் ஸ்தாபிதம் 1921)

ரிஜிஸ்டர்ட் அலுவலகம்:
56, பீச் ரோடு, தூத்துக்குடி-628001

உங்களுக்குப் பணிபுரிய தமிழகத்தில் பல கிளைகள்

FP-TMB-103-#



10
ஒரு கோடி
கதை: கௌசிகன்
சித்திரம்: ம.செல்வன்




நீண்ட நேரத்துக்குப் பிறகு.
ம்..ம்..சாரு! குளிரில் உடல் விறைத்துப் போய் விட்டது. நிமோனியாஜுரம் வந்தாலும் வரலாம்.
பயப்படாதே சாரு. கொளுத்தும் வெய்யில் குளிரைப் போக்கி விடும். அந்தப் பயல் இனி இந்தப் பக்கம் வரமாட்டான்.
ஓசைப்படுத்தாமல், இடுப்பளவு நீரில், நாணல் புதர்களிடையே வெகு தூரம் சென்ற போது...
கடவுளே! என்ன அதிர்ஷ்டம்? மீன் பிடி படகு. சாரு! இதன் உதவியால் ஏரியின் மறுகரைக்குப் போய் விடலாம்.
மாதவன் இது, யாரோ ஒரு ஏழை மீனவனின் உடைமை. நாம் இதை அபகரித்துச் சென்று விட்டால் அவன் நிலை என்னவது?
அபகரித்துப் போகவில்லை சாரு. ஆபத்துக்குப் பயன் படுத்திக் கொண்டு ஏரியிலேயே விட்டு விடுவோம், வா.
கட்டுமரப் படகை நாணல் புதர்களிலிருந்து தள்ளி ஏறிக் கொண்டார்கள். வசமான காற்று வீசவே படகு வேகமாக மிதந்து சென்றது.
சாரு, இந்த ஏரி மிகப் பெரியது. நாம் கரைசேர்ந்ததுமே விரைவில் உன் தகப்பனார் இருக்கு இடம் போய் விடலாம் என்று நம்புகிறேன். நாம் சரியான வழியில்தான் தப்பி ஓடி வந்திருக்கிறோம்.
என் அப்பாவைக் காணத் துடிக்கிறேன் மாதவன். ஐயோ, ஆ... அது.. என்ன? புகை போல.
மாதவனின் முகம் பீதியால் வெளுத்தது.
சாரு! அது.. அது.. ஆந்தி, புழுதிப் புயல்! பெருங்காற்று வீசப் போகிறது. சீக்கிரம் பாய் மரத்தைக் கீழே இறக்கி யாக வேண்டும்.

தொடரும்

கழுகுக் கண் கிழவர்

அது மெய்தான்! எனக்கு உடம்பு சுகமில்லை, மிகவும் சுகமில்லை. ஆனால் நான் சுவாதீனம் இழந்து விட்டேன் என்று சொல்லாதீர்கள். முழு சித்தசுவாதீனத்துடன் நான் இருப்பதைக் காண முடியவில்லையா? எனக்குப் பைத்தியம் இல்லை என்று தெளிவாகத் தெரியவில்லையா? சுகக் குறைவினால் என் மனம், உணர்ச்சிகள், புலன்கள் எல்லாம் மெய்யாகிலுமே வலுவாகியுள்ளன, மிகவும் பலம் அடைந்துள்ளன. முன்பு நான் கேட்டே இராத ஒலிகளைக்கூடக் கேட்க முடியும். சுவர்க்கத்திலிருந்தும், நரகத்தில் இருந்தும்கூட நான் ஒலிகளைக் கேட்க முடிந்தது. கேளுங்கள்! என்ன நடந்தது என்று சொல்வேன்; கேளுங்கள். என் மனசில் கோளாறு ஒன்றுமில்லை என்று அறிவீர்கள்; கேட்டுத் தெரிந்து கொள்வீர்கள்.

அந்த எண்ணம் எனக்கு எப்படித் தோன்றிற்று என்று சொல்ல முடியாது. எனது செயலுக்குக் காரணம் ஏதும் இல்லை. கிழவரை நான் வெறுக்கவில்லை; மெய்யாகிலுமே நேசித்தேன். அவர் எனக்குத் தீங்கு ஏதும் செய்யவில்லை. அவர் பணம் எனக்கு வேண்டியதில்லை. அவர் கண்தான் காரணம் என்று எனக்குத் தோன்றுகிறது. அது ஒரு கழுகின் கண் போல் இருந்தது. ஒரு மிருகம் எப்படா சாகும் என்று காத்துக் கொண்டிருந்துவிட்டு, செத்துப் போனவுடன் பிணத்தின் மீது பாய்ந்து, கொத்திக் குதறித் தின்னும் பயங்கரமான பறவையின் கண். கிழவர் தன் கழுகுக் கண்ணால் என்னைப் பார்க்கும்போது, என் முதுகெலும்பில் ஒரு குளிர்ச்சி மேலும் கீழும் ஓடும். என் இரத்தம்கூட உறைந்து போகும். அந்தக் கழுகுக் கண்ணை ஒரேயடியாக மூடுவதற்காக, கிழவரைக் கொல்வது என்று முடிவு செய்தேன்! வேறு வழி?



-எட்கார் ஆலன்போ-

நான் பைத்தியம் என்று நினைக்கிறீர்கள்? பைத்தியக்காரனால் திட்டமிட்டுச் செயல் புரிய முடியுமா? நீங்கள் என்னைப் பார்த்திருக்க வேண்டும். அந்த வாரம் முழுதும் நான் கிழவரிடம் மிகவும் அன்பாக இருந்தேன்; பாசமும் பரிவும் காட்டினேன்.

தினமும் இரவு பன்னிரண்டு மணிக்கு நான் மெள்ள அவரது அறைக் கதவைத் திறப்பேன். கதவு திறந்ததும் முதலில் கையையும் பிறகு தலையையும் நுழைப்பேன். என் கையில் கறுப்புத் துணியால் மூடிய ஒரு விளக்கு வைத்திருப்பேன்; வெளிச்சம் வெளியில் தெரியாது. சத்தமில்லாமல் நிற்பேன். பின்பு, ஜாக்கிரதையாகத் துணியைக் கொஞ்சம் நீக்குவேன். அவரது கண்ணின் மேல்

ஒரு சிறிய ஒளிக் கற்றை மட்டும் விழும் வகையில் சற்றே துணியை விலக்குவேன். ஏழு நாட்கள் இப்படிச் செய்தேன் ; ஒரு நாளல்ல, இரண்டு நாட்களல்ல — ஏழு நாட்கள் ! தினமும் நள்ளிரவில்தான். அத்தனை நாட்களிலும் அவரது கண் மூடியிருந்தது. எனவே நான் ஒன்றும் செய்யவில்லை. நான் கிழவரையா கொல்ல விரும்பினேன்; அல்லவே ! கழுகுக் கண் — கெட்ட கண் — அதைத்தான் தீர்த்துக் கட்ட நினைத்தேன்.

தினமும் காலையில் அவரது அறைக்குச் சென்று, அன்புடன் அவர் இரவில் நன்கு தூங்கினாரா என்று கேட்டேன். தினமும் நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு அவர் தூங்கும்போது நான் அவரைப் பார்த்ததுண்டு என்று அவருக்குச் சற்றும் தெரியாது.

எட்டாம் நாள் நள்ளிரவு, கதவைத் திறக்கும் போது, நான் வழக்கத்தைவிட ஜாக்கிரதையாகச் செயல்பட்டேன். என் கையை நான் அசைப்பதைவிட வேகமாகக் கடிகாரத்தின் முட்கள் இயங்கின. என் சொந்த வலிமை பற்றி இதற்கு முன்பு ஒருநாளும் நான் இவ்வளவு அதிகமாக உணர்ந்ததில்லை. அன்று வெற்றி உறுதி என்று எனக்குப் பட்டது.

கிழவர் படுத்திருந்தார்; நான் வாசலில் நிற்க அவர் கண்டார்; அது கனவல்ல. திடீரென்று அவர் படுக்கையில் புரண்டார். நான் பயந்து போனேன் என்று நீங்கள் நினைக்க




லாம். இல்லை, இல்லவே இல்லை. அவர் அறையில் மண்டிக் கிடந்த இருள் மையிருட்டு. கதவைத் திறந்ததை அவர் பார்க்க முடியாதென எனக்குத் தெரியும். கதவை உள்புறம் தள்ளினேன்; மெல்லவும், மெதுவாகவும் தள்ளினேன். தலையை நுழைத்தேன்; மூடிய விளக்குடன் கையை நுழைத்தேன். கிழவர் திடீரென்று எழுந்து படுக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு, ''யார் அங்கே?'' என்று கத்தினார்.

நான் சற்றும் அசையாமல் நின்றேன். ஒருமணி நேரம் நான் அசையவேயில்லை. அவர் திரும்பப் படுத்த சத்தமும் கேட்கவில்லை. கிழம் காதைத் தீட்டிக் கொண்டு, படுக்கையில் உட்கார்ந்திருக்க வேண்டும். பின்பு ஒரு சத்தம் கேட்டது. பயத்தால் ஏற்பட்ட மெலிந்த சத்தம். அவரிடமிருந்து அது வந்தது. பயத்தினால் நடுங்கிக் கொண்டு படுக்கையில் அவர் உட்கார்ந்திருந்தார். என்னை அவர் பார்க்கவில்லை. ஆனால் நான் அங்கிருப்பது அவருக்குத் தெரியும்; அது எனக்கும் தெரியும். நான் அங்கு இருப்பது அவருக்குக் கேட்டிருக்காது. நான் இருப்பதை அவர் உணர்ந்தார். கிழவரின் முகத்தை என்னால் பார்க்க முடியவில்லை. கண்தான் தெரிந்தது ; கரு நீலக் கண் — தீய கண். என் உடலில் இரத்தம் பனிக்கட்டி போல் உறைந்துவிட்டது.

என் செவிப் புலன் ஒருபோதும் இல்லாத படி கூர்மையாகிவிட்டது என்று சொன்னேன்; இல்லையா ? ஒரு மெல்லிய ஓசை கேட்டது. சுவருக்கு மறுபுறம் உள்ள கடிகாரம் ஓடுகையில் கேட்கும் ஒலி போல. அது, கிழவரின் இருதயத் துடிப்பு. நான் ஓசையின்றி நிற்க முயன்றேன். ஆனால் ஒலி பெருகியது. ஒலி அதிகமாக ஆக, என் கோபம் வலுத்துக் கொண்டே வந்தது ; பொறுக்க முடியவில்லை. கோபமா, அது ? இல்லை; இன்னும் கடுமையான ஒன்று. அமைதியான இரவில், படுக்கை அறையின் இருள் மண்டிய அமைதியில் என் கோபம் அச்சமாக மாறியது. அவரது இருதயத் துடிப்பு இடி போலக் கேட்டது. வேறு யாரும் கேட்டிருப்பார்களா ? வேளை வந்துவிட்டது. அறைக்குள் ஓடினேன். ''தொலைந்து போ, செத்துப் போ'' என்று கூச்சலிட்டவாறு ஓடினேன். கிழவர் மேலே நான் விழுந்து, போர்வையால் அவர் தலையை மூடி இறுக அழுத்தியபோது, பயத்தால் கிழவர், 'ஓ' என்று கத்தினார். அவர் இருதயம் இன்னமும் அடித்துக் கொண்டிருந்தது. வெற்றி நெருங்கிவிட்டது என்பதால் நான் சிரித்துக் கொண்டேன். பல நிமிடங்கள் அவரது இருதயம் அடித்துக் கொண்டேயிருந்தது. கடைசியில், நின்றுவிட்டது. கிழவர் இறந்து போய்விட்டார். சத்தமே இல்லை. ஆம், அவர் செத்துவிட்டார். கல் போலச் செத்துப் போனார். அவரது கண் இனி மேல் எனக்குத் தொல்லை கொடுக்காது !

எனக்கா, பைத்தியம்? பிணத்தை யாரும் பார்க்க முடியாதபடி நான் என்னென்ன செய்

விடுதலை மணி!



தேசிய உணர்ச்சி ஊட்டும் சின்னம் இந்த விடுதலை மணி. பிலடெல்பியாவில் சுதந்திர கூடத்தில் தொங்கவிடப்பட்டுள்ளது. இந்த விடுதலை மணியே அமெரிக்காவின் சுதந்திரத்தை முழக்கிய மணி! பதின்மூன்று காலனிகளும் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றதை அறிவித்த ஒலி முழக்கம்! இந்த மணியில் விழுந்த விரிசல் அதனைப் பிறகு ஒலிக்க விடாமல் அடங்கச் செய்துவிட்டது!

மணி ஓய்ந்தால் என்ன; சுதந்திர உணர்ச்சி ஓயவில்லையே! அதுதானே முக்கியம்!

தேன் என்பதைப் பார்த்திருக்க வேண்டும். முதலில் தலையை வெட்டினேன். பின்பு கைகளையும் கால்களையும் துண்டித்தேன். தரையில் ஒரு துளி இரத்தம்கூட விழாமல் பார்த்துக் கொண்டேன். தரை பலகைகளால் ஆனது; மூன்றைப் பெயர்த்தெடுத்து, உடல் உறுப்புக்களை உள்ளே போட்டேன். மீண்டும் பலகைகளை மேலே வைத்துச் சரி செய்தேன். அவை நீக்கப்பட்டமை கண்ணுக்குத் தெரியாத விதத்தில் எல்லாம் செய்து முடித்தேன்.

எல்லாம் செய்து முடித்தபின்பு, யாரோ வாசலில் நிற்கும் சத்தம் கேட்டது. காலை நான்கு மணி இருக்கும்; இன்னமும் இருட்டாகவே இருந்தது. என்றாலும், கதவைத் திறப்பதற்காக நான் கீழே இறங்கிப் போனேன்; எனக்கொன்றும் பயமாக இருக்கவில்லை. வாசலில் மூன்று பேர் நின்றிருந்தார்கள். போலீஸ் அதிகாரிகள். கிழவர் போட்ட கூச்சல் பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர் காதில் விழுந்து, அவர் காவலர்களைக் கூப்பிட்டிருக்கிறார். விசாரணை நடத்தவும், வீட்டைச் சோதனையிடவும் மூவரும் வந்திருக்கிறார்கள்.

அவர்களை உள்ளே வருமாறு அழைத்தேன். நான்தான் கனவு கண்டு கூச்சல் போட்டதாகச் சொன்னேன். கிழவர் வெளியூர் போயிருக்கிறார்; ஒரு நண்பரைப் பார்க்க நாட்டுப்புறம் போயிருக்கிறார் என்று சொன்னேன். வீடு முழுதும் அவர்களை அழைத்துச் சென்று காட்டினேன். எல்லாவற்றையும் சோதனையிடுமாறும், நன்றாகச் சோதிக்குமாறும் கூறினேன். இறுதியில், கிழவரின் அறைக்கு அவர்களை அழைத்துச் சென்றேன். அமருமாறும் சற்று நேரம் பேசுமாறும் கூறினேன். அவர்களோடு ஏதோ விளையாடுவது போல.


நான் அமைதியாகப் பதற்றமின்றிச் செய்ததெல்லாம் கண்டு, என் கதையைப் போலீசார் நம்பிவிட்டார்கள். எனவே, நட்பு முறையில் என்னோடு அவர்கள் உட்கார்ந்து உரையாடினார்கள். எனினும் அவர்கள் போனால் நல்லது என்று விரைவில் நினைக்கலானேன். தலை வலித்தது; செவிகளில் ஏதோ விந்தையான ஒலி கேட்டது. நான் மேலும் மேலும் பேசினேன்; முன்னிலும் விரைவாகப் பேசலானேன். குரல் மேலும் தெளிவாக இருந்தது. அவர்கள் இன்னமும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

ஒலி என் காதுகளிலோ, தலைக்குள்ளோ கேட்கவில்லை எனத் திடீரென உணர்ந்தேன். அத்தருணத்தில் நான் முற்றிலும் வெளிறிப் போயிருந்திருக்க வேண்டும். நான் மேலும் வேகமாகவும் உரக்கவும் பேசலானேன். ஒலியும் பெருகிக் கொண்டே வந்தது. சுவருக்கு மறு புறம் உள்ள கடிகாரம் ஓடும் ஓசை போன்ற மெல்லிய ஒலி. எனக்கு நன்கு தெரிந்த ஒலி. மேலும் மேலும் ஒலி பெருகிக் கொண்டே போயிற்று. எழுந்து, விரைவாக அறையைச் சுற்றி நடந்தேன். பெரும் ஓசை எழுப்பும் வகையில் நாற்காலியைத் தரையில் இழுத்தேன். என் காதில் கேட்ட தாங்கொணா ஒலியை மறைப்பதற்காகத்தான் அவ்வாறு செய்தேன். நான் மேலும் உரத்த குரலில் பேசிக் கொண்டிருந்தேன். அவர்களும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்; சிரித்தனர். அவர்கள் காதில் அந்த ஒலி விழாமல் இருந்திருக்குமா?

அவர்களுக்குத் தெரிந்துவிட்டது என்பதை நான் சந்தேகமின்றிப் புரிந்து கொண்டேன். இல்லை! அவர்கள் காதில் விழுந்துவிட்டது. அவர்கள் என்னோடு விளையாடிக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் சிரித்ததனாலும், அந்த ஒலியினாலும் நான் படாத பாடு பட்டேன்; தாங்க முடியவில்லை. கோடையிடி போல் ஒலி கூடுதலாகி வந்தது! திடீரென்று இனி மேலும் என்னால் அதைத் தாங்க முடியாமல் போயிற்று. தரையில் உள்ள பலகைகளைக் காட்டியவாறு கத்தினேன்: "ஆம், நான்தான் அவரைக் கொன்றேன். பலகைகளை எடுங்கள்; நான்தான் கொன்றேன் என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் அவரது இருதயத் துடிப்பு ஏன் நிற்கவில்லை? ஏன் துடிப்பு ஒலி நிற்கவில்லை?" நான் கேட்டுக் கொண்டிருந்தேன்!



Creative Unit A 2197 Tam


படிப்படியாக உயர்ந்து
முன்னேற்றமடைந்த அவருக்குத் தெரியும்..



நாம் ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக் கொள் வோம்!'' ஜக்கி முறுவல் மறையாமலே கூறினான்.

அதற்கு மேல் அவன் வாயைக் கெடுப் பதற்கு முன்பாகவே, அநூப் தாவி அவன் காலரைப் பிடித்துக் கொண்டான். தன் பலம் கொண்ட மட்டும் அவனைத் தன் பக்கம் இழுத்துப் படுவேகமாகப் பின்னால் தள்ளி னான். மடேரென்று மல்லாந்து விழவே, அவனுக்குப் பொறி கலங்கினாற் போல் ஆகி விட்டது. வலி தாளாமல் முனகினாலும் உடனே சமாளித்துக் கொண்டு எழுந்து அநூப்பை நோக்கிப் பாய்ந்தான். ஆனால் சட்டென்று அநூப் ஒதுங்கி விடவே, ஜக்கி குப்புற விழுந்து மண்ணைக் கவ்வினான்.

இதே சமயத்தில் குழந்தைகளின் சிரிப் பொலி கேட்டது. லவனும் குசனும் மகிழ்ச்சி யில் தடதடவென்று கைதட்டிக் கொண் டிருந்தார்கள். ஜக்கி இரண்டு கைகளையும் ஊன்றி எழுந்திருக்க முயன்றான். ஆனால் எழுந்திருக்கத்தான் முடியவில்லை. அவன் பற்களிலிருந்து இரத்தம் வடிவதைக் கண்ட தும் குழந்தைகள் கதி கலங்கிப் போய் விட்டார்கள். ரூபாவின் கால்களைப் போய்க் கட்டிக் கொண்டார்கள். ரூபாவும் அந்த

தமிழாக்கம்
ரா. வீழிநாதன்





நான் அடிமையாக இருக்க விரும்ப மாட்டேன்; எஜமானனாகவும் இருக்க விரும்பேன். இது என் ஜனநாயகத் தத்துவத்தின் விளக்கம். இதிலிருந்து எவ்வளவு மாறுபட்டாலும் அந்த அளவில் ஏற்படும் விளைவுகள் ஜனநாயகமாகாது.

— ஆபிரகாம் லிங்கன்

நிலையில் ஜக்கியைக் கண்டு இடிந்து போய் நின்றான். ஜக்கி கோபத்தில் காரி உமிழ்ந்தான். புல்தரை இரத்தக் கறை படிந்து காட்சி தந்தது.

அநூப் நின்ற இடத்திலேயே நிலையாக நின்றான். ஜக்கி எழுந்து மீண்டும் வாலாட்டினால், அவனைப் பிய்த்துப் பிரியைக் கட்டி விடுவது என்று காத்திருந்தான். இருவருடைய விழிகளிலும் பகைமைத் தீயும் பழி வாங்கும் உணர்வும் படர்ந்திருப்பதைக்கண்ட ரூபா குழந்தைகள் இருவரையும் அழைத்துக் கொண்டு சொல்லாமல் கொள்ளாமல் அங்கிருந்து கம்பி நீட்டிவிட்டாள்.

அநூப் அடிமேல் அடி எடுத்து வைத்து ஜக்கியை நெருங்கினான். அவனைத் தரையிலிருந்து தூக்கிவிடக் கையை நீட்டினான். பழி வாங்கும் நோக்கத்தோடு பொங்கிச் சீறிக் கொண்டிருந்த ஜக்கி அவனோடு சமாதானக் கரம் நீட்டத் தயாராக இல்லை. அவன் தானே சிரமப்பட்டு எழுந்தான். நொண்டி நொண்டி நடந்தவாறே பார்க்கை விட்டு வெளியேறினான். ஆனால் போகும்பொழுது அநூப்பைக் கோபத்தோடு திரும்பிப் பார்த்துக்கொண்டே நடந்தான். இரத்தத் துளிகள் சொட்டிச் சொட்டிப் பசும்புல் தரையைக் கறை படியச் செய்து விட்டன.

ஜக்கி வீட்டுக்குச் சென்றதும் கடுகை மலையாக்கி விட்டான். காது கண் வைத்து இல்லாத பொல்லாத விஷயங்களைக் கூறிச் சுஷமாவிடம் அநூப்பைப்பற்றி வத்தி வைத்து விட்டான். அவன் குரலைக் கேட்டு ரூபா குழந்தைகளோடு உள்ளே வந்தாள். அவளால் சுஷமா கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சரியாகப் பதில் கூற முடியவில்லை.

''அவன் ரூபாவைச் சீண்டிக் கொண்டிருந்தான். நான் தடுக்கப் போனேன். இருவருக்கும் இடையே சண்டை இல்லை; காதல் நாடகம் நடக்கிறது என்று எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் நான் ஏன் இட்டே போகப் போகிறேன்?'' என்றான் ஜக்கி ஆத்திரத்தில் குமைந்து கொண்டு.

''ஜக்கி! என்ன உளறுகிறாய்?'' கோபத்தில் சுஷமா சீறினாள்.

''என்ன செய்வது? உளற வேண்டியிருக்கிறதே! பார்க்கிலே பலபேர் அறிய, அதுவும் குழந்தைகளுக்கு எதிரிலே, பகிரங்கமாக... இது நன்றாயிருக்கிறதா அத்தை?'' எத்தனை அழகாக விவரித்தான் ஜக்கி!

''இது பொய்!'' ரூபா நடுங்கும் குரலில் கூவினாள்.

''அப்பொழுது உண்மை என்ன? நீயே சொல்லேன்! எத்தனை நாட்களாக இந்தக் காதல் நாடகம்?'' என்று ஜக்கி நெருடினான்.

''ஷட் அப், ஜக்கி!'' சுஷமா ஜக்கியை அதட்டினாள். ''எனக்கு எதுவும் தெரிய வேண்டாம். நான் எதையும் கேட்கத் தயாராயில்லை. நீ போகலாம்!''

சுஷமாவின் கோபத்தைக் கண்ட ஜக்கி வாயைக் கொடுக்க விரும்பாமல் அங்கிருந்து வெளியேறி விட்டான்.

சுஷமா ரூபாவின் பக்கம் திரும்பினாள். வெட்கம் பிடுங்கித் தின்னத், தரையையே பார்த்துக்கொண்டிருந்தாள் ரூபா. அவளுக்கு எஜமானியின் விழிகளோடு தன் விழிகளை உறவாட விட அச்சமாக இருந்தது.

''ஏன் ரூபா! இது உண்மையா?'' சுஷமா தன் ஐயத்தைப் போக்கிக் கொள்ளக் கேட்டாள்.

ரூபா பதிலுக்குத் தலை அசைத்தாள், உண்மை என்பதற்கு அறிகுறியாக. ஆனால் சுஷமாவுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. உரத்த குரலில், ''என்ன சொல்கிறாய் நீ?'' என்று கேட்டாள்.

''என்றைக்காவது ஒரு நாள் தெரிய வேண்டிய விஷயம்தானே?''

''என்ன?''

''சிம்லாவில் அநூப் ஒரு பெண்ணைக் காதலித்ததாகச் சொன்னீர்களே, அந்தப் பெண் நான்தான்!'' ரூபா ஒரே மூச்சில் சொல்லி விட்டுச் சுஷமாவை ஏறிட்டுப் பார்த்தாள்.

அதைக் கேட்டதும் சுஷமாவுக்கு முகம் வெளிறி விட்டது. திடீரென்று தன் தலையில் யாரோ சுத்தி கொண்டு தாக்கி விட்டாற்போல் பொறி கலங்கிப் போனாள். கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. அவள் அப்படியே துவண்டு விழ விருந்தாள். அந்த நேரம் பார்த்து அழைப்பு மணி ஒலிக்கவே, இருவருமே திடுக்குற்றனர். சுஷமா ரூபாவைப் பார்த்தாள், அவள் கதவைத் திறக்கப் போவாளோ என்று! ஆனால் ரூபா அடி பெயர்த்து வைக்கவில்லை. வந்திருப்பது அநூப்பைத் தவிர வேறு யாரும் இராது என்று அவள் எண்ணியதே அதற்குக் காரணம்.


சுஷமா எப்படியோ தன்னைச் சமாளித்துக் கொண்டு கதவைத் திறக்கப் போனாள். கதவைத் திறந்தவளுக்கு எதிரே தபால்காரர் நின்று கொண்டிருந்தார்.

''உங்களுக்குத் தந்தி!'' என்றார் அவர்.

சுஷமா படபடப்போடு தந்தியை வாங்கிக் கொண்டு அவசரம் அவசரமாக உறையைக் கிழித்தாள். தந்தியைப் படித்தவளுடைய விழிகள் விரிந்தது. விரிந்தபடியே நிலைத்து விட்டன. அவள் மெதுவாக எப்படியோ தட்டுத் தடுமாறி நாற்காலியை அடைந்து அமர்ந்தாள். ரூபாவை வெறித்துப் பார்த்தாள்.

''யாருக்குத் தந்தி? என்ன தந்தி?'' என்று ரூபா பயந்தவாறே கேட்டாள்.

''உன் அம்மா...'' மேலே பேசத் தோன்றாமல் சுஷமா நிறுத்தி விட்டாள்.


அதிகாலையில்
ஸ்டேன்ஸ் காபி!
நாள் முழுவதும்
புத்துணர்ச்சி!!
ஒவ்வொரு கோப்பையிலும்
அதிக புத்துணர்ச்சி!
Stanes
தி யுனைடெட் காபி சப்ளை கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்

MAC(B) 1/76

மூல நோயை
முற்றவிடாமல்
நம்பிக்கையான
ஹெடன்ஸா
களிம்பு
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்;
—ரண
சிகிச்சையையும்
தடுங்கள்

1898
முதல் பிரசித்தி பெற்றது

பண்டிட் D. கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்

ஆரோக்கியத்திற்கும்
பலத்திற்கும்

ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிமிடெட் – சென்னை-17.

ஒவ்வொரு
ஜி.இ.ஸி.
ஆஸ்ரம் பல்பும்
20% அதிகமான
வோல்டேஜில் சோதனை
செய்யப்பட்டது



OBM—4494A/2/TAM

அருள்மிகு அண்ணாமலையார்
திருப்பணிக் குழு, திருவண்ணாமலை
வட ஆற்காடு மாவட்டம்

மகா கும்பாபிஷேகம்

அருள்திரு உண்ணாமுலை உடனுறை அண்ணாமலையார் திருப்பணி வேலைகள் பூர்த்தி செய்யப் பெற்று மகா கும்பாபிஷேகம் நாளது ராக்ஷச வருடம் பங்குனி மாதம் 22-ம் நாள் (4 4-1976) ஞாயிறு காலை 8-15 முதல் 9 மணி வரையில் ரிஷப லக்னத்தில் நடைபெறுகிறது. தமிழ் நாட்டில் இதுவரையில் நடைபெறாத முறையில் வெகு சிறப்பான முறையில் யாக குண்டங்கள் அமைக்கப்பெற்று 200 தேர்ச்சி பெற்ற சிவாச்சாரியர்கள் கலந்து கொள்ளுகிறார்கள். மகா கும்பாபிஷேகம் முடிந்து 5-4 76 முதல் 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். அபிஷேகத்தில் பங்குபெற விரும்புவோர் நாள் ஒன்றுக்கு ரூ. 250/- கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி தங்கள் பெயரைப் பதிவுசெய்து கொள்ளலாம்.

செயலாளர்

அருள்மிகு அண்ணாமலையார்
திருக்கோயில், திருப்பணிக்குழு
திருவண்ணாமலை, வ. ஆ.

டி. வி. சுப்பிரமணிய செட்டியார்
உப தலைவர், திருப்பணிக்குழு

ரூபா பாய்ந்து க்ஷமாவின் கையிலிருந்து தந்தியைப் பிடுங்கிக் கொண்டு படிக்கலானாள்.

தாயார் இறந்துவிட்ட செய்தியைப் படித்ததும் அவள் வாயிலிருந்து ஒரு பயங்கரமான கூக்குரல் வெளிப்பட்டது. "இருக்காது. இருக்காது!" என்று கதறிக் கொண்டே தன் அறையை நோக்கி ஓடினாள்.

சிறிது நேரத்துக்கு முன் அந்த வீட்டில் ஒரு புயல் அடிக்க இருந்தது. அது இந்தத் துயரச் செய்தியைக் கேட்டதும் இருந்த இடம் தெரியாமல் அடங்கிப் போய்விட்டது!

மாதா கோயில் மணி சிம்லாவின் மலைப் பகுதிகளைத் தாக்கி விடாமல் எதிரொலித்துக் கொண்டிருந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை. எப்பொழுதும் போல் சர்ச்சில் சர்வீஸ் நடந்து கொண்டிருந்தது. ஆனால் ரூபா சர்ச்சுக்குப் பதிலாகச் சிறிது தொலைவில் இடவாகக் கிடந்த நிர்மானுஷ்யமான இடுகாட்டில் நின்று கொண்டிருந்தாள்.

அவளோடு சிலர் கும்பலாக நின்று கொண்டிருந்தனர். ரோஸியின் சடலம் புதைக்கப் பட்டுக் கொண்டிருந்தது. அந்தக் கும்பலில் ஸிஸ்டர் தெரெஸா, மதர் கபீரியர், டாக்டர் பக்ஷி, சில நர்ஸ்கள், ரூபாவிடம் அனுதாபம் கொண்ட சில கல்லூரி மாணவிகள் ஆகியோர் இருந்தனர். எல்லோருமே ரூபாவின் திக்கற்ற நிலையைக் கண்டு வருந்தினர். அவள் பேசாமல் தாயாரின் சடலத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். இதுவே அவளைக் கடைசி முறையாகப் பார்ப்பது. சடலத்தின்மீது மண்ணைப் போட்டு மூடத் தொடங்கவே, அவள் திரும்பி நின்று கொண்டாள். அந்தத் துயரக் காட்சியை அவளால் காண முடியவில்லை.

அந்தக் கூட்டத்தில் அன்று ஜானும் நின்று கொண்டிருந்தான். போதையேறிச் சிவந்திருந்த அவனுடைய கண்களில் கூடக் கண்ணீர் கறை கட்டியிருந்தது. அன்று அவனை அங்கே பார்த்த பொழுது ரூபாவுக்கு அவனிடம் வெறுப்பு உண்டாகவில்லை. இருந்தாலும் அவனை அதிக நேரம் பார்க்கவும் தோன்றவில்லை. விழிகள் துயரத்தையும் தாபத்தையும் கண்ணீராகப் பெருக்க, அவள் தாயாரின் முகத்தை மீண்டும் பார்த்தாள். 'ஒரு நாளாகிலும் வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பதையே காணாதவள்! ஒரு பொழுதாகிலும் நிம்மதியாகத் தூங்கி அறியாதவள்! ஆனால் இன்று எத்தனை நிம்மதியாக உறங்குகிறாள்! முகத்தில்தான் எத்தனை அமைதி! இந்த மீளாத் துயரத்திலிருந்து கண் விழிக்கும்போது அவள் தன் மகளையே மறந்திருப்பாள்!'— இப்படி நினைத்துப் பார்த்தவளுக்குத் தன் கண்களில் பெருகி வந்த நீருக்கு அணை கோல முடியவில்லை. மாலை மாலையாகக் கண்ணீரைப் பெருக்கவே முடிந்தது!

வந்திருந்த மக்கள் ரோஸியின் கல்லறையில் மலர் மாலைகளும் வளையங்களும் சாத்தினர். ஸிஸ்டர் தெரெஸா பைபிளிலிருந்து சில சுலோகங்களைப் பிரார்த்தனையாகப் படிக்கலானாள். எல்லோருடைய உள்ளங்களும் அந்த நேரத்துக்கு ஆண்டவனில் நிலைத்தன. ரூபாவும் உலக வழக்குக்கு ஈடு கொடுத்துச் செயற்பட்டுக் கொண்டிருந்தாள் என்றாலும் அவளுக்குத் தன்னிடம் தன் ஆண்டவன் கோபித்துக் கொண்டு விட்டதாகத் தோன்றியது.

சிறுகச் சிறுகக் கூட்டம் குறையலாயிற்று. கல்லூரி மாணவிகளும் அனுதாபத்தைத் தெரிவித்து ஆறுதல் கூறிவிட்டு வெளியேறினர்.


ஸிஸ்டர் தெரெஸா ரூபாவை ஹாஸ்டலிலேயே தங்குமாறு கூறினாள். ஆனால் அவள் கேட்கவில்லை. பேசாமல் கூட்டத்தோடு கல்லறையிலிருந்து வெளியே வந்தாள். அவள் மனத்துள் எல்லோருக்கும் நன்றி கூறிக் கொண்டே இங்குமங்கும் பார்வையை ஓட்டினாள். அவள் பார்வை சென்றமட்டில் ஜான் தென்படவில்லை. மகளிடமிருந்து தாயாரைப் பறித்துக் கொண்டபின் அவள் கண்களில் படவே அவனுக்குத் துணிவு இல்லை போலும்!

ரூபா யாருடைய பேச்சையும் கேளாமல் தன் தாயார் வாழ்ந்து வந்த அந்தப் பழம் வீட்டுக்குத் திரும்பி வந்தாள். தெய்வமாகி விட்ட அவளது நினைவுகளை அரவணைத்துக் கொண்டு உறங்கவிரும்பினாளோ, என்னவோ?

வீட்டுக்கு வந்தவளுக்கு ஒரு வியப்பு காத்துக் கொண்டிருந்தது. போகும்பொழுது அவள் வீட்டைப் பூட்டிவிட்டுப் போனது என்னவோ பொய் இல்லை. அவள் தாயார் நோய்வாய்ப்பட்டதிலிருந்தே வீட்டில் பூட்டு தொங்கிக் கொண்டுதான் இருந்தது. ஆனால் இப்பொழுது வந்து பார்த்தால் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. அதைக் கண்ணுற்றவள் ஒரு கணம் திகைத்து நின்றாள். அரைக் கதவு திறந்திருப்பதைக் கண்டவள் தன் திகைப்பை உதறிவிட்டு விடுவிடென்று உள்ளே நுழைந்தாள். உள்ளிருந்து ஏதோ ஓசை வந்து கொண்டிருந்தது. யாரோ தரையைத் தோண்டுவது போலத் தோன்றியது. என்னென்னவோ நினைவுகளில் அவள் பயந்தே போனாள். தாயாரின் அறைக்குள் நுழையவும் துணிவு ஏற்படவில்லை. 'பக்கத்து வீட்டு ராம் அலியைக் கூப்பிட்டுக் கொண்டால் என்ன?' என்று எண்ணி வெளியே வந்தால், அவன் வீட்டைப் பூட்டிக் கொண்டு வேலைக்குப் போய்விட்டிருந்தான். கடைசியில் வருவது வரட்டும் என்று துணிந்து தாயாரின் அறைக் கதவை வேகமாக உதைத்துத் தள்ளினாள்.

அறைக்குள்ளே ஜான் உட்கார்ந்து அவள் தாயாரின் பெட்டியைத் தேட்டை போட்டுக் கொண்டிருந்தான். ரூபாவைக் கண்டதும் அவன் தாவி ஒரு மூலையில் பதுங்கிக் கொண்டான். ரூபாவை வெறித்துப் பார்க்கலானான். ரூபா முதலில் அவனைப் பார்த்தாள். பிறகு பெட்டியையும் பெட்டியிலிருந்து எடுத்தெறிந்து அறை முழுவதிலும் சிதறிக் கிடந்த பொருள்களையும் பார்த்தாள். அவளுடைய விழிகள் வியப்பால் விரிந்தனவேயொழிய விஷயம் என்னவென்று விளங்கவில்லை.

(தொடரும்)



அமெரிக்காவில் இப்பொழுது களிமண்ணைப் பாட்டிலில் அடைத்து விற்பனை செய்கிறார்கள். 'இது இங்கிலாந்து களிமண்', 'டெக்சாஸ் களிமண்' என்று மேலேயே ஒட்டியிருக்கிறார்கள். விலை சுமார் மூன்று டாலர்கள். முகத்துக்குப் பூசிக்கொண்டால் முகம் மிருதுவாகும் என்று அமெரிக்கப் பெண்கள் கருதுகிறார்கள்.

— பாபு

விஞ்ஞான விநோதங்கள்!



□ ''ஆப்டகான்'' என்ற கருவி குருடர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். சாதாரண செய்தித் தாள்கள், பத்திரிகைகள், நூல்கள், 'டைப்' (தட்டெழுத்து) செய்த கடிதங்கள், புட்டி, டப்பிகளில் ஒட்டப்பட்டிருக்கும் லேபிள்கள், செலாவணி நோட்டுக்களில் அச்சிடப்பட்டுள்ள தொகைகள் முதலியவற்றை இவர்கள் இந்தக்கருவியின் உதவியால் படிக்க முடியும். குருடர்களுக்குரிய 'பிரெயில்' அச்சு வேண்டியதில்லை. இக்கருவியை உருவாக்கியவர் கலிஃபோர்னியாவில் இருக்கும் ஸ்டான்ஃபோர்டு பல்கலைக் கழகத்துப் பேராசிரியர் ஜான் லின்வில். இவருக்கும் கண் பார்வையற்ற மகள் இருக்கிறாள். கறுப்பு அச்சு எழுத்துக்களை 'ஆப்டகான்' கருவி உணர்ந்து பொறி விசையாக மாற்றுகிறது. இதனைத் தொட்டு உணர்ந்து கொள்ள முடியும். படத்தில் ஓர் இளம் பெண் வலது கையில் இருக்கும் உணர் கருவியை எழுத்துக்கள் மீது ஓட விடுகிறாள். இடது கையில் தான் ஆப்டகான் கருவி இருக்கிறது. இதன் வழியாக எழுத்துக்களின் வடிவங்களை அந்தப் பெண் உணருகிறாள்.


□ டெலிபோனை அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் கண்டு பிடித்ததோடு கதை முடிந்துவிடவில்லை. நாளுக்கு நாள் அதில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. பெல் நிறுவனம் புது விதமான 'ஸ்விட்ச் முறை இயந்திரம்' கண்டு பிடித்திருக்கிறது. இதனால் ஒரு மணி நேரத்தில் 5,50,000 டெலிபோன் தொடர்புகளுக்கு வழி ஏற்படுத்த முடியும். பெல் நிறுவனம் வருஷத்துக்கு 750 மில்லியன் டாலர் ஆராய்ச்சிக்காகச் செலவழிக்கிறது. ஒரு நாளைக்கு இரு புதிய கண்டு பிடிப்புக்கள் பதிவு செய்யப் படுகின்றன.

□ அமெரிக்காவில் உருளைக் கிழங்கு பயிரிடும் விவசாயிகள் பயிரில் வியாதி தொத்தாமலிருக்க, குத்து மதிப்பாக மருந்து தெளித்து வந்தார்கள். ஆனால் சென்ற நான்கு வருஷங்களாகப் பல விவசாயிகள் இதற்குக் கம்ப்யூட்டர் உதவியை நாடுகிறார்கள். பென்சில்வேனியா சர்வகலாசாலையைச் சேர்ந்த வல்லுநர்கள் 'பூஞ்சாணம்' செடிகளில் பரவுவதை ஒரு வாரத்துக்கு முன்பே கம்ப்யூட்டர் வாயிலாகக் கண்டு பிடித்து விடுகிறார்கள். அந்தப் பயிர்ப் பிரதேசத்தின் மழை விவரம், சீதோஷ்ண நிலைமை, மண்ணின் தன்மை ஆகியவற்றைப் பூஞ்சாணம் உருவாவதற்கான நிலைமைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து அந்த நிலத்தில் கைக்கொள்ள வேண்டிய காப்பு முறையை 'கம்ப்யூட்டர்' சில நிமிஷங்களில் கூறிவிடுகிறது. இந்த வாரம் பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்க வேண்டுமா, வேண்டாமா என்று கம்ப்யூட்டர் தீர்மானித்து விடுகிறது. இதனால் பூச்சி கொல்லி மருந்துகளை வீணாக்காமல் அளவோடு பயன்படுத்த முடிகிறது.

□ ஒஹியோவைச் சேர்ந்த சின்சினாட்டியில் டாக்டர் லேலண்ட் கிளார்க் சுவாசிக்க இடம் தரும் திரவத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்! உயிருள்ள எலியை இந்தத் திரவத்தில் போட்டு மூடி வைத்தால் அது சுவாசித்துக் கொண்டு உயிருடன் இருக்கிறது! இத்திரவத்தில் பிராணவாயு நிறைய உண்டு. இந்தத் திரவத்தைக் கொண்டு நீர்மூழ்கிகள் நீண்ட நேரம் நீரில் அமிழ்ந்திருக்க முடியும். விண்வெளியில் செல்லும் வீரர்களுக்கும் இந்தத் திரவம் பெரிதும் பயன்படும் எதிர்காலத்தில்.

□ லேஸர் முறையைப் பயன்படுத்தி கம்ப்யூட்டர் ஞாபகப் பெட்டகத்தை மூன்றிலொரு பங்கு அதிகரிக்க முடியும். கொலம்பியில் உள்ள பாட்டல்லா நினைவுக் கழகத்தில் லேஸர் உதவியுடன் ஒரு சதுர அங்குலத்தில் 650 மில்லியன் தகவல்களை அடக்கி வைக்க முடியும் என்று கண்டிருக்கிறார்கள். நாஸா விண்வெளி ஸ்தாபனம் இந்த முறையில் கம்ப்யூட்டரின் நினைவுத் தரத்தை அதிகப்படுத்தி எதிர்கால விண்வெளிப் பயணங்களுக்குத் தயாராகிறது.





GORILLA.
''உங்களில் யார் என்னைப் பார்த்துக் குலைப்பது?''
×
'''ஹல்லோ, ஹல்லோ' என்று யாரோ சதா கூப்பிட்டுக் கொண்டிருப்பது போல் ஒரு பிரமை!''
''ஓ! இதுதான் என் அழகு என்றால் என்னைப் பூட்டி வைப்பதில் ஆச்சரியமில்லை!''
× × ×
''காண்டா மிருகம் அவர்களே! பயப்படாதீர்கள் — நான் சைவம்!''
''சொல்லி முடியாத தினவு! சற்றுச் சொறிந்து விடுகிறான்?''
''ரொம்ப நல்ல புத்தகம். இதில் லயித்துவிட்டால் அப்புறம் விடவே மனசு வராது!''

அமெரிக்க ஹாஸ்யங்கள்




''யாரோ உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பது போல் உனக்குத் தோணலே?''

× × ×

''நாங்க கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடறோம். இங்கே எங்கேயாவது குரங்கைப் பார்த்தீர்களா?''






''நீ போ. நான் இங்கே சற்று ஓய்வெடுத்துக் கொள்கிறேன்.''



''அவர் பணக்காரக் குரங்கார்! ஒவ்வொரு சனிக் கிழமை என்னைச் ஸ்நானத்துக்கும் கஜேந்திரனைக் கூலிக்கு அமர்த்திக் கொள்ளுகிறார்.''



''என்ன ஆச்சு உனக்கு? ஃபோட்டோவுக்குச் சிரிக்கப்படாதா?''



''அம்மா விழித்துக் கொண்டால் அப்பாவுக்குச் சொல்லி முடியாத கோபம் வரப் போகிறது!''

வெள்ளை மாளிகை விநோதங்கள்

"ரகு"

'வாஷிங்டன், பென்சில்வேனியா அவின்யூ, 1600 எண் உள்ள வீடு' என்று நீங்கள் விலாசம் எழுதினால், அதுதான் அமெரிக்க ஜனாதிபதியின் விலாசம். ஜார்ஜ் வாஷிங்டனைத் தவிர மற்ற எல்லா ஜனாதிபதிகளும் இந்த ஒயிட் ஹவுஸ் எனப்படும் வெள்ளை மாளிகையில் வசித்திருக்கிறார்கள்.

170 வயது ஆகிறது

ரொம்பப் பழங் காலத்தில் கட்டின கட்டடம்; இதற்குக் கிட்டத்தட்ட 170 வயதுக்கும் அதிகமாகி விட்டது. இந்தக் காலத்துச் சௌகரியங்களையெல்லாம் அமைக்க வேண்டுமானால் கட்டடம் முழுவதையுமே இடித்துப் புதிதாக 'பிளான்' போட்டு ஆரம்பத்திலிருந்து கட்டுமானம் செய்ய வேண்டும் — நடக்கிற காரியமா, அது? தவிர, இதை அமெரிக்கர்கள் புராதனச் சின்னமாகவும் கருதுகிறார்கள்.

''என்ன பிரமாத ஜனாதிபதி மாளிகை. பெயர்தான் பெத்த பேர். மிஸௌரியில் உள்ள எங்கள் வீடு இதைவிட எத்தனையோ மடங்கு மேல்!'' என்று ட்ரூமன் ஜனாதிபதியாக இருந்தபோது, இதிலே வசித்த அவருடைய மனைவி வாய்விட்டே சொல்லிவிட்டாள். கென்னடி மனைவி ஜாக்குலினுக்கும் இந்த மாளிகையிடம் ரொம்ப அதிருப்தி. அவள் இதை அடியோடு மாற்றியே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு ரொம்பப் பிரயத்தனம் தொடங்கினாள். ஆனாலும் அதன் புராதன உரு மாறவே இல்லை.

காப்டன் ஜேம்ஸ் ஹோபன் என்பவர்தான் இந்த வெள்ளை மாளிகைக்குப் 'பிளான்' தயாரித்தவர். இதற்காக அவரை அயர்லாந்துக்கு அனுப்பி, அங்கேயுள்ள சிறந்த கட்டடம் ஒன்றைப் பார்வையிட்டுவிட்டு வரச் சொன்னார்கள். அவருக்கு ஐந்நூறு டாலர் சன்மானம் கொடுத்தார்கள் — வெகு பெருமையாக. அதன் பிறகு, கட்டடம் கட்ட அமெரிக்க அரசாங்கத்திடம் பணம் இல்லை. ஊரில் உள்ள பெரிய வர்த்தகர்கள்கூடச் சர்க்காருக்குப் பணம் கடன் கொடுக்கத் தயங்கினார்கள். அமெரிக்கக் குடியரசு உதயமாகிக் கொண்டிருந்த பாலாரிஷ்ட காலமாயிற்றே!

பிரிட்டிஷார் வைத்த தீ

எப்படியோ பல நெருக்கடிகளுக்கு இடையில் கட்டடத்தைக் கட்டி முடித்தார்கள். பல வருஷ காலம் பெயரே இல்லாமல்தான் இது இருந்தது. அமெரிக்க சுதந்திரப் போர் நடந்த போது, பிரிட்டிஷ்சைன்யம் இந்த மாளிகைக்குத் தீ வைத்தது. அதனால் இதன் ஒரு பகுதி புகை படிந்தது. அந்த இடத்தை நேர் செய்து, வெள்ளை அடித்துப் பழைய பொலிவை ஏற்படுத்தினார்கள். பளிச்சென்று அது வெள்ளை வெளேர் என்று துலங்கியதால் அமெரிக்க மக்கள் அதை 'வெள்ளை மாளிகை' என்று குறிப்பிட ஆரம்பித்தார்கள். அதுவே நிலைத்து விட்டது.

வெள்ளை மாளிகையை அமெரிக்க மக்களின் சொந்தச் சொத்து என்றும் அதைப் பார்க்கவும், அதிலே நடைபெறும் எந்த விசேஷத்திலும் அவர்கள் கலந்து கொள்ளவும் உரிமை உண்டு என்றும் சொல்லப்பட்டதால், ஜாக்சனுடைய குடிபுகு விழாவுக்கு இருபதினாயிரம் பேர் விருந்தாளிகளாக வந்துவிட்டார்கள்.

மாளிகை எங்கும் கூட்டமான கூட்டம். கால் வைக்க இடமே இல்லாமல் ஜனம் நெரித்தது. அவர்கள் எல்லாரும் போன பிறகு, அவர்கள் போட்ட குப்பை கூளங்களை அள்ளி எறிந்து, மாளிகையை மனிதர் நடமாடும் இடமாக ஆக்கவே, சிப்பந்திகளுக்கு ஒரு வாரம் பிடித்தது.

வெள்ளை மாளிகை இன்றைய தினம் வீற்றிருக்கிறதே — வாஷிங்டன் என்று ஒரு பிரதேசம், அப்படி என்று ஒன்று ஆரம்பத்தில் இருக்கவே இல்லை. ஒரு தலைநகரம் ஏற்படுத்தி, அதிலே நாட்டின் அதிபருக்கு ஒரு வாசஸ்தலமும் ஏற்படுத்த வேண்டும் என்று யோசனை கிளம்பினதும், அண்டை ராஜ்யங்களான மேரிலாண்டும், வர்ஜினியாவும் தங்கள் பிரதேசங்களிலிருந்து கொஞ்சம் நிலம் கொடுத்து உதவின.


ஜனாதிபதியின் நாற்காலி

ஜனாதிபதி நாற்காலியிலே ஒரு விசேஷம் என்னவென்றால், அப்போது யார் ஜனாதிபதியாக இருக்கிறாரோ, அவருடைய பெயரும் ஒரு தகட்டில் பொறித்திருக்கும். ஜனாதிபதியாக இருக்கிறவர் பதவியைவிட்டுப் போகும்போது, தம் பெயர் பொறித்த அந்த நாற்காலியைத் தம் இல்லத்துக்கு எடுத்துச் செல்லலாம்.

இதுவரையில் முப்பத்தெட்டுப் பேர் பிரமாணம் பெற்றுக் கொண்டு இந்தப் பதவிக்குரிய நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார்கள். இவர்களிலும் பதின்மூன்று பேர்களுக்கு இரண்டு தடவை அமரும் பாக்கியம் கிடைத்தது. ஒரே ஓர் ஆசாமி நாலு பதவி காலம் ஜனாதிபதியாக இருந்தார்.

அப்புறம்தான் பிரசித்தி பெற்ற இருபத்திரண்டாவது சட்டத் திருத்தத்தை நிறைவேற்றி யாருமே இரண்டு தடவைகளுக்கு மேல் சேர்ந்தாற்போல் ஜனாதிபதியாக இருக்கக் கூடாது என்று கண்டிப்பு செய்தார்கள்.

ஜார்ஜ் வாஷிங்டன்



ஏக் – தின்கா – ஜனாதிபதி

போல்க் ஞாயிற்றுக்கிழமை நடுப் பகல் பதவியை ராஜிநாமா செய்தார். அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் டெய்லருக்குப் பதவி ஏற்க விருப்பம் இல்லை. ஞாயிற்றுக் கிழமை அமெரிக்கர்கள் யாவரும் வீட்டிலேயே தான் இருப்பார்கள். பதவி ஏற்பைக் காண வரமாட்டார்கள். தம் பதவி ஏற்பு வைபவம் பிரமாதமாக இருக்க வேண்டும் என்று டெய்லருக்கு ஆசை.

ஆகவே ஞாயிற்றுக்கிழமை பிற்பகலிலிருந்து திங்கட்கிழமை பிற்பகல் வரையில் ஒரு டெம்பரரி ஜனாதிபதி பதவி வகிக்க ஏற்பாடு செய்தார். மிஸௌரியைச் சேர்ந்த ஸெனட்டர் டேவிட் ஆர். அக்கிசன்தான் இப்படி ஏக்–தின்கா–ஜனாதிபதியாக இருப்பதிநாலு மணி நேரம் இருந்தவர்.

ஒரு நாள் முழுவதும் இரண்டு ஜனாதிபதிகள் இருந்த சம்பவமும் உண்டு. யூலிஸிஸ் எஸ். கிராண்ட்டின் பதவி முடிவு காலத்தில் அப்படி இரு ஜனாதிபதிகள் இருந்தார்கள்.

ருதர்போர்டு ஹேய்கும் சாமுவேல் டில்டனும் போட்டியிட்டபோது பாபுலர் வோட்டுகளை யெல்லாம் டில்டன் அடைந்தாலும் எலக்டோரல் காலேஜ் வோட்டுக்கள் ஹேய்க்கே கிடைத்தது. ரிபப்ளிகன் செனட்டும், டெமாக்ரெட் ஹவுசும் யார் உண்மையான மக்கள் பிரதிநிதி என்பதில் கருத்து வேறுபாடு கொண்டன. இதைத் தீர்மானிக்க ஒரு விசேஷக் கமிட்டியைப் போட்டார்கள்.

அவசரம் அவசரமாக ஆலோசனைகள் நடந்தன. ஆனாலும், சமரசம் ஏற்பட்டு முடியுமுன் வந்தது வரட்டும் என்று, வெள்ளை மாளிகையின் சிவப்பு அறையில், யாதொரு ஆடம்பரமும் இன்றி சனிக்கிழமை (மார்ச் 3ந் தேதி) ஹேய்ஸ் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டு விட்டார். பழைய ஜனாதிபதி கிராண்ட் அன்றே தமது அதிகாரங்களை அவருக்கு விட்டுக் கொடுத்தார். ஹேய்சும் கிராண்டும் அந்தச் சனிக்கிழமை பிற்பகலிலிருந்து ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வரையில் சம அதிகாரமுடைய ஜனாதிபதிகளாக இருந்தார்கள். ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கிராண்ட் ராஜிநாமா செய்தார். ஹேய்சு திங்கட்கிழமை எல்லாரும் அறிய மீண்டும் பதவிப் பிரமாணம் மேற்கொண்டார்.

நல்ல வேளையாக அதற்குள் டில்டன்–ஹேய்க பூசல் ஓய்ந்து ஹேய்க சார்பாகவே சமரசம் ஏற்பட்டு, அரசியல் அரங்கில் மேகங்கள் கலைந்துவிட்டன.

ஆடம்ஸின் கோபம்; ட்ரூமனின் வெறுப்பு!

ஆடம்ஸ் ஜனாதிபதியானது வாஷிங்டனை வெற்றி கொண்டுதான். ஆனாலும் தம்முடைய பதவி ஏற்பு வைபவத்துக்கு வாஷிங்டன் வந்து கலந்து கொண்டது ஆடம்ஸுக்குப் பிடிக்கவில்லை!

அமெரிக்க சுதந்திர யுத்தத்தை வெற்றிகரமாக நடத்தி, சுதந்திர அமெரிக்காவைச் சமைத்து மிகக் கீர்த்தி பெற்றவர் ஜார்ஜ் வாஷிங்டன்.



கென்னடி தம்பதி

அவர் இருக்கிற சபையிலே அவர்தான் ஜோதியாக இருப்பார். ஆடம்ஸின் பதவி ஏற்பு விழாவுக்கு வந்த வாஷிங்டன், அங்கேயும் முக்கியத்துவம் பெற்றது இயல்பானாலும், ஆடம்ஸ் தம் பெருமை எல்லாவற்றையுமே அவர் அபகரித்துக் கொண்டுவிட்டதாகக் கருதினார்.

அன்றைய தினம் ஆடம்ஸ் தம் மனைவிக்கு எழுதின கடிதத்தில் ஒரு புலம்பல் புலம்பியிருக்கிறார், பாருங்கள் – சொல்லிச் சாத்தியமில்லை.

நாலு வருஷங்கள் கழித்து ஆடம்ஸ் பொதுத் தேர்தலில் மீண்டும் போட்டியிட்டார். ஜெபர்ஸனால் ஆடம்ஸ் தோற்கடிக்கவும் பட்டார்.

இது அவருக்கு அளவிலாத் துயரத்தை அளித்தது. வாஷிங்டனைப் போல் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளாமல் ஆடம்ஸ், ஜபர்ஸன் பதவி ஏற்க வருகிற அன்று, நகரை விட்டே போய் விட்டார்.

ஆசை நிறைவேறியது!

கிளிவ்லெண்டின் மனைவி பிரான்ஸிக்கு வெள்ளை மாளிகையை விட்டுப் போகும்போது அழுகையே வந்து விட்டது. என்ன செய்வது? அவள் கணவர்தான் தேர்தலில் தோற்றுவிட்டாரே!


வெள்ளை மாளிகைச் சிப்பந்திகளையெல்லாம் கூப்பிட்டு, ''இதோ பாருங்கள், நான் எது எதை எப்படி எப்படி வைத்துவிட்டுப் போகிறேனோ அது அது அப்படி அப்படியே இருக்க வேண்டும். நாலு வருஷங்கள் கழித்து நான் வந்துவிடுவேனாக்கும்'' என்று சொல்லிவிட்டுத் தான் போனாள்.

அவள் கெட்டிக்காரி. சொன்னபடி செய்யவும் செய்தாள். ஆனால் நாலு வருஷங்கள் கழித்து அல்ல அதற்குக் கொஞ்ச காலத்துக்குப் பிறகு.

எந்த பெஞ்சமின் ஹாரிசன் தன்னை வீழ்த்தினாரோ, அதே பெஞ்சமினைத் தேர்தலில் தோற்கடித்துவிட்டு க்ரோவர் கிளிவ்லெண்ட் மீண்டும் ஜனாதிபதியானார்.

(அடுத்த இதழில் முடியும்)

இயற்கையோடு இணைந்த திரைப்படங்களுக்கு இயற்கையான வண்ணத்தை அளிக்கும் ஒரு பிலிம் தேவை



INDU®

இந்து என்றால் பிலிம்·
போட்டோ·சினி·எக்ஸ்ரே.

இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ்
மான்யுபாக்சரிங் கோ. லிமிடெட்
(இந்திய அரசின் ஒரு நிறுவனம்)
இந்து நகர், உதகமண்டலம் 643 005

அதனால்தான் தேசிய விருது பெற்ற ஷியாம் பெனகல் இந்துவைத் தேர்ந்தெடுக்கிறார்

"ஜூலி", "சுப்கே சுப்கே", "மிலி", "கேல் கேல் மே", "ரஜனி கந்தா"—இவையெல்லாவற்றையும் வண்ணத்தில் பார்த்திருப்பீர்கள். இவ்வண்ணப் பிலிம் இந்துவின் மற்றுமோர் தயாரிப்பு.

ஆம், இவர்களில் எந்தத் தயாரிப்பாளரை வேண்டுமானாலும் கேளுங்கள்: ஷியாம் பெனகல், ரிஷிகேஷ் முகர்ஜி, மிருணாள்சென் ...எச் பி எப்பில் தயாரிக்கப்பட்ட சினி கலர் பாஸிடிவ் சிறந்தது, சுலபமாகக் கிடைக்கின்றது என அவர்களே கூறுவார்கள்.

இயற்கையான வண்ணம், தெளிவான துல்லியமான படங்கள், உண்மையான வண்ண ஒளிப்பதிவு, சீரான தரம்—இவையே இந்துவின் புதிய வண்ணப் பிலிம் அளிக்கும் சிறப்பு அம்சங்கள்.

இந்துவினால் தயாரிக்கப்பட்ட 8,50,000 சதுர மீட்டர்களுக்கும் அதிகமான வண்ணப் பிலிமை உபயோகித்து பல வெள்ளி விழா வெற்றிப் படங்கள் வெளிவந்துள்ளன என்றால்—அது மிகையாகாது.

இத்துறையில் தன்னிறைவு பெற, தன்னிகரற்ற சேவையில் இந்து அளிப்பவை.

இந்து எக்ஸ்-ரே பிலிம். இந்து சினி பாஸிடிவ். இந்து சினி சவுண்ட் நெகடிவ். இந்து ரோல் பிலிம், இந்து போட்டோ கிராப்பிக் பேப்பர்கள். இந்து மீடியம் காண்டிராஸ்ட் கிராபிக் ஆர்ட்ஸ் பிலிம். இந்து டயா பாஸிடிவ். இந்து டாக்குமெண்ட் காபியிங் பேப்பர்.

INDU

SAA HPF 1934



அதிசயத்திலும் அதிசயம்!

அமெரிக்காவில் எத்தனையோ அதிசயங்கள். அவற்றுள் தலைசிறந்த பதினாலு அதிசயங்களைப் பற்றிய கட்டுரை இது. இயற்கை அதிசயங்கள் ஏழு; மனிதனால் விளைந்தவை ஏழு. முதலில் இயற்கை அதிசயங்கள்.

(1) அரிசோனாவில் உள்ள ''கிராண்ட் கன்யான்'' பள்ளத்தாக்கு. கொலராடோ நதி அரிப்பினால் உருவான மிகப் பெரிய விந்தை. வண்ணமிகு பள்ளத்தாக்கு 349 கிலோ மீட்டர் தூரம். 1.6 கிலோ மீட்டர் ஆழம். 6லிருந்து 29 கிலோ மீட்டர் அகலம். வண்ணப் பாறைகளின் அழகு கண்கொள்ளாக் காட்சி. இந்தக் கணவாயை நடந்து சென்றும் குதிரை ஏறியும், விசைப் படகில் அமர்ந்தும் காணலாம். பல்வகை வன மிருகங்களையும் தாவரவகைகளையும் கண்டுகளித்து மகிழலாம்.

(2) யெல்லோ ஸ்டோன் தேசிய பூங்கா: பனிச் சரிவுகள், அருவிகள், ஏரிகள் காட்சி தருகின்றன. வன விலங்குகளைக் காண வாய்ப்புண்டு. மூவாயிரத்துக்கு மேற்பட்ட வெந்நீர் ஊற்றுக்கள் உள்ளன.

(3) நயாகரா நீர்வீழ்ச்சி: கண்ணைக் கவரும் இயற்கை அற்புதம். நயாகரா நீர்வீழ்ச்சி மூன்று நீர்வீழ்ச்சிகளை உள்ளடக்கியது. இரண்டு அமெரிக்காவிலும் மூன்றாவது அமெரிக்க — கனடா எல்லையிலும் அமைந்துள்ளன. 26.6 மில்லியன் லிட்டர் நீர் ஒரு செகண்டுக்குப் பாய்கிறது. வருஷம் முழுதும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடம். புது மணம் புரியும் தம்பதிகளுக்குத் தேனிலவுக்கு இதை விட்டால் வேறு கதி கிடையாது என்னு மளவில் பிரசித்தி பெற்றது.

(4) அலாஸ்காவில் உள்ள மெக்கன்லி மலை. வடஅமெரிக்காவின் உயரமான மலைச்சிகரம்.

(5) உலகிலேயே மிக உயர்ந்த மரங்கள் கலிபோர்னியாவில் உள்ள ரெட் வுட்





மரங்கள். 90 மீட்டர் உயரமுள்ளவை. கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே உண்டான மரங்கள் பல.

(6) கொதித்து எழும் எரிமலைகள், ஹவாய் பகுதியின் அதிசயங்களில் ஒன்று. இன்றும் இந்த எரிமலைகள் தங்கள் சக்தியை வெளிப்படுத்துகின்றன. மௌன லோவா உலகின் மிகப் பெரிய எரிமலை. இதன் அடிவாரம் 5500. மீட்டர் வரை கடலில் புதைந்து கிடக்கிறது. கடல் மட்டத்துக்கு மேலே 4150 மீட்டர்வரை உயர்ந்து எட்டிப் பார்க்கிறது. இந்தப் பகுதியில் உள்ள தாவர வர்க்கங்கள் அபூர்வமானவை. உலகின் பிற பகுதிகளில் காணக் கிடைக்காதவை.

(7) விநோதமான தாவர வர்க்கங்களும் வன விலங்குகளும் படைத்த 'எவர் கிளேட்ஸ்' ஏழாவது இயற்கை அற்புதம். ப்ளோரிடாவில் உள்ள செவ்விந்தியர்கள் இதைப் 'புல் நதி' என்பார்கள். அரை மில்லியன் ஹெக்டர் பூமியைக் கொண்டது.

மனித சக்தியின் அதிசயங்கள் எனப் புகழ் பெறுபவை:


(1) கலிஃபோர்னியா விரிகுடாவில் உள்ள கோல்டன் கேட் பிரிட்ஜ். 1260 மீட்டர் நீளம் தொங்கும் பாலம். 1937ம் வருஷம் இந்தப் பாலம் நிர்மாணிக்கப்பட்டது. அலைகளுக்கு மேல் இந்தப் பாலம் கட்டுவதில் மிகவும் சிரமம் ஏற்பட்டது. பாலத்தின் நடுவில் 66 மீட்டர் உயரமுள்ள கப்பல் செல்வதற்குரிய இடைவெளி உள்ளது. இந்த இன்ஜினீயரிங் நுணுக்க வேலையைக் காணப் பல்லாயிரக் கணக்கான பயணிகள் சான்பிரான்ஸிஸ்கோவுக்கு வருகிறார்கள்.

(2) தென்டகோடாவில் ரஷ்மோர் மலையில் நான்கு அமெரிக்க ஜனாதிபதிகளுக்காக நினைவுச் சின்னம் அமைத்துள்ளது. ஜார்ஜ் வாஷிங்



டன், ஆப்பிரகாம் லிங்கன், தாமஸ் ஜெபர்ஸன், தியோடர் ரூஸ்வெல்ட் ஆகியோரின் முகங்கள் மலைச் சரிவில் செதுக்கப்பட்டுள்ளன. 18 மீட்டர் உயரமுள்ள முகங்கள். 96 கிலோமீட்டர் தூரத்திலிருந்தும் காணக் கூடிய அதிசயம். இந்த நினைவுச் சின்னம் அமைக்கப் பதின்மூன்று வருஷங்களாயின.

(3) டெக்ஸாஸில் உள்ள ஹூஸ்டன் 'அஸ்ட்ரோ டோம்' உலகிலுள்ள விளையாட்டு ஸ்டேடியங்களில் மிகப் பெரியது. 45,000 பேஸ்பால் விசிறிகள், 53000 கால் பந்தாட்டப் பிரியர்கள், 66,000 பாக்ஸிங் நேயர்கள் எல்லோரும் ஒரே சமயத்தில் அமர்ந்து விளையாட்டுக்களைக் காணலாம். 63000 பேர் அடங்கிய மகாநாடு கூட்டலாம். குளிர்பதன வசதி படைத்தது. அஸ்ட்ரோ டோமில் சிறிய சிறைச்சாலைகளும் உண்டு. ஆம்! வெறிபிடித்த விளையாட்டு விசிறிகளின் மோதல்களைக் கட்டுப்படுத்துவதற்கு!



(4) சுதந்திர தேவியின் சிலை நியூயார்க் நகரத்தின் துறைமுகப் பகுதியில் காட்சி தருகிறது. பிரஞ்சு மக்கள் அமெரிக்காவின் சுதந்திரத்தைப் போற்றி அளித்த பரிசு. பீடத்திலிருந்து விடுதலைச் சிலை 96 மீட்டர் உயரம். இந்தச் சிலை நிர்மாணிக்கப் பத்து வருஷங்கள் ஆயின. ஒவ்வொரு பகுதியையும் தனித் தனியாக உருவாக்கி இணைத்தனர்.

(5) அரிஸோனாவில் உள்ள ஹூவர் அணை மிகப் பிரும்மாண்டமான காங்க்ரீட் அணை. 218 அடி உயரம். இன்ஜினியரிங் நுணுக்க வேலைத் திறனுக்கு இந்த அணை ஓர் எடுத்துக்காட்டு. கொலராடோ நதியில் எழுந்துள்ள இந்த அணை 1935ம் ஆண்டில் முடிவு பெற்றது. பல்வகைப் பயனுள்ள இந்த ஹூவர் அணை அமெரிக்காவின் தென் மேற்குப் பகுதிக்குச் சக்தியும் வளமும் கொடுத்திருக்கிறது. இதன் நீர்த் தேக்கம் மீட் ஏரி என அழைக்கப்



படுகிறது. அமெரிக்காவில் மனிதரால் உருவாக்கப்பட்ட மிகப் பெரிய ஏரி இதுவே.

(6) பிளாரிடாவில் உள்ள வால்ட் டிஸ்னி உலகம் நானூறு மில்லியன் டாலரில் உருவான அதிசய உலகம். சிரித்து மகிழ, அதிசயித்து மூர்ச்சித்து விழ இங்கே பல இடங்கள் உண்டு. பொழுதுபோக்க இதைவிடச் சிறந்த இடம் உலகில் வேறெங்கும் கிடையாது.

(7) செயின்ட் லூயிஸ் வரவேற்பு வளைவு மேற்குப்புறத்துக்குத் தலைவாசல். 225 மீட்டர் உயரமுள்ள எவர்சில்வர் நினைவுச் சின்னம். ஆதி நாளில் அசாதாரண வீரத்துடன் புதிய குடியேற்றப் பகுதிகளை நாடி மேற்குப் புறம் சென்றவர்களின் நினைவாக எழுந்துள்ளது. இது அமெரிக்காவின் மிக உயரமான நினைவுச் சின்னம்.

—பி. எஸ். மணி



Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.

புதுப்புது வேலை நுணுக்கங்களை நெடு நாட்களாகப்பணியாற்றி முதிர்ந்த அனுபவம் பெற்ற பழைய தொழிலாளர்களிடமிருந்து அறிந்து கொள்வதென்பது தொழிற்துறையின் மரபாகும்.

ஆனால் நாங்களோ, தொழிலாளர்களுக்கென்று ஒருங்கிணைந்த வகுப்புப்பாடங்கள் மற்றும் வேலையோடிணைந்த பயிற்சி திட்டங்களின்மூலம் பல்வேறு தொழில் நுணுக்கங்களைப் பயிலுவித்து, அவர்களை மிகச்சிறந்த தொழிலாளர்களாக உருவாக்குகிறோம். எங்கள் வலிமை எஃகில் மட்டுமல்ல, எங்கள் தொழிலாளர்களிலும் உள்ளது.

ஆண்டுகள் பல உருண்டோடினும் நாங்கள் இளமை குன்றாது விளங்கும் காரணம் இதுவே ஆகும்.

எங்கள் வலிமை மேலும் வளர்ந்து கொண்டே இருக்கிறது..

எஃகினை யொத்த வலிமை



டாடா ஸ்டீல்

TIS 6931



Registered as a Newspaper in Ceylon
No. M. 4092